வெளியீடு 03-03-2000

Issued 03-03-2000

64

2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 13, 1999 - தொகுதி 82 - எண் 1

Thursday, 13th May, 1999—Volume 82 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

ive Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

[Price Rs. 3.00

V21, 31'N99

N99. 82-1

221.200

13–05–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xiii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* **மாண்புமிகு முதலமைச்சர் நான்காவது முறையாக முதலமைச்சராகி, நான்காவது ஆண்டு தொடக்கத்தையொட்டி பேரவைத் தலைவர் வாழ்த்து--** | 1 |
| *2.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-42 |
| *3.* **கவன ஈர்ப்பு--** | |
| கொடைக்கானல் ஒன்றியம் [illegible]க்காடு- பாச்சலூர் நெடுஞ்சாலை பழுது பட்டுள்ளதால் போக்குவரத்து பாதிப்பு | 43-45 |
| *4.* **அறிக்கை அளித்தல்--** | |
| • பொதுக் கணக்குக் குழு | 46 |


53-194—1

| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | 46-153 |
| (அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | |
| (ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை | |
| (இ) கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு | |
| (ஈ) கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | |
| (உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம் | |
| (ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள் | |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 46-47,50,52, 55,57,65, 126-142 |
| திரு. சி. ஞானசேகரன் | 47,52,55,58, 62,66-77, 140-143,146, 148-149,152 |
| திரு. ஏ. ராசேந்திரன் | 77-81 |
| திரு. ஜி. பழனிசாமி | 81-85 |
| திரு. அ.வ. அப்துல் நாசர் | 51-52,55,57, 61.64,85-89 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 60-61,89- 93,151 |
| திரு. டி. மணி | 49,61,65, 93-98,141, 144,151,153 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 98-109,134 |


22|2001




| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| *திரு. லா. சந்தானம் | 109-112 |
| திரு. ஐ. கணேசன் | 47,50,53,55- 56,58,62, 112-121,141, 143,144,146, 148,150,152 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 121-125 |
| 6. அறிவிப்புகள்-- | |
| (அ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு | 66 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.) | 154 |
| 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-- | |
| தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1999 | 154 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 155 |


D
V211,3'N99
N99.82.1

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

**6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

**7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

**8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

**10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

**11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

**12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



**13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

**14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

**.5. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

**.6. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**7. வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

**8. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. **செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. **கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு.

22. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. **கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. **மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru. Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru. Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru. Ko.Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. Minister for Agriculture .. The Hon. Thiru. Veerapandi S. Arumugam:
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. Minister for Public Works .. The Hon. Thiru. Duraimurugan:
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. Minister for Transport .. The Hon. Dr. K. Ponmudi:
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. Minister for Highways .. The Hon. Thiru. Pasumpon Tha. Kiruttinan:
Highways and Ports.

10. Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments .. The Hon. Dr. M. Thamizhkudimagan:
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. Minister for Food, Public Distribution System and Co-operation .. The Hon. Thiru. K. N. Nehru:
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. Minister for Milk .. The Hon. Thiru. K. Sundaram:
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. Minister for Labour .. The Hon. Thiru. A. Rahman Khan:
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. Minister for Law .. The Hon. Thiru. Aladi Aruna:
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. Minister for Handlooms .. The Hon. Thiru. N.K.K. Periasamy:
Handlooms, Textiles.

16. Minister for Backward Classes .. The Hon. Thiru. M.R.K. Panneerselvam:
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. Minister for Forest .. The Hon. Thiru. Pongalur N. Palanisamy:
Forest, Cinchona and Environmental Pollution Control.

18. Minister for Housing .. The Hon. Thiru. K. Pitchandi:
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. Minister for Rural Industries and Registration .. The Hon. Thiru. I. Periasamy:
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | | |
|---|---|---|
| 20. **Minister for Information, Publicity and Printing** | .. | **The Hon. Thiru. V. Mullaivendan:** Information and Publicity. Film Technology and Cinematography Act. Stationery and Printing and Government Press. |
| 21. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare. Beggars Home. Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru. Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare. Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru. N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | .. | **The Hon. Thiru. Andhiyur P. Selvarasu:** Khadi Board. Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
## முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர்பி.ஏ., |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 20. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 26. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 27. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29 திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | . | தலைமை நிருபர் |
| 30. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 31. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 33. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 36. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 37. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல். | .. | தலைமை நிருபர் |
| 38. திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 39. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ.,பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. அப்துல் லத்திப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. அய்யலுசாமி, திரு. வி. | .. | கோவில்பட்டி |
| 9. அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 19. ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |
| 20. ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சி. வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்
63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

| | | |
|---|---|---|
| 157. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 158. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 159. புரட்சிமணி, திரு. ச. | .. | மங்களூர் (செ.வ.) |
| 160. பூவேந்தன், திரு. த. | .. | பழனி (செ.வ.) |
| 161. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 162. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 163. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. | ஈரோடு |
| 164. பெரியசாமி, திரு. நா. | .. | பெருந்துறை |
| 165. பெருமாள், திரு. வி. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 166. பெர்னார்டு, திரு. இரா. | .. | குளச்சல் |
| 167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 168. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. | பல்லடம் |
| 170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 171. மகேந்திரன், திரு. இரா. | .. | நாட்ராம்பள்ளி |
| 172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. | .. | திருநாவலூர் |
| 173. மணி, டாக்டர் அ. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 174. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம் |
| 175. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 176. மணி, திரு. ஜி.கே. | .. | பெண்ணாகரம் |
| 177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |
| 178. மணிமாறன், திரு. இரா. | .. | திண்டுக்கல் |



| | | |
|---|---|---|
| 179. மணிவர்மா, திரு. க. | .. | தண்டராம்பட்டு |
| 180. மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 181. மதிவாணன், திரு. செ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 182. மனோகரன், திரு. கு. | .. | தர்மபுரி |
| 183. மாயவன், திரு. தி.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 184. மாரி அய்யா, திரு. பே. | .. | புதுக்கோட்டை |
| 185. மாரிமுத்து, திரு. அ. | .. | வானூர் (செ.வ.) |
| 186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். | .. | அரவக்குறிச்சி |
| 187. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. | பாளையங்கோட்டை |
| 188. முத்து, திரு. வி. | .. | சங்கரி (செ.வ.) |
| 189. முத்துராமலிங்கம், திரு. ம. | .. | திருமங்கலம் |
| 190. முபாரக், திரு. பா.மு. | .. | கூடலூர் |
| 191. முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 192. முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 193. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. | சோளிங்கர் |
| 194. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |
| 195. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 196. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 197. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. | பொங்கலூர் |
| 198. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 199. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 200. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 201. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | திருவட்டாறு |
| 235. வெற்றிடம் | .. | நத்தம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. கே.வி. வெங்கடபதி | .. | அரசு தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 30, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 மே 13, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க் கொளி."*

*நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.*

## 1. மாண்புமிகு முதலமைச்சர் நான்காவது முறையாக முதலமைச்சராகி, நான்காவது ஆண்டு தொடக்கத்தையொட்டி பேரவைத் தலைவர் வாழ்த்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகி, நான்காவது ஆண்டு இன்று தொடங்குகிறது. சட்டமன்ற உறுப்பினர் எல்லோர் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

[1999 மே 13

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 721, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**721—**

**சுகாதார நிலையம்**

***13816—திரு. ச. இராஜரெட்டி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், அக்கொண்டபள்ளி மற்றும் தளி ஒன்றியம், உரிகம் ஆகிய கிராமங்களில் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கெலமங்கலம் ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கேற்ப நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் அவ்வொன்றியத்தில் உள்ள அக்கொண்டபள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை. தளி ஒன்றியத்தில் உள்ள உரிகம் கிராமத்தில் ஏற்கெனவே துணைச் சுகாதார நிலையம் செயல்படுவதால் அங்கும் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பேதுமில்லை.

**Thiru S. Raja Reddy:** Hon'ble Speaker Sir, Urikam Panchayat is located in an interior area. There is no Health Centre. The nearest Health Centre is 20 Kms. away from the village. Transport facilities are insufficient. The public of the village deposited Rs.10,000 and donated 3 acres of land. Will the Hon'ble' Minister reconsider the decision to open a Health Centre there?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கொண்டபள்ளி கிராமம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின்



1999 மே 13]

மக்கள் தொகை 1,23,714. அங்கே ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அக்கொண்டபள்ளி கிராமத்தின் மக்கள் தொகை 1,582 ஆகும். இக்கிராமம் பைரமங்கலம் துணைச் சுகாதார நிலையம் உள்ள பகுதியையும், கெலமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையப் பகுதியையும் சார்ந்தது. அதுபோல உரிகம் கிராமம் தளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. அந்தத் தளி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,47,611 ஆகும். அங்கேயும் கக்கடாசம், தாதட்டப்பள்ளி, தளி மற்றும் அஞ்செட்டி ஆகிய இடங்களுக்கு 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. உரிகம் கிராமத்தின் மக்கள் தொகை 1,440 ஆகும். இக்கிராயத்தில் துணைச் சுகாதார நிலையம் ஏற்கெனவே உள்ளது. எனவே, தனியாக ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கக்கூடிய வாய்ப்பு இல்லை. துணைச் சுகாதார நிலையங்கள், 5,000 பேர் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதியிலும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. எனவே, இப்போதுள்ள நிதி நிலைமையில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களோ அல்லது துணைச் சுகாதார நிலையங்களோ தொடங்குவதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி ஒன்றியம், கெலமங்கலம் ஒன்றியம் ஆகிய பகுதிகள் தருமபுரி மாவட்டத்தில் வருகின்றன. தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். இந்தக் கிராமங்கள் மிகமிகப் பின்தங்கிய பகுதிகளாகும். தளி, கெலமங்கலம் போன்ற பகுதிகளில்— அக்கொண்டபள்ளி தளி ஒன்றியத்திலே இருக்கிறது. உரிகம் போன்ற கிராமங்களில் சாதாரணமாக நீங்கள் பின்பற்றுகிற மரபுகளை, விதிமுறைகளைச் சிறிதே தளர்த்த வேண்டும்—வாழ்கின்றவர்கள் மிகவும் ஏழை எளிய விவசாயப் பெருங்குடியைச் சேர்ந்த மக்கள்; அன்றாடம் கூலி வேலைக்குச் செல்கின்றவர்கள். அவற்றைக் கருத்தில்கொண்டு கருணை உள்ளம் கொண்ட டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் ஒரு துணைச் சுகாதார நிலையத்தையாவது—ஒன்றே ஒன்று— அக்கொண்டபள்ளி கிராமத்திற்கு அளிக்க அரசு முன்வருமா? அஃதன்னியில் அங்கே பணிபுரிகின்ற டாக்டர்கள், அங்கிருக்கின்ற மிகக் குறைந்த வசதிகளின் காரணமாக குறிப்பிட்ட நேரத்திலே அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்வது இல்லை. 10-00 மணிக்கு டாக்டர்கள் வருகிறார்கள். விவசாயத்தையே நம்பி இருக்கிற மக்கள், 8 மணிக்கெல்லாம் கூலி வேலைக்கு செல்கின்ற மக்கள்,

[1999 மே 13

சென்றுவிடுவார்கள். அதுவே ரொம்ப லேட், 7 மணிக்குக்கூட அந்த மக்கள் விவசாய வேலை நிமித்தம், கூலி வேலை நிமித்தம் செல்லக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதுபோன்ற மிகப் பின்தங்கிய கூலி விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த அந்தப் பகுதிகளிலாவது ஆரம்ப சுகாதார நிலையத்திலே பணிபுரிகின்ற அந்த டாக்டர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதாவது 8 மணிக்காவது அந்த சுகாதார நிலையங்களுக்கு பணிக்குச் செல்ல வேண்டுமென்று கருணை எண்ண அடிப்படையில் அரசு தனியாக ஓர் உத்தரவைப் பிறப்பிக்குமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கமே மிகவும் பின்தங்கிய, ஏழை எளியவர்களுக்காகத்தான் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கெலமங்கலம் ஒன்றியத்திலும், அதைப்போலவே தளி ஒன்றியத்திலும் வாழக்கூடிய மக்கள் ஏழைகளாக இருக்கக்கூடும். இருந்தாலும் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணைச் சுகாதார நிலையங்கள் ஆகியவை எல்லாம் மத்திய அரசாங்கத்தினுடைய நெறிமுறைகளுக்கு ஏற்பதான் தமிழகத்திலே செயல்பட்டு வருகின்றன. ஏறக்குறைய தமிழ்நாட்டிலே 1,409 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 8,000-க்கு மேற்பட்ட துணைச் சுகாதார நிலையங்களும் இப்போது செயல்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையிலே 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்றும் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றும் அரசு நிர்ணயித்து இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே புதிதாக எந்தத் துணைச் சுகாதார நிலையமும் தொடங்க முடியாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதிகளிலே விவசாயிகள், கூலி வேலையாட்கள் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே 8 மணிக்கு எல்லாம் டாக்டர் செல்ல முடியுமா என்ற கருத்தைச சொன்னார்கள். பொதுவாக, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே 9 மணிக்கு எல்லாம் டாக்டர்கள் இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டு, பல சுகாதார நிலையங்களிலே 9 மணிக்கு அவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வசதியைச் செய்து தருவதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளும்.



1999 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 722, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**722—**

**பகுதி நேர அடிப்படையில் அரசு மருத்துவர்களின் பணி**

***26053—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு துணைச் சுகாதார நிலையங்களில் (தாய்சேய் நல விடுதிகளில்) அரசு மருத்துவர்களைப் பகுதி நேர அடிப்படையில் (வாரத்தில் மூன்று நாட்கள்) பணிபுரிய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் 8682 துணைச் சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. ஆறு துணைச் சுகாதார நிலையங்களை உள்ளடக்கி ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவ அலுவலர் மருத்துவ சுகாதாரப் பணிகளை வரையறுக்கப்பட்ட முறையின்படி செய்து வருகின்றார். பிரதி வாரம் அவர் செய்ய வேண்டிய பணிகள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளன:

தினமும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் நோயாளிகளைப் பரிசோதித்து சிகிச்சை அளித்தல்;

பிரதி செவ்வாய்: களப் பணியாளர்களின் வார வேலைகளை ஆய்வு செய்தல்;

பிரதி புதன்: தடுப்பூசி நாள்-கிராமங்களுக்குச் சென்று தடுப்பூசிப் பணியை மேற்பார்வையிடுதல்;

பிரதி வியாழன்: வாழ்வொளித் திட்டம்-பள்ளிகளுக்குச் சென்று மாணவ-மாணவியர்கள் உடல் நலம் பரிசோதித்தல்;

திங்கள், வெள்ளி, சனி: தினம இரண்டு துணை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்ற முறையில் ஆறு துணைச் சுகாதார நிலையங்களுக்குச் சென்று நலப் பணிகள் மேற்கொள்ளுதல்.

ஞாயிறு: விடுமுறை.

[1999 மே 13

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் ஆட்சி பொறுப்பேற்று மூன்று ஆண்டுகாலம் ஆகிறது. நம்முடைய மருத்துவத் துறையை, சுகாதாரத் துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் இப்போது சுகாதாரத் துறை தூக்கி நிறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மக்கள் அந்த மருத்துவமனைகளில் பெறக்கூடிய மருந்து, மாத்திரைகளையெல்லாம் அச்சமின்றி வாங்கிச் சாப்பிடுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உள்ளபடியே இந்த அரசைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது நம்முடைய ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிகின்ற மருத்துவர்களுடைய பணி வரைமுறையை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பட்டியலிட்டார்கள். நீண்டநாள் சுகாதார நிலையங்களுககுச் சென்று மருத்துவர்கள் பணிபுரிகின்ற ஒரு சூழ்நிலையை இங்கே விளக்கினார்கள். இதுவரை அப்படியொன்றும் துணைச் சுகாதார நிலையங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து மருத்துவர்கள் வந்து பணியாற்றுவதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி இனிமேல் அறிவிப்பு வர இருக்கிறதா அல்லது நடைமுறையிலே இருக்கிறதா என்பதை விளக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இப்படிப்பட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டு திங்கள், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களிலும் இரண்டு துணைச் சுகாதார நிலையங்களுக்குச் சென்று அவர்கள் அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது எங்கேயாவது அப்படி வாரத்திற்கு மூன்று நாட்கள் அங்கேயிருக்கக்கூடிய மருத்துவர்கள் வரவில்லையென்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பாரேயானால் அங்கேயிருக்கக்கூடிய துணை இயக்குநர் மூலம் விசாரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அரசு மருத்துவமனையில் இரண்டு ஊர்திகள் இருந்தன. நீண்டகாலமாக ஒரு ஊர்தி கிடப்பிலே போடப்பட்டு அது பழுதடைந்து உள்ளது. தற்சமயம் ஒரு ஊர்தி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



1999 மே 13]

அதுவும் பழமையாக, ஓட்ட முடியாத condition-ல் இருக்கிறது. போன வாரம்கூட வேடசந்தூரில் இருந்து வந்தவர்கள் சத்திரப்பட்டி பக்கத்திலே விபத்துக்குள்ளாகி, அவர்கள் உடலையும், விபத்துக்குள்ளானவர்களையும் தூக்கி வருவதற்கு மிகச் சிரமப்பட்டு, 6 கிலோ மீட்டர் தூக்கி வருவதற்கு ஆறு ஆயிரம் ரூபாய் கேட்ட கொடுமைகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. அதைப் போக்குவதற்கு அரசு மருத்துவமனைக்கு ஊர்தியும், அதைப்போல உள்நோயாளிகள் இருக்கை 169-ம், ஆயிரக் கணக்கான வெளி நோயாளிகள் தினந்தோறும் வருகின்ற காரணத்தினால்....

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, ஆரம்ப சுகாதார நிலையம் பற்றியது. நீங்கள், உங்கள் கேள்வியை நிறுத்திக்கொள்ளுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேடசந்தூர் பகுதியிலே ஒரு ambulance van சரியாகச் செயல்படவில்லை, பழுதுபட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, கடந்த ஆண்டு ஏறக்குறைய 400 ஆம்புலன்ஸ் அரசாங்கத்தாலே வாங்கிக் கொடுக்கப்பட்டு, அவை 24 மணி நேரம் செயல்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், தாலுகா மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் ஒருசில இடங்களுக்காக ஏறக்குறைய 60 ஆம்புலன்ஸ் வாங்க வேண்டியிருக்கிறது. அதை இந்த ஆண்டு வாங்கி, எங்கே பழுதடைந்து இருக்கிறதோ அந்த இடத்திலே மாற்றி புதிதாகத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கெல்லாம் புதிய கட்டடங்களைக் கட்டித் தருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களை வரவேற்கின்றோம். ஆனால், துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக கட்டிவிட்டு, பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கின்ற துணை ஆரம்ப சுகாதார நிலையங்களை பழுது பார்த்து செப்பனிட்டுத் தருவதோடு, அங்கேயே தங்கி மக்களுக்குப் பணியாற்ற வேண்டிய

[1999 மே 13

விஎச்என். அங்கு தங்குவதில்லை. அவர்கள் நகர்ப்புறங்களில் தங்கிவிட்டு, அங்கேயிருந்து குறிப்பிட்ட நேரத்திற்கு செல்லாமல், கிராமப்புற மக்களுக்கு ஒழுங்கான முறையில் பணியாற்றுவதில்லை. அவர்கள் ஒழுங்காக பணியாற்றுவதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களே கட்டித் தரப்பட்டன. அதைப்போல 8,682 துணைச் சுகாதார நிலையங்களிலே பாதி துணைச் சுகாதார நிலையங்களுக்கு சரியான கட்டடங்கள் இல்லை. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு ஒவ்வோர் ஆண்டும் 200 துணைச் சுகாதார நிலையங்களைக் கட்டுவதற்கு அவர்கள் நிதியை ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, டேனிடா திட்டத்தின் மூலமாகவும் நாம் நிதியைப் பெற்று அந்தத் துணைச் சுகாதார நிலையங்களைப் புதிதாகக் கட்டிக் கொண்டு வருகிறோம். அங்கே கிராமச் செவிலியர்கள் தங்கிப் பணியாற்றுவது இல்லை என்று சொன்னார்கள். ஓர் உண்மையைச் சொல்ல வேண்டுமானால், மக்கள் நல்வாழ்வுத் துறையிலே மிகச் சிறப்பாகப் பணியாற்றக்கூடியவர்களே கிராமப்புறச் செவிலியர்கள்தான் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற மருத்துவர்களைவிட, மற்றச் செவிலியர்களைவிட கிராமச் செவிலியர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்று எங்களுடைய துறையைச் சேர்ந்த அத்தனை அதிகாரிகளும் நேரடியாகவும் பாராட்டி இருக்கிறார்கள்; மாநாடு போட்டும் பாராட்டி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருச்செங்கோடு தொகுதியிலே பால்ராஜபுரத்தில் புதிதாக நல்ல கட்டடம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டப்பட்டு இருக்கிறது. அந்த இடம் 3½ ஏக்கர் பரப்பு உள்ளது. அங்கே பணியாற்றுகின்ற செவிலியர்கள் தங்குவதற்காக ஒரு கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புவதோடு, திருச்செங்கோடு நகரம் கோட்டத் தலைமையிடமாக இருக்கிற காரணத்தினாலே, அங்கே விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்று அமைத்துக் கொடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.



1999 மே 13]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆரம்ப சுகாதார நிலையங்களை முழுமையாகக் கட்டி முடிக்கின்ற பணிகளிலே ஈடுபட்டு, 652 நிலையங்களிலே 600 கட்டி முடித்து இருக்கின்றோம். மீதமுள்ள 52 நிலையங்களையும் இந்த ஆண்டு நவம்பருக்குள்ளாகக் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குள்ளாக அங்கே செவிலியர்கள் தங்குவதற்கு ஒரு கட்டடம் கட்டித் தரப்படுமா என்று கேட்கின்றார்கள். செவிலியர்கள் தங்குவதற்கு என்று இப்போது புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு எந்தத் திட்டமும் இல்லை. அதைப்போலவே, இன்னொரு இடத்திலே ஒரு விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுமா என்று கேட்டார்கள். இந்த ஆண்டு அப்படிப்பட்ட பிரிவுகள் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை. நிதிநிலை அனுமதிக்குமானால் அடுத்த ஆண்டு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்சேய் நல விடுதிகளிலே செவிலியர்கள் தங்கி நல்ல முறையிலே செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருந்தார்கள். நாரமங்கலம் ஒன்றியத்தில் லச்சம்மா ஊரிலும், மேச்சேரி ஒன்றியத்தில் விருதாசம்பட்டியிலும் இருக்கின்ற தாய்சேய் நல விடுதிகளில் செவிலியர்கள் தங்குவதில்லை என்று பலமுறை அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுநாள் வரை செவிலியர்கள் அங்கு தங்கி பணியாற்றாத நிலைதான் இருக்கின்றது. அதற்கு தக்க நடவடிக்கை மேற்கொண்டு, அவர்கள் அங்கு தங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கேயெல்லாம் தாய்சேய் நல விடுதிகளுக்குக் கட்டடங்கள் இருக்கின்றனவோ, அந்த இடத்தில் தங்கி அவர்கள் பணியாற்றுகிறார்கள். இன்னும் ஏறக்குறைய 4,000 இடங்களிலே அவர்கள் தங்கிப் பணியாற்றுவதற்கான கட்டட வசதிகள் இல்லை. அதை இப்போது படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, அந்தக் கிராமத்தில் தங்கி இருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய

[1999 மே 13

விதி. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, அந்தக் கிராமத்திலே அவர்கள் தங்கவில்லையானால், தங்குவதற்கான அறிவுரைகள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதியிலுள்ள முடீஸ் என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதற்காக கடந்த ஆண்டு 12 இலட்ச ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் அங்கேயிருக்கிற B.B.T.C. Estate நிருவாகம் இடம் கொடுக்க மறுத்த காரணத்தினால், அங்கே கட்டடம் கட்ட இயலவில்லை. அதற்குப் பின்னாலே எங்களுடைய மாவட்டத்துச் செயலாளர், வனத் துறை அமைச்சர் அவர்கள், அந்த estate நிருவாகத்திடம் நேரடியாகப் பேசி, இடம் வழங்குவதற்கு ஒப்புதல் வாங்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு அந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 52 இடங்களிலே கட்டடம் கட்டுவதற்கான பணி தாமதம் ஆவதற்கே காரணம் இடம் கிடைக்காததுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது வனத் துறை அமைச்சர் மூலமாக இடம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே, அந்தக் கட்டடம் கட்டுவதற்கான பணத்தைப் பொதுப் பணித் துறை அமைச்சரிடம், நாங்கள் கொடுத்திருக்கிறோம். அவர் அந்த இடத்தை ஒப்படைத்தவுடன், நிச்சயமாகத் தலைமைப் பொறியாளருக்குச் சொல்லி, உடனடியாக அந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் பல்வேறு பகுதிகளில் அபிவிருத்தி அடைகின்றபோது, சில பகுதிகளிலே அடிப்படை வசதிகளான, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர், மின்சாரம் இல்லாமல் பற்றாக்குறை குறிப்பாக, தூத்தூர், இடைக்கோடு, பத்தையம்வெளி என்ற பகுதிகளில் செயல்பட்டு வருகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கிறது.



1999 மே 13]

இதைப் போக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி கட்டாயம் செய்து தரப்பட வேண்டும் என்று ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே அவை இல்லையென்று சொன்னால் அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும். தனியார் தொழில் அதிபர்களிடத்திலேகூட, ஏறக்குறைய 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஒப்படைத்து, அவர்கள் மிகச் சிறந்த முறையிலே அவற்றைப் பேணிக் காத்து வருகிறார்கள். அவர்களுடைய நிறுவனங்களுக்கு விளம்பரம் கிடைக்கிறது என்ற அடிப்படையில், India Cements, Ramco Cements, Chettinad Cements போன்ற நிறுவனங்களும், அதைப்போல Titan Watches போன்ற நிறுவனமும், இன்னும் இங்கே இருக்கக்கூடிய Hyundai Car நிறுவனமும் இதுபோன்ற பல தொழில் அதிபர்களும் இப்படிப்பட்ட மருத்துவமனைகளைத் தத்தெடுத்து, மிகச் சிறந்த முறையில் தனியார் மருத்துவமனைகளைப் போல அவற்றை அவர்கள் கவனித்து வருகிறார்கள். அதைப் போலவே, இப்போது சில தனியார் மருத்துவமனைகளும், குறிப்பாக, இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி, பூந்தமல்லியிலே இருக்கக்கூடிய ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தத்தெடுத்து, அவர்களும் அந்த மருத்துவமனையை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். அரசாங்கம் குடி தண்ணீர் வசதியும் செய்து தரும். மின் வசதியும் செய்து தரும். இயலாத இடத்திலே, தனியாரிடத்திலே இப்படிப்பட்ட சுகாதார நிலையங்களை ஒப்படைத்து தனியார் தொழில் அதிபர்கள் இவற்றைச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி நகரம் மாவட்டத்தினுடைய தலைநகரமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அங்கே மருத்துவமனையில் மிகவும் மோசமான நிலையில் இருக்கக்கூடிய ambulance வண்டியை மாற்றித் தரவேண்டும், சின்னமனூர் நகராட்சிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்களில் இருந்து வரக்கூடிய மக்கள் எல்லாம் சின்னமனூர் நகராட்சியிலே இருக்கக்கூடிய பொது

மருத்துவமனையிலேதான் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, புதிதாக வாங்கப்படுகின்ற 60 ambulance வண்டிகளிலிருந்து, இந்த இரண்டு நகராட்சிகளுக்கும், ambulance அளிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம் புதிதாக அறிவிக்கப்பட்ட மாவட்டம். தேனி மாவட்டத் தலைமை மருத்துவமனைக்குக் கூடுதலாகக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றுகூட ஏற்கெனவே இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நான் தேனி நகரத்திற்கு வந்திருந்தபோது அதுபற்றி விசாரித்தபோது, இன்னும் 100 படுக்கைகள் கூடுதலாக இருந்தால்தான் அந்த மாவட்டத்தினுடைய பிரச்சினையைச் சமாளிக்க முடியும் என்று அங்கே இருக்கக்கூடிய இணை ஆணையர் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிபபடையிலே இந்த ஆண்டு புதிய கட்டடம் கட்டி, படுக்கை வசதிகளை அதிகரிக்கவும், அந்த மாவட்டத்திற்குத் தேவையான ambulance வாகனங்களை வழங்கவும் ஏற்கெனவே உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

முற்பகல் 9-50

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கும், அதேபோல, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய துறையிலே இருக்கிற மின்சார வாரியத்தின் மூலம் 110 கே.வி. மின்நிலையம் அமைப்பதற்கும் இடமே கிடைக்கவில்லை. அந்த இடம் நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சருடைய துறையிலே இருக்கிறது. வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் வனத் துறை அமைச்சரிடமும், தனியாரிடத்திலும் பேசி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடம் வாங்கித் தந்ததாகச் சொன்னார்கள். ஆகவே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வனத் துறை அமைச்சரிடத்தில் பேசி, 110 கே.வி. மின்நிலையம் அமைப்பதற்கான இடமும், அதேபோல ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடமும் கிடைக்க ஏற்பாடு செய்து மக்களுக்கு உதவுவார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை அமைச்சரை மக்கள் நல்வாழ்வுத்



துறை அமைச்சர் என்ற முறையில் சட்டமன்றம் நடைபெறுகின்ற நேரத்திலேதான் அடிக்கடி சந்திக்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. முபாரக் அவர்கள் 365 நாட்களிலே 360 நாட்களாவது அவரோடு இருந்துகொண்டே இருக்கின்றார்கள். எனவே, நான் சொல்லி வனத் துறை அமைச்சர் நிலத்தை ஒதுக்குவதைவிட, மாண்புமிகு உறுப்பினர் கேட்டாலே உடனடியாக அவர் இடத்தை ஒதுக்கித்தரக்கூடும். இருந்தாலும், நானும் அவரிடத்திலே பேசி, இடத்தை ஒதுக்கித் தரக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தாலுகா, பெரியார் மருத்துவமனையில் எலும்பு முறிவு டாக்டர் இல்லாத நிலை சில காலமாக இருந்து வருகின்றது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டபொழுது, இன்னும் 2, 3 மாதங்களில் உடனடியாக எலும்பு முறிவு டாக்டரை தருவதாகச் சொல்லியிருந்தார்கள். ஆனால் இதுவரை அந்த டாக்டர் அங்கே நியமனம் செய்யப்படவில்லை. எலும்பு முறிந்தவர்கள் கிராமங்களிலே வசதியில்லாத ஏழைகளாக இருப்பதால், உடனடியாக எலும்பு முறிவு டாக்டரை நியமித்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல மயிலாடுதுறைக்கு M.S. (ortho) படித்த எலும்பு முறிவு டாக்டரைப் போட வேண்டுமென்று நானும் தேடிப் பார்க்கின்றேன். அந்த மருத்துவமனைக்கு வருகின்ற M.S. (ortho) படித்த டாக்டர்களெல்லாம் தஞ்சாவூர் மருத்துவமனைக்குப் போவதற்குத்தான் முயற்சிக்கிறார்களே தவிர, இப்படிப்பட்ட மருத்துவமனைகளுக்கு வருவதற்குத் தயங்குகின்றார்கள். ஏனென்றால், அங்கே மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் போகின்ற நேரத்தில், பாடம் சொல்லிக் கொடுக்கின்ற வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கிறது. அந்த அனுபவம் கிடைத்தால் அவர்களுக்கு நன்றாக இருக்கிறது என்று சொல்லி, பெரும்பாலும் M.S. (ortho) படித்தவர்கள் அப்படிப்பட்ட இடங்களையே தேடுகிறார்கள். மேலும் M.S. (ortho) படித்தவர்களின் எண்ணிக்கையும் நாட்டிலே பொதுவாகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், எல்லா

[1999 மே 13

மருத்துவமனைகளுக்கும் அவர்களை நியமிக்க முடியவில்லை. எதிர்காலத்தில் எங்கேயாவது நல்ல M.S. (ortho) படித்த டாக்டர்கள் இருக்கிறார்களா என்று தேடிப் பிடித்து நிச்சயமாக மயிலாடுதுறைக்கு நியமிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 723, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**723—**

**மிளகாய் ஆராய்ச்சி நிலையம்**

***23114—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, ஆலங்குளம், வி.கே. புதூர் வட்டங்களில் விளையும் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க மிளகாய் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி, ஆலங்குளம், வி.கே. புதூர் வட்டங்களில் ஏராளமான எக்டேர் நிலப்பரப்பில் மிளகாய்ச் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. அங்கே விளையக்கூடிய மிளகாய் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக அங்கே மிளகாய் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தவும், அங்கே விளைகின்ற மிளகாயைப் பாதுகாத்து வைக்கக்கூடிய வகையில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 மே 13]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம், தென்காசி, வி.கே. புதூர் வட்டங்களில் 1161 எக்டேர் பரப்பில் மிளகாய்ச் சாகுபடி செய்யப்பட்டு, 1252 டன்கள் உற்பத்தியாகின்றது. மிளகாய் பற்றிய ஆராய்ச்சி கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இப்பொழுது நடைபெற்று வருகிறது. இதைத் தவிர, கோவை, மதுரை, பாலூர், பரமக்குடி மற்றும் பெரியகுளம் ஆகிய இடங்களிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களிலும் பல ஆராய்ச்சித் திட்டங்கள் மிளகாய் பற்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே இந்த நிலையில் அவர் சொன்னதைப் போல, தனி ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று துறை கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 724, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

முற்பகல் 9-55

**724—**

**உர ஆய்வுக் கூடங்கள்**

***24895—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உரங்களில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா என்பதைத் கண்டறிய உதவும் ஆய்வுக் கூடங்கள் ஒவ்வொரு வட்டங்களிலும் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாலுகா அளவில் உரப் பரிசோதனை நிலையங்கள் நிறுவும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விவசாயிகள் அத்தியாவசியமாக, அவசியமாக உபயோகிக்க வேண்டிய உரங்களில், கலப்புரங்களில் கலப்படம் செய்து,

[1999 மே 13

குறிப்பாக புதிதாக கலப்புரங்கள் தயாரிக்கக்கூடிய நிறுவனங்களும், புதிதாக வியாபாரம் செய்யக்கூடிய கடைகளும் விலை குறைவாக, அதுவும் கடனாகக் கொடுக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் ஏமாற்றப்படக்கூடிய சூழ்நிலை எதிர்காலத்திலே வாராமல் தடுக்கக்கூடிய அளவிலேயும், அதேபோல வேப்பம் பிண்ணாக்கில் புளியங்கொட்டையை அரைத்து அதிலே கலப்படம் செய்யக்கூடிய சூழ்நிலையை தடுக்கவும் வட்ட அளவிலே இந்த ஆய்வு மையங்களை அமைக்க முடியாவிட்டாலும்கூட மாவட்ட அளவிலேயாவது அமைத்துக் கொடுத்து எதிர்காலத்தில் விவசாயிகள் ஏமாறாமல் இருக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்திய அளவிலே மொத்தம் 61 உர ஆய்வகங்கள்தான் உள்ளன. இதில் தமிழ்நாட்டில்தான் 14 அங்கீகரிக்கப்பட்ட உர ஆய்வகங்கள் இருக்கின்றன. பிற மாநிலங்களில் 1 முதல் 5 வரைதான் உர ஆய்வகங்கள் இருக்கின்றன. 1998-99 ஆம் ஆண்டில் பரிசோதனை எடுக்க வேண்டி அரசு நிர்ணயித்த குறியீடு 17,220 உர மாதிரிகள். இதில் சாதனையாக 18,620 உர மாதிரிகள் எடுக்கப்பட்டு 17,376 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 1032 உர மாதிரிகள் தரமற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் துறையின் மூலம் 608 இனங்களிலும், அத்தியாவசிய பொருள் நீதிமன்றத்தின் மூலம் 137 இனங்களிலும், துறையின் மாநில, மாவட்ட அலுவலர்களால் வெவ்வேறு நிலைகளில் 287 இனங்களிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது தமிழகத்தில் 14 உர ஆய்வகங்கள் கோயம்புத்தூர், மதுரை, காஞ்சிபுரம், திருச்சி, பரமக்குடி, கோவில்பட்டி, திண்டுக்கல், விழுப்புரம், சேலம், தருமபுரி, திருவாரூர், கும்பகோணம், நாகர்கோயில், உதகமண்டலம் ஆகிய இடங்களில் இருக்கின்றன. இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் உர ஆய்வகங்கள் அதிகமாக இருந்து இந்தப் பரிசோதனை மிகச் சிறப்பான முறையில் செய்யப்பட்டு வருகின்றது. தனியாக ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒன்று என்று அமைப்பதற்கு தற்போது நிதி வசதி இடம் தராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 725, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



1999 மே 13]

**725—**

## முறைப் பாசனம்

***12676—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி பிரதான வாய்க்கால்-பெரிய அக்ரகாரம் கிளை வாய்க்கால்-தண்ணீர் பந்தல் பாளையம் உப கிளை வாய்க்கால் பாசன பூமியில் 469.19 ஏக்கரை முதல் முறைப் பாசனத்திற்கு மாற்றக் கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாற்றம் செய்வது ஏற்புடையதாக இல்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை எழுப்பியதற்குப் பிறகு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, வேளாண்மைத் துறை ஆகிய மூன்றையும் இணைத்து அங்கே உள்ள பாசன விஷயம் குறித்து ஆய்வு செய்வதற்காக உயர்நிலைக் குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவின் நடவடிக்கைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை அங்கே வைத்துத் தீர்வு ஏற்படுத்திக்கொள்கிறோம். நன்றி.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது அங்கே தூர் வாருவதற்கு வேண்டிய பணிகளுக்கே தவிர உங்களுடைய குழுவிற்கு அல்ல. அது சர்க்காருடைய முடிவு; அதை நீங்கள் கையில் எடுத்துக்கொள்ள முடியாது. இந்த ஆட்சியில் எந்தெந்த இடத்தில் தூர் வாரவேண்டும் என்பது பொதுப்பணித் துறையின் கையில் இருக்கிறது. பாசன முறையிலே என்ன மாறுதல் செய்யலாம் என்பதற்கு ஆலோசனை கூறுவதற்கு மட்டும்தான் அந்தக் குழு

[1999 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 726, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

முற்பகல் 10-00

**726—**

**மணல் தூர்வாரும் பணி**

***16885—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையின் கொள்ளளவு குறைந்து போவதைத் தடுக்க மணல் தூர் வாரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வைகை அணையில் தூர் வாரும் திட்டம் எதுவும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையின் உட்புறத்தில் 6 அடி முதல் 10 அடி வரை மணல், சேறு சேர்ந்த பகுதி உயர்ந்து நிற்கிறது. அதனால், வைகை அணையின் கொள்ளளவு 72 அடியாக இருந்தாலும்கூட, தற்போதைய கொள்ளளவு குறைவுதான். பெரியார் அணைப் பகுதியில் திடீரென்று நல்ல மழை பெய்கின்ற காலகட்டத்தில் அங்கே தேக்கி வைக்க அனுமதிக்கப்பட்டிருக்கின்ற 136 அடிக்கு மேலே தண்ணீர் வருகின்றபோது நாம் தண்ணீரைக் கீழே வைகை அணைக்குக் கொண்டு வந்துதான் தேக்கி வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நாம் தண்ணீரைத் தேக்குகின்றபோது, அங்கே 6 அடி முதல் 10 அடி வரை மணல் தேங்கி நிற்கின்ற காரணத்தினால், 72 அடி உயரம் என்ற உண்மையான கொள்ளளவுக்கு தண்ணீரைத் தேக்கி வைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை



1999 மே 13]

செய்து, வைகை அணையின் உண்மையான கொள்ளளவான 72 அடி அளவிற்குத் தண்ணீரைத் தேக்குவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நான் பலமுறை இந்த மாமன்றத்திலே தெரிவித்து இருக்கிறேன். அணைகளிலே தூர் வாருவது என்பது, இதுவரை நீரியல் துறை அறியாத ஒரு technique. மற்ற மாநிலங்களில் அல்லது உலகத்தில் வேறு எங்காவது வாரியிருக்கிறார்களா என்றால் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், வைகை அணையினுடைய உயரம் 72 அடி என்று. இப்படிப்பட்ட சேறும், சகதியும் சேரும் என்று முன்கூட்டியே அனுமானித்துதான் தண்ணீர் 72 அடி உயரத்திற்கு நிற்கின்ற வகையில் கீழே அதற்கு வேண்டிய அளவிற்கு பள்ளம் தோண்டியிருக்கிறார்கள். எனவே, புதிதாக அங்கே தூர் எடுக்க முடியாது இது ஒன்று. இரண்டாவது, தூர் வாருவதற்கு பலமுறை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டபிறகு, நான் அதற்குரிய நிபுணர்களுடன் கலந்தாலோசித்தேன். பொதுப்பணித் துறைக்கென்று நியமிக்கப்பட்டிருக்கின்ற ஆலோசனைக் குழு இஸ்ரேல் நாட்டினுடைய தக்கால் கம்பெனியுடன் நான் பேசினேன். ஆனால், பெரும்பகுதியான இந்த மண்ணை வாரி எங்கே கொட்டுவது என்பது மிகப்பெரிய பிரச்சினை. இது இரண்டாவது பிரச்சினை. மூன்றாவது, இந்த வைகையைப் பொறுத்தவரையில், திண்டுக்கல்லுக்கும், மதுரைக்கும் வருடம் முழுவதும் குடிநீருக்காகத் தண்ணீர் தந்துகொண்டிருக்க வேண்டும். எனவே, இந்தக் காரணத்தினால் தூர் வார முடியாத நிலைமை இருக்கிறது. இருந்தாலும், ஒன்றை நான் தெரிவிக்கிறேன். அப்போதைக்கப்போது சேருகின்ற தண்ணீர், மணல் போக்கியின் மூலமாக வெளியே போய்விடுகின்ற காரணத்தினாலும், 72 அடிக்குக் குறையாமல் தண்ணீர் இதுவரை நிற்கிறது என்றுதான் பொதுப்பணித் துறை கணக்கிட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 727, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1999 மே 13

**727—**

## இரவு நேரப் பேருந்து இயக்குதல்

***4788—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், காட்பாடியிலிருந்து பாகாயத்திற்கும், சத்துவாச்சாரிக்கும் இரவு நேரத்தில் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்பாடி-பாகாயம் தடத்தில் இரவு 22-55 மணி வரையும், ஆற்காட்டிலிருந்து வேலூருக்கு 22-15 மணி வரையும் நகரத் தடம் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், வேலூர் - ஆற்காடு தடத்தில் இரவு 22-10 மணி வரை இயக்கப்பட்டு வருகிறது. பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 40 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரைதான் உள்ளது. மேலும், ஆற்காடு-வேலூர், வேலூர்-ஆற்காடு சத்துவாச்சாரி வழியாக மாவட்ட வழித்தடங்கள் இரவு முழுவதும் இயக்கப்பட்டு வருகின்றன. இரவு நேரங்களில் தனியாக ஒரு பேருந்து இயக்கும் அளவிற்குப் போக்குவரத்து நெரிசல் இல்லை என்று சென்ற ஏப்ரல் 1998-லே இந்தப் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மார்ச் மாதத்திலேயிருந்து ஒரு இரவு நேரப் பேருந்தை இயக்குவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த இரவு நேரப் பேருந்திலே ஒரு நாளைக்கு 520 ரூபாய்தான் வருமானம் வந்து கொண்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நெடு நாளைக்கு முன்னால் போட்ட கேள்வி இது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், நானும் சென்று காட்பாடியிலேயிருந்து வேலூருக்கும், சத்துவாச்சாரிக்கும் இரவு நேரப் பேருந்தை இயக்கி இருக்கிறோம். நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது போகப்போக நிச்சயமாக அடர்வு ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 728, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**728—**

## சிறுமலைக்குப் பேருந்து வசதி

***17212—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதி, சிறுமலை மலைக்கிராமத்திற்குப் போதிய அளவு பேருந்து வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி, சிறுமலை கிராமத்திற்குத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல் மற்றும் தனியார் பேருந்துகள் மூலமாக 32 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. 25-9-1998 முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சிறுமலை வரை இயக்கிய 8 தனி நடைகளை அகஸ்தியாபுரம் வரை நீட்டித்து இயக்கிக் கொண்டிருக்கிறது.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமலை மலைக்கிராமம்; திண்டுக்கல் நகரத்திலேயிருந்து 28, 30 கிலோமீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய ஒரு கிராமம். சிறுமலையைச் சுற்றி ஏகப்பட்ட சிறுசிறு கிராமங்கள் அதிகமாக இருக்கின்றன. தனியார் பேருந்துகளை இயக்கினாலும், அரசுப் பேருந்துகளை இயக்கினாலும் எப்போது பார்த்தாலும் கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சில நேரங்களிலே பேருந்துகளின் மேல் பக்கத்திலே அமர்ந்து வரக்கூடிய நிலைகூட இருக்கிறது. இதனால், விபத்துகள் ஏற்பட்டுவிடுமோ என்ற ஒரு அச்சம் இருக்கிறது. எனவே, மேலும் அதிக நடைகளை ஏற்படுத்தித் தருவதன் மூலமாக—அல்லது சிறுமலைப்பகுதிக்கு அப்பாலுள்ள தென்மலை, தென்குறிச்சி வரை கூடுதலாக நான்கு நடை ஏற்பாடு செய்யப்படுமானால்—கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்கும், விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்கும் வசதியாக இருக்கும். எனவே, அமைச்சர் அவர்கள் இதனைச் செய்வதற்கு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

[1999 மே 13

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலைக்கேற்ப வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 729, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**729—**

**பயணியர் மாளிகை**

***11166—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கத்திலுள்ள நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த பழுதடைந்துள்ள பயணியர் விடுதியை இடித்துப் புதியதாகப் பயணியர் மாளிகை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பயணியர் விடுதியை இடித்து புதிதாகக் கட்ட சுமார் ரூ.35.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியினை, அரசு நிதி நெருக்கடி காரணமாக, அண்மைக்காலத்தில் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் இருக்கின்ற அந்தப் பயணியர்கள் விடுதி மிகவும் சீர்கெட்டு பழமை வாய்ந்ததாகப் பாழ்பட்டுக் கிடக்கின்ற ஒரு பங்களாவைப் போல இருக்கிறது. அங்கே பயணிகள் வந்து தங்குவதற்கு சரியான நல்ல சூழ்நிலைகள் இல்லை. பக்கத்தில் பேருந்துகள் செல்வதனால் அந்தச் சத்தம் பயணிகளை உறங்க விடுவதும் இல்லை. எனவே அந்த இடத்தை மாற்றி வேறு ஒரு இடத்தில் நல்ல முறையில் பயணியர் விடுதியைக் கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1999 மே 13]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1964-ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தப் பயணியர் விடுதியை கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் சரியாகப் பராமரிக்காத காரணத்தினால் பழுதடைந்து போய்விட்டது. இப்போது அதை முழுமையாக இடித்துவிட்டுத்தான் கட்ட வேண்டும். அதற்கு 35 இலட்ச ரூபாய் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய இடத்தில், புதிய பயணியர் விடுதி கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாலைகள், பாலங்கள் இவைகளுக்குத்தான் முன்னுரிமை அளிக்கிறார்கள். ஆகவே, முக்கியமாக சாலைகளும், பாலங்களும் போடக்கூடிய இந்தக் காலகட்டத்தில் பயணியர் விடுதியைக் கட்டுவதற்கு வருங்காலத்தில் யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 730, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**730—**

**புறநகர் வழிச்சாலைக்கு நிலம்**

***14238—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஷ்மீர்-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை எண் 7-லிருந்து திருநெல்வேலி-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை எண் 7-ஏ வழியாக தாழையூத்திலிருந்து பாளையங்கோட்டைப் பொறியியல் கல்லூரி அருகில் சேரும் புறநகர் வழிச்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்போது தொடங்கும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம், பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1987 ஆம் ஆண்டு ஒரு புறவழிச்சாலை அமைக்க வேண்டும் என்பதற்காக தேசிய நெடுஞ்சாலைத் துறையினர் தச்சநல்லூரிலிருந்து

[1999 மே 13

தற்போது போடப்பட்டிருக்கிற புறவழிச்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். மாநில அரசு இந்தப் புறவழிச்சாலைக்கு அந்த நிலத்தை வேண்டியதன் காரணமாக அதற்கு இணையாகத் தாழையூத்து-தூத்துக்குடி சாலையை cross செய்து பொறியியல் கல்லூரி வரை உள்ள பகுதிக்கு புறவழிச்சாலை அமைக்கிற பணிக்காக நில ஆர்ஜிதம் செய்யச் சொல்லி கிட்டத்தட்ட 5, 6 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆகவே, அங்கே விரைவாக அந்த நிலத்தைக் கையகப்படுத்தி புறவழிச்சாலை அமைத்துத் தருவீர்களா என்று கேட்பதோடு, அதேபோன்று திருநெல்வேலி-தூத்துக்குடி சாலையில் உள்ள கிலோ மீட்டர் 12/8 என்ற இடத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுவதற்கும், அதுபோன்று கன்னியாகுமரி-திருவனந்தபுரம் சாலையில் உள்ள கிலோ மீட்டர் 604/4 என்ற குழித்துறை பாலம் கட்டுவதற்கும், 641/6 சுசீந்தரம் பாலம் கட்டுவதற்கும் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு துணைக் கேள்வியில் ஐந்து கேள்விகளா? உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே வினாவில் இதுபோல கேட்கக் கூடாது. நீங்கள் பேசி முடிப்பதில் பிரச்சினையே இல்லை. ஒரே வினாவில் நான்கு இடங்களில் பாலம் கேட்டுக்கொண்டிருப்பதா?

**திரு. மு. அப்பாவு:** நிலம் கையகப்படுத்துவது பற்றித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். Government of India, Ministry of Surface Transport (Roads Wing) 1987 ஆம் ஆண்டு இவ்வளவு இடத்திற்கும் பாலம் கட்டுவதற்கு அனுமதித்த பிறகும் நிலம் ஆர்ஜிதம் பண்ணாத காரணத்தினால் இவை தாமதப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே அந்த நில ஆர்ஜிதம் செய்கிற பணிகளை விரைவாகச் செய்து முடிக்க வருவாய்த் துறைக்கு ஆணையிடுவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி புறவழிச் சாலை சம்பந்தமாக நிலம் கையகப்படுத்துவதற்கு ஏற்கெனவே தமிழக அரசு 35 இலட்ச



1999 மே 13]

ரூபாய் ஒதுக்கீடு செய்து ஏறத்தாழ 99% நிலம் கையகப்படுத்தப்பட்டு முடிந்துவிட்டது. இன்னும் 1.59.5 எக்டேர் நிலம் மட்டும்தான் கையகப்படுத்தப்பட வேண்டியது இருக்கிறது. அதுவும் விரைவிலே கையகப்படுத்தப்படும். அந்தப் புறவழிச் சாலையினுடைய நீளம் 19.538 கிலோமீட்டராகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின் மூலமாகத்தான் இந்தப் புறவழிச் சாலை அமைக்கப்படவிருக்கிறது. அதற்குரிய நிலத்தை, ஏற்கெனவே பழைய புறவழிச் சாலைக்கு மாநில அரசு எடுத்துக் கொண்டது உண்மை. அதற்குப் பதிலாக இந்த நிலத்தை எடுத்துக் கொடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதும் உண்மை. இது தவிர, மேலும் இரண்டு பாலங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். குழித்துறை பாலத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு முடிந்துவிட்டது. அதை B.O.T. திட்டத்தில், மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறை எடுத்துக்கொள்வதாக இருக்கிறது. இந்தத் திட்டத்தையும் அதாவது அந்தப் பாலத்தைக் கட்டுகிற பொறுப்பையும் B.O.T. திட்டத்தின் மூலமாகத்தான் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது. சுசீந்திரத்திற்கு, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய துறையின் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தை தமிழக அரசு கேட்டிருக்கிறது; நெடுஞ்சாலைத் துறை கேட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 731, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**731—**

**தொழிலாளர் நல வாரியம்**

***11383—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாட்டுவண்டித் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 மே 13

(அ) ஆம்.

(ஆ) அமைப்பு ரீதியற்ற மாட்டுவண்டித் தொழிலாளர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் உள்ளிட்ட 43 தொழில்களை உடல் உழைப்புத் தொழிலாளர் நலச் சட்ட பட்டியலில் சேர்த்து அரசாணை (நிலை) எண் 96-ல் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21-8-1998-ல் ஆணை வெளியிடப்பட்டு, அரசிதழில் இறுதி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழிலாளர்களையும் உள்ளடக்கிய அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் நலனுக்காக, "1999 ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்" குறித்த வரைவறிக்கை, 8-3-1999 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் நலம்பேண, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் அமைத்து அரசாணை (நிலை) எண் 35, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 17-3-1999-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மாட்டுவண்டித் தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் ஆகியோருக்குத் தனியாக வாரியம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. தற்பொழுது அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வாரியத்தின் மூலம் இவர்களும் பயனடையலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் நல வாரியத்திலே வாங்கப்படுகிற சந்தாத் தொகை என்பது மாதத்திற்கு 20 ரூபாய் என்றிருக்கிறது. இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தொழிற்சங்கத்தின் சார்பிலே கோரிக்கை வைத்திருக்கிறேன். கடந்த முறையும் வலியுறுத்தியிருக்கிறேன். மாதத்திற்கு ஒருமுறை என்பதை வருடத்திற்கு ஒருமுறை செலுத்துகிற முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று தொழிலாளர்களின் தரப்பிலே இருந்து வற்புறுத்தப்படுகின்றன. மேலும், தொழிலாளர்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி, 20 ரூபாய் என்பதை 10 ரூபாயாக மாற்றியமைக்கவும், அதேபோல், employers தரப்பில் contribution என்பது இல்லை, எனவே Employers' roll-ஐ அரசாங்கமோ அல்லது வாரியமோ எடுத்துக் கொண்டு, அரசுத் தரப்பிலே தன்னுடைய பங்களிப்பைச் செலுத்துவதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 மே 13]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தன்னுடைய பங்களிப்பை, பிரச்சினையின் தன்மை அறிந்து நிச்சயமாகத் தரும். அதுதான் சட்டத்திலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்து, சந்தாத் தொகை சம்பந்தமாக இப்போது சட்டமன்றத்திலே சொல்லப்பட்டாலும்கூட, அதற்காக இருக்கக்கூடிய அமைப்பான Welfare Board-லோ அல்லது வேறு எந்த அமைப்பாக இருந்தாலும், தொழிலாளர்கள், அரசு, வேலையளிப்பவர்கள் ஆகியோர் அடங்கிய அவையிலோ அதுகுறித்துத் தாராளமாகப்பேசி முடிவெடுக்கலாம். ஏற்கெனவே திரு. சுப்பராயன் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிக் கேட்டிருக்கிறார். இப்போது திரும்பவும் கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 732, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**732—**

**தனியார் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குப் பணி அட்டை**

***21749—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தனியார் துறை போக்குவரத்துத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பணி அட்டை வழங்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அனைத்து போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் சட்டப்படியான படிவம் XX-இல், service book உரிமையாளர்களால் வழங்கப்பட வேண்டுமென்று மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்ட விதி 44 ஏ (1)-இல் வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அவ்வாறு இவ்விதியின்படி எந்தத் தொழிலாளருக்காவது service book வழங்கப்படாதது ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது இது தொடர்பாக புகார் வரப்பெற்றாலோ சம்பந்தப்பட்ட

[*1999 மே 13*

உரிமையாளர்கள் மீது தொழிலாளர் ஆய்வாளர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறை போக்குவரத்தில் எவ்வளவு தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள் என்ற கணக்கு அரசிடம் உள்ளதா? அவர்களுக்கு முறையாக service book தொடங்கப்பட்டு, அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல், சம்பள உயர்வு மற்றும் விடுப்பு, மருத்துவ விடுப்பு போன்ற தொழிலாளர் நலனைச் செயல்முறைப்படுத்துகிறார்களா என்பதை அரசு ஆய்வு செய்கிறதா? பேருந்து உரிமையாளர்கள் மீது தொழிலாளர்கள் இதுவரை ஏதாவது புகார் தெரிவித்து அது அரசுக்கு வந்துள்ளதா, அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கேள்வியைக் கேட்டாரோ அது சம்பந்தமாக, விளக்கம் தந்ததற்குப் பிறகும், தனியார் போக்குவாத்து துறையிலே எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அது குறித்து என்னிடத்திலே குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, service book பற்றி அவர் கேட்காவிட்டாலும் கூட, சட்டப்படி பஸ் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு அதைக் கொடுத்தாகவேண்டும். இல்லையென்று சொன்னால், 'மூன்று மாத சிறைத் தண்டனையும் 500 ரூபாய் அபராதமும்' என்று இருக்கிறது. 1998 ஆம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் கீழே மொத்தம் 6844 ஆய்வுகள், தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு அதிலே 636 வழக்குகள் பல்வேறு சட்ட விதிகளை மீறிய குற்றத்திற்கு, இது உட்பட, நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டு 1,76,940 ரூபாய் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், முதல் துணை வினாவை கணேசன் கேட்டுவிட்டார். இப்போது இரண்டாவது துணை வினா (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.



*1999 மே 13*]

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற போது, சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிந்து தெரிந்ததற்குப் பிறகுதான் கேள்வியே எழுந்திருக்கிறது. பிரச்சினை என்னவென்றால், சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது நடைமுறையில் அமலாவதில்லையே; நடைமுறையில் அமலாக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதுதான் கேள்வி. என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுடைய ஒரு பொதுவான குற்றச்சாட்டு, இந்தத் துறையின் சார்பாக தொழிலாளர் நலனுக்காக இருக்கக்கூடிய சட்டங்கள் சரியாக அமல்படுத்தப்படவில்லை என்பதாகும். ஆனால், துறையின் சார்பான பதில் சரியாக அமல்படுத்தப்படுகிறது என்பது. இருந்தாலும் சில இடங்களில் சரியாக அமல்படுத்தப்படவில்லை என்ற புகாரை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு, தெளிவாக, இந்த ஊரிலே, இந்த இடத்திலே, இந்த அதிகாரி நிறைவேற்றவில்லை என்று சொல்வார்களேயானால் சட்டத்திற்கு உட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க முடியும். இதிலே துரதிருஷ்டம் என்னவென்றால், பொதுவான புகார்களைத்தான் கூறிக் கொண்டிருக்கிறார். சட்டத்திலேயே புகார் கொடுப்பதற்குரிய விதிகள் இருக்கின்றன, அந்த விதிகளின்படி claim மற்றும் complaint கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 733, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**733—**

**சட்டப் பல்கலைக்கழகம்**

***22356—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டப் பல்கலைக்கழகத்தை தாம்பரம் பகுதியில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை உங்களுடைய அனுமதியுடன் அளிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்கான கட்டடங்கள் கட்டுவதற்காக தாம்பரத்திற்கு அருகேயுள்ள பள்ளிக்கரணையில் அரசுக்குச் சொந்தமான 25 ஏக்கர் நிலத்தைப் பெற பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. ஆனால் தாம்பரத்திற்கு பக்கத்திலேயே, நெடுஞ்சாலையை ஒட்டிய இடத்தில் புல எண் 183/1-ல் 120 ஏக்கரில் 100 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு 20 ஏக்கர் நெடுஞ்சாலை ஓரத்திலேயுள்ள, மின்சார இரயில் ஓடும் பெருங்களத்தூர் ஸ்டேஷனுக்கு எதிரிலேயே இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தையும் ஆய்வு செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கரணையில் இப்போது பல்கலைக்கழகம் விரும்புகின்ற இடம் நெடுஞ்சாலைக்குப் பக்கத்திலேயேதான் இருக்கிறது. வசதியான இடத்திலேதான் இருக்கிறது. நானே நேரிடையாகச் சென்று பார்வையிட்டேன். அதற்குப் பிறகு வருவாய்த் துறை மூலம் இதைப் பெறுவதற்கான முயற்சிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்திய விடையின் நகலை எனக்குக் கொடுக்க வேண்டும். நீங்கள் திருத்திய விடையைப் படிப்பதற்கு முன்னால் எனக்கு அந்த நகலினைக் கொடுத்துவிட்டுத்தான் படிக்க வேண்டும்.

வினா எண் 734, திரு. கோ. தளபதி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.





**734—**

## பேரையூரில் நீதிமன்றம்

***24717—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரையூர் வட்டத்தில் புதிய நீதிமன்றம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் பேரையூர் வட்டத்தில் புதிய நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரையூர் புதிய வட்டமாகப் பிரிக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் பல அலுவலகங்கள் அங்கே வந்து செயல்படவில்லை. ஆகையினால் ஒன்றரை இலட்சம் மக்களுடைய பிரச்சினையைக் கருதி அங்கு இந்த ஆண்டாவது புதிய நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தினுடைய தேவையை அரசு உணர்ந்து இருக்கிறது. நிதி நெருக்கடியின் காரணமாக இதுபோன்ற புதிய நீதிமன்றங்கள் தொடங்குவதற்கு இப்போது வசதி இல்லை; தற்காலிகமாக வசதி இல்லை என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தச் சபையிலே திருவாரூர்

மாவட்டம் மன்னார்குடிக்கு சார்பு நீதிமன்றம் வழங்கப்படும் என்று அறிவிப்புச் செய்யப்பட்டது. இடையிலே நான் பலமுறை அமைச்சர் அவர்களிடத்திலே அது தொடங்கப்படுவதற்கான பணிகள் தொடங்கப்படவில்லையே என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். கடிதமாகக் கொடுக்கப்பட்டு கடந்த ஒரு வாரத்திற்கு முன்னதாக பதில் வந்திருக்கிறது. இந்த நிதி ஆண்டிலும் அது தொடங்கப்படமாட்டாது என்ற பதில்தான் வந்திருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் உள்ள இந்தச் சார்பு நீதிமன்றத்தைத் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, தொடர்புடைய கேள்வி அல்ல என்றாலும் மன்னார்குடியிலே சார்பு நீதிமன்றம் அமைப்பதைக் கொள்கை ரீதியாக அரசு ஏற்றிருக்கிறது. நிதி நெருக்கடியின் காரணமாகத்தான் உடனடியாகத் தொடங்கப்படவில்லை. நிதிநிலைமை சீராகும்போது, உறுதியாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 735, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**735—**

**இரசாயனக் கழிவால் பாதிப்பு**

***18180—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருக்கும் Tiruvancoor Chemicals Company-யின் கழிவால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொன்னூர் கிராமத்தில் அமைந்துள்ள திருவாளர்கள் Tiruvancoor Chemicals and



Manufacturing Company Ltd. (தற்போது T.C.M. Ltd.) என்ற தொழிற்சாலையின் கழிவு நீரால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படா வண்ணம் தற்போது அரசு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 736, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**736—**

**கலைவாணர் அரங்கத்தைப் புதுப்பித்தல்**

***21993—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை, கலைவாணர் அரங்கம் ரூ.15,52,000/- செலவில் தற்போது புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவிப்பதோடு அந்தக் கலைவாணர் அரங்கத்தில் திரைப்படம் திரையிடப்படுகிறதா அல்லது நிறுத்திவிடப்பட்டதா? அப்படித் திரையிடப்பட்டால் கலைவாணருடைய திரைப்படமே அதில் திரையிடப்படுமா மற்றும் தனியார்களுக்கு அது வாடகைக்கு விடப்படுமா என்பனவற்றை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கில் திரைப்படங்கள் திரையிடப்படுவது நஷ்டத்தில் நடைபெறுகிற காரணத்தால் 23-12-1998 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. கலைவாணர் அரங்கம் அரசு மற்றும் தனியார் நிகழ்ச்சிகளுக்கு தற்போது வாடகைக்கு விடப்பட்டு வருகிறது.

[1999 மே 13

அதன்மூலம், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர் 1996 முதல் இந்தத் தேதி வரையில் 35,66,307 ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 737, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**737—**

**குழந்தைகள் காப்பகம் தொடங்குதல்**

***6111—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பம்மல் பேரூராட்சி, மூங்கிலேரிப் பகுதியில் குழந்தைகள் காப்பகம் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பம்மல் பேரூராட்சி மூங்கில் ஏரிப் பகுதியில் உள்ள சபாபதி நகர், பூம்புகார் தெருவில் 1-3-1998 முதல் அங்கன்வாடி மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையம் ஆரம்பிக்கப்பட்டு சிறந்த முறையில் நடைபெறுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 738, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



1999 மே 13]

**738—**

**உடல் ஊனமுற்றோருக்குத் தொழிற்கூடம்**

***16583—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம், சங்ககிரி வட்டம், எடப்பாடி ஒன்றியம் ஆகிய இடங்களில் உடல் ஊனமுற்றோருக்கான தொழிற்கூடங்கள் நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம், கொங்கணாபுரம், சங்ககிரி வட்டம் மற்றும் எடப்பாடி ஒன்றியத்தில் உள்ள ஊனமுற்றவர்களுக்குத் தொழிற்கூடங்கள் நிறுவுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருக்கும் உடல் ஊனமுற்றவர் களுக்கு ஏற்படும் மனத்தளர்ச்சியைப் போக்கி அவர்களுக்கும் இந்த வாழ்க்கையில் ஒரு பிடிப்பு உணர்ச்சி ஏற்படுத்தக்கூடிய வகையிலே, எடப்பாடி தொகுதியிலே, எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கக் கூடிய வகையிலே ஒரு வேலைவாய்ப்பு மையம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா? அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றவர்களின் மொத்த எண்ணிக்கையை அரசு கணக்கெடுத்து வைத்திருக்கிறதா? அவர்களுடைய வாழ்க்கை உயர்வுக்காக ஒரு வல்லுநர் குழுவை அரசு ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்காக வேலைவாய்ப்பை உறுதிபடுத்துகின்ற விதத்தில் தொழிற்கூடங்கள் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

[1999 மே 13

முற்பகல் 10-25

ஏற்கெனவே அரசின் மூலமான வேலைவாய்ப்புகளிலே 3 சதவீதம் அவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அதுகுறித்து மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அவர்கள், ஊனமுற்றவர்கள் தொழில்களைத் தாங்களாகத் தொடங்குவதற்கு அரசின் மூலமாக, வங்கிகள் மூலமாகக் கடன் வசதியும் செய்து தரப்படுகிறது. அந்தக் கடன் வசதிக்கு 1000 ரூபாய் அரசின் சார்பாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசின் சார்பாக உடல் ஊனமுற்றோருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்காகக் கடன் உதவி அளிக்கப்படுகின்ற கருத்துரு வரப்பெற்றிருக்கிறது. அதன் மூலமாக, தொழிலில் ஈடுபட விரும்புகின்ற ஊனமுற்றவர்களுக்கு, 50 ஆயிரத்திற்கு மேலே 20 இலட்சம் வரை கடன் வழங்கலாம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 சக்கர சைக்கிள்கள் வழங்குவதிலே மிகக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் தொகுதியில் அடிக்கடி கிராமங்களுக்குப் போகின்றபோது, பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக எங்களிடம் இரண்டு முறை மனு கொடுத்தோம், மூன்று முறை மனு கொடுத்தோம் என்று தெரிவிக்கின்றபோது மிகவும் சங்கடமாக இருக்கிறது. எனவே, நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரடியாக மனு கொடுத்திருக்கிறேன். எனவே, அதிக அளவிலே, கேட்கின்ற அளவுக்கு, உடல் ஊனமுற்றவர்களினுடைய நிலையை உணர்ந்து, விரைவில் அந்த மூன்று சக்கர வண்டி வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள நடவடிக்கை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு உடல் ஊனமுற்றவர்கள் 1500 பேருக்கு 3 சக்கர வண்டி வழங்கப்பட்டிருக்கிறது. ஏராளமான விண்ணப்பங்கள் நிலுவையிலிருக்கின்றன என்ற காரணத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்த பிறகு, இந்த ஆண்டு கூடுதலாக



1999 மே 13]

500 பேருக்கு வழங்குவதற்கு அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு நிலுவையிலே இருக்கின்ற விண்ணப்பங்களுக்கும் தொடர்ந்து வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு மைய அரசு A, B பணிகளில் தற்போது 3 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது. அதேபோன்று தமிழக அரசுப் பணிகளில், A, B பணிகளில் 3 சதவீத ஒதுக்கீட்டை உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மன்றத்திலே நான் ஒரு புள்ளி விவரத்தை வழங்கியிருக்கின்றேன். அதனடிப்படையில், அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பணியிடங்களுக்குத் தகுதியுள்ளவர்கள் கிடைப்பார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பணியிடங்கள் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியிலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு சைக்கிள்கள் வேண்டுமென்று கேட்டார்கள். சென்ற வாரம் பத்திரிகையிலே பார்த்தேன், முன்னாள் அமைச்சர் ஒருவர் ஏராளமான சைக்கிள்களை வாங்கி ஒரு குடோனிலே போட்டு வைத்திருப்பதாக எழுதியிருக்கிறார்கள். அதை நாம் எடுத்து கேட்கின்ற மற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுக்கெல்லாம் கொடுக்கலாம். அதை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து பத்திரிகையிலே செய்தி வந்ததை நானும் பார்வையிட்டு, துறையின் செயலாளர் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு விசாரித்தபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி ஏற்கெனவே மத்திய அரசில்

அமைச்சராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டுப் பணிக்காக மத்திய அரசு வழங்கிய நிதியிலேயிருந்து மத்திய சமூக நலத் துறையின் மூலமாக அவர்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கு இரண்டு நாள் முகாமை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எனவே, மத்திய அமைச்சகத்திலேயிருந்து அதற்கான வல்லுநர்கள் வருகை தந்து ஒருநாள் முகாம் நடத்தி, முகாமிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அடுத்த நாளில் அந்த உதவிக் கருவிகளை வழங்கியிருக்கிறார்கள். மேற்கொண்டு வழங்குவதற்காக வந்த உதவிக் கருவிகள், தனித்தனியாக இருந்த அந்த parts, ஒன்றாகச் சேர்க்கப்படாமல் இருந்த காரணத்தினால் ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதியன்று தருவோம் என்று அவர்கள் அந்த உறுதிமொழியை வழங்கி இருக்கிறார்கள். அதற்குள் நிலைமைகள் மாறிவிட்ட காரணத்தினால் அந்தப் பொருட்களெல்லாம் மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு மண்டபத்திலே வைக்கப்பட்டிருக்கின்றன என்றும், மாநகராட்சிக்கு இதனால் நாளொன்றுக்கு 5,000 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து விசாரித்தபோது, அந்தப் பயனாளிகளுடைய பட்டியலெல்லாம் மத்திய அமைச்சகத்தில்தான் இருக்கிறது எனற தகவல் கிடைத்திருக்கிறது. எனவே, அந்தக் குறிப்பிட்ட பயனாளிகளுக்கு அந்த அமைச்சகத்தின் மூலமாகவே வல்லுநர்களை மீண்டும் வரவழைத்து அந்த உதவிக் கருவிகளைத் தரலாமா அல்லது வேறு என்.ஜி.ஓ.க்கள் மூலமாக அதை வழங்கலாமா என்பது குறித்து இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம். அதற்குச் சரியான விடை கிடைத்தபிறகு அதைப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் அவற்றை வழங்குவதற்கு ஏதுவாகுமா என்பதையும் நாங்கள் விசாரித்துக்கொண்டிருக்கின்றோம்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்படுகிற மூன்று சக்கர வாகனங்களைப் போலவே மகளிருக்கு வழங்குவதற்கு தையல் இயந்திரங்களும் ஒதுக்கீடு எண்ணிக்கையிலே குறைவாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு நிதியை மட்டும் நம்பாமல் தன்னார்வத் தொண்டு





நிறுவனங்களை அணுகி தையல் இயந்திரங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்கள், குறைந்தது ஒரு மாவட்டத்திற்கு ஆயிரமாவது எண்ணிக்கை வரக்கூடிய அளவிற்கு ஒதுக்கீடு செய்ய ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 4 ஆயிரம் பேருக்கு வழங்குவதற்காக அரசு அறிவிப்புச் செய்திருந்தது. ஆனால், Tender-லே கலந்துகொண்டவர்களிலே—manufacturers—அதாவது தயாரிப்பாளர்களுக்கு மட்டும் அதிலே வாய்ப்பு உண்டு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், தயாரிப்பாளராக இல்லாத ஒருவர் ஏன் தங்களுக்கும் அந்த வாய்ப்பைத் தரக்கூடாது என்று கேட்டு வழக்குமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றுவிட்ட காரணத்தினால் அந்தத் தையல் இயந்திரங்கள் கடந்த ஆண்டு வழங்கப்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இப்போது தடையாணை நீக்கப்பட்டு அரசுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிற காரணத்தினால் கடந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய 4 ஆயிரம் தையல் இயந்திரங்களும், இந்த ஆண்டு தொடர்ந்து 4 ஆயிரம் இயந்திரங்களும் வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வண்ணம் அந்த 8 ஆயிரம் பேர்களுக்கும் உரிய தையல் இயந்திரங்களை மாவட்ட வாரியாகப் பிரித்து இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 739, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**739—**

**மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி**

***5582—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 மே 13

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதி நிலைமைக்கேற்ப வரும் ஆண்டில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்க ஆவன செய்யப்படும்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர் விடுதி, ஆசிய கண்டத்திலேயே மிகப்பெரிய விடுதி என்று சொல்லப்படுகின்றது. இந்த விடுதியில் படிக்கின்ற மாணவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் அவஸ்தைப்படுகின்றார்கள். எனவே, அரசு அதை மறுபரிசீலனை செய்து அவர்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குவதற்கான முயற்சிகளை இந்த ஆண்டே மேற்கொண்டு, நிதிநிலைமையைப் பொறுத்து என்று சொல்லாமல் தயவுசெய்து, அதிகமான மாணவர்கள் அங்கே இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய நிலையைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி இந்த ஆண்டே அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா? அந்த மாணவர்கள் படிப்பதற்காக வேண்டி அங்கே குண்டு பல்புகள் போட்டிருக்கிறார்கள். அந்த பல்புகளிலேயிருந்து வரும் வெளிச்சம் போதவில்லை என்ற சூழ்நிலை அங்கே இருக்கிறது. அவற்றையெல்லாம் மாற்றி குழல் விளக்குகளை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு நாசர் அவர்கள் சிதம்பரத்திலுள்ள மேல்நிலைப்பள்ளிக்கு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித் தரப்படுமா என்று கேட்கின்றார். அரசின் நிதிநிலைமையைப்பொறுத்துப் பரிசீலிக்கப்படும் என்று நான் கூறியிருக்கிறேன். அவர் இந்த ஆண்டே கட்டித்தரப்படுமா என்றும் கேட்கின்றார். அவருக்கு நான் கூறிக்கொள்வேன். ஆழ்குழாய்க்கிணறு திட்டத்தின் மூலமாக 85 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அடிபம்பு



1999 மே 13]

அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இருப்பினும் இந்தப் பள்ளிக்கு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித் தரப்பட வேண்டுமானால் — "எகிப்தின் நன்கொடை நைல் நதி" என்பார்கள், திரு. நாசருக்கு நன்றாகத் தெரியும்—சிதம்பரத்திலுள்ள மேல்நிலைக் குடிநீர்த் தொட்டியை நாசரின் நன்கொடை குடிநீர்த் தொட்டி என்று சொல்லும் அளவிற்கு, அவர் முயற்சி எடுத்தால், இந்த அரசால் எதிர்வரும் ஆண்டில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தக் குண்டு பல்புகளுக்குப் பதிலாக குழல் பல்புகளை வழங்குவதற்கு மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் மூலமாக விடுதிகளுக்கு ஆணை அனுப்பப்பட்டிருக்கிறது என்பதையும் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் நந்தனார் மகளிர் மேல்நிலைப் பள்ளிதான் தமிழகத்திலே அதிகமான தலித் பெண்கள் படிக்கக்கூடிய ஒரு மேல்நிலைப் பள்ளியாக இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தபிறகு அவர்கள் கல்லூரிப் படிப்பு படிக்கச் செல்வதற்கு சிதம்பரத்தில் மகளிர் கல்விக் கூடங்கள் எதுவும் இல்லை. எனவே, ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக ஓர் அரசினர் கல்லூரியை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசினர் நந்தனார் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவிகள் நிறையபேர் இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அதுவொரு கலைக் கோயிலாக, கல்விக் கோயிலாக இருக்கிறது என்பதை உணர்ந்து மாண்புமிகு முதல்வரவர்கள் அந்தப் பள்ளியினுடைய அடிப்படைத் தேவைகள் அத்தனையையும் நிறைவேற்றி வருகின்றார்கள். ஆகவே, சிதம்பரத்தில் ஒரு கல்லூரி அமைப்பதற்கு வேண்டிய முயற்சியை மாண்புமிகு முதல்வரவர்களிடம் எதிர்காலத்தில் கலந்து பேசி நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 740, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1999 மே 13

**740—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

***21020—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், வேலம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட முருகம்பாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், வேலம்பாளையம் கிராமம் க. சர்வே எண் 50 உட்பிரிவு 1 நத்தம் புறம்போக்கில் வேலம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட முருகம்பாளையத்திலுள்ள 39 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 29-9-1998 ஆம் நாளன்று, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முயற்சியினால் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 3. கவன ஈர்ப்பு

### கொடைக்கானல் ஒன்றியம் பண்ணைக்காடு-பாச்சலூர் நெடுஞ்சாலை பழுதுபட்டுள்ளதால் போக்குவரத்து பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-இன் கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கையா அவர்கள் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொடைக்கானல் ஒன்றியத்திலுள்ள பண்ணைக்காடு, கே.சி. பட்டி - பாச்சலூர் வரையிலான சாலை மிகவும் பழுதுபட்டுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கே.சி. பட்டி - பாச்சலூர் சாலை 9.680 கி.மீ. (கி.மீ. 0/0-9/680) நீளமுடைய சாலையாகும். கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வந்த இச்சாலை, தேசிய நெடுஞ்சாலைப் பிரிவின் கட்டுப்பாட்டில் செயலாக்கப்படும் பழங்குடியினர் நலத் துறைத் திட்டத்தில் மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி முடிக்கப்பட்டு 30-3-1999-ல் எதிர்காலப் பராமரிப்புக்காக இதர மாவட்டச் சாலையாக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் உள்ள நொடிகளைப் பழுதுபார்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இச்சாலையைப் பழங்குடியினர் நலத் துறைத் திட்டத்தில் மேம்படுத்த நாமக்கல் (நெ) பழங்குடி மக்கள் முன்னேற்றப் பணிகள் கோட்டத்தில் இருந்து இச்சாலையின் வைப்புத் தொகையாக ரூ.4.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி இச்சாலையை வாகனப் போக்குவரத்துக்கேற்றவாறு பழுதுபார்த்துச் சீர் செய்ய உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[1999 மே 13

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்தேன். கொடைக்கானல் ஒன்றியத்தில் பண்ணைக்காட்டிலிருந்து தாண்டிகுடி, மண்டலம் கொம்பு, குப்பம்மாபட்டி, கே.சி. பட்டி, பாச்சலூர் வரையான 50 கிலோ மீட்டர் சாலை மிகவும் முக்கியமான சாலையாகும். இச்சாலை பழுதுபட்டிருப்பதால் இன்று வத்தலக்குண்டிலிருந்தும், பெரியகுளத்திலிருந்தும் இந்த வழித்தடங்களில் சென்று வந்து கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டு, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மலைப் பகுதி மக்கள் போக்குவரத்து வசதியின்றி மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பலமுறை நெடுஞ்சாலைத் துறையினரிடம் எடுத்துச் சொல்லி, இச்சாலை செப்பனிடப்பட வேண்டும் என்று கடந்த இரண்டாண்டுகாலமாகக் கேட்ட நேரத்தில் இச்சாலை பழங்குடியினர் நலத் துறை திட்டத்தில் எடுத்துச் செய்யப்பட்டதாகவும், அதை நெடுஞ்சாலைத் துறையில் ஒப்படைக்கவில்லை என்றும், இச்சாலையை நெடுஞ்சாலைத் துறையால் மேம்படுத்த இயலாது என்றும் தெரிவிக்கிறார்கள். அதைப்போல, பழங்குடியினர் நலத் துறைத் திட்டத்தில் அதுபற்றிக் கேட்டபொழுது அவர்கள் ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறையிலே ஒப்படைத்து விட்டதாகவும், இனிமேல் நாங்கள் செய்ய இயலாது என்றும் தெரிவிக்கின்றார்கள். இப்படி, பழங்குடியினர் நலத் துறையினர், தாங்கள் எடுத்துச் செய்ய இயலாது என்று தெரிவிக்கின்றனர். அதைப்போல நெடுஞ்சாலைத் துறை இது எங்களுக்குச் சொந்தமான சாலையில்லை என்று தெரிவிக்கின்றனர்—பண்ணைக்காட்டிலிருந்து பாச்சலூர் வரையான 50 கிலோ மீட்டர் சாலையில் வருவது இந்த 10 கிலோமீட்டர் சாலை. இது எங்களுடைய சாலையில்லை, இது எங்களுடைய சாலையில்லை என்று இரண்டு பேருமே இச்சாலையை மேம்படுத்த இயலாது என்று தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே போக்குவரத்து நிறுத்தப்பட்ட காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் அவதிப்படுகின்றார்கள். எனவே, இந்த 10 கிலோ மீட்டர் சாலையையும் செப்பனிட வேண்டும். மலைப் பகுதி மக்களுடைய நலன் கருதி பண்ணைக்காட்டிலிருந்து பாச்சலூர் வரையிலான 50 கிலோமீட்டர் சாலையையும் நல்ல தார்ச் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.



1999 மே 13]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் நீளமுள்ள, கே.சி. பட்டியிலிருந்து பாச்சலூர் வரையிலுள்ள இந்தச் சாலை கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பழங்குடியினர் நலத் துறைத் திட்டத்தின் கீழ் மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று பெரியகுளம் Ghat Road Division என்ற ஒரு துறையின் மூலமாக 1990-க்கு முன்னாலே பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அந்தப் பணி முடிக்கப்பட்டு நெடுஞ்சாலைத் துறையினிடத்தில் ஒப்படைக்கப்பட்டதா இல்லையா என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மூக்கையா அவர்களும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்களும், இந்தச் சாலையை—காணாமல் போன சாலையை—கண்டுபிடித்து நம்முடைய நெடுஞ்சாலைத் துறைக்குத் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு இதனுடைய ஆவணங்களைத் தேடிக் கண்டுபிடித்தபோது அதிலே பெரும்பகுதி பணிகள் பழைய ஆட்சிக் காலத்திலே முடிக்கப்பட்டு இருக்கின்றன. ஒரு சிறு அளவு மட்டும் முடிக்காமல் இருந்தது. அந்தப் பணி நம்முடைய துறையின் சார்பாக, 1996-ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்கள் பொறுப்பிலேயிருந்தபொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினிடத்தில் அது ஒப்படைக்கப்பட்டதா இல்லையா என்பதற்கான ஆவணங்களும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு இப்பொழுது நெடுஞ்சாலைத் துறை அதை எடுத்துக் கொண்டிருக்கிறது. 30-3-1999 முதல் நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொண்டு இருக்கிறது. பழங்குடியினர் நலத் துறைத் திட்டத்தின் கீழ் நாமக்கல்லில் இருக்கக்கூடிய Division-ல் 4 இலட்ச ரூபாய் இருந்தது. அந்த 4 இலட்ச ரூபாய் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டு, அந்த ரூபாயைப் பயன்படுத்தி இந்த 10 கிலோ மீட்டர் தூரச் சாலையை இப்போது பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது பேருந்துகள் போகின்ற அளவுக்கு இந்தச் சாலை செப்பனிடப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

## 4. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று நான்காவது முதல் நூற்று தொண்ணூற்று எட்டாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்**

**(ஆ) கோரிக்கை எண் 42—பல்வகை**

**(இ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு**

**(ஈ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்**

**(உ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்**

**(ஊ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்**

### (அ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும். மாண்புமிகு கல்வி அமைச்சர்.





***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1881,36,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4684 திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுத் துறை, போக்குவரத்துத் துறை, உள்ளாட்சித் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அரசு ஊழியர்கள் போல் pension வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2075, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் இன்னும் சில தியாகிகளுக்கு வழங்கப்படாமல் உள்ள நிலையைப் போக்கும் வகையில் அவர்களுக்கும் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4352, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4037, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2397, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாய்நாட்டின் சுதந்திரத்துக்குப் பாடுபட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரண்டு மடங்காக அதிகரித்து வழங்கச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2983, திரு ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "60 வயதுக்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3728, திரு. கே. ரவி அருணன்.



**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்றவுடன் ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க, அவர்கள் ஓய்வு பெறுவதற்கு இரண்டு ஆண்டுகள் இருக்கும்போதே ஓய்வூதியம் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4251, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3898, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1044, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1881,36,04,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42.— பல்வகை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1999 மே 13

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.458,30,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2083, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் போலி லாட்டரி சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதை உடன் தடை செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,30,57,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4353, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.458,30,57,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4038, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,30,57,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3423, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.



1999 மே 13] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 1506, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3041, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,30,57,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2216, திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3729, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,30,57,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4252, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,30,57,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3900, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்தியாவின் தலைசிறந்த சுதந்திரப் போராட்டத் தளபதியும், மத நல்லிணக்கம் பெறுவதில் அக்கறை கொண்டவரும், தமிழகத்துடன் இணக்கமான பிணைப்பைக் கொண்டவருமான 'தீரர் திப்பு சுல்தான்' அவர்களின் 200 (இருநூறு)-ஆவது பிறந்த நாளை தமிழக அரசு

இவ்வாண்டு கொண்டாட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,30,57,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3950, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பகுத்தறிவுக் கருத்துகள், சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதற்கென தமிழக அரசில் தனித் துறை அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,30,57,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.301,07,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4659, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களது தொகுதியில் அலுவல்கக் கட்டடம், உதவியாளர்கள், தட்டச்சர், கணினி, வாகனம், வாகன ஓட்டுநர், தொலைபேசி வசதிகளைச் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2180, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குத் தனித் தனியாக வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4374, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4044, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2448, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3027, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3744, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4256, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3911, திரு. அ.வ. அப்துல் நாசர்.





**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.301,07,16,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-45

## (ச) கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 61-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.388,29,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4658, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநில அரசு விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.388,29,69,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2191, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள சிறு விவசாயிகளுக்கு அதிக அளவில் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.388,29,69,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4375, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.388,29,69,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4079, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2453, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் விவசாயிகளுக்கு கிணறுகள் வெட்ட மற்றும் ஆழப்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.388,29,69,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3034, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.388,29,69,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4224, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.388,29,69,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 3912, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.388,29,69,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7- மாநிலச் சட்டமன்றம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.10,26,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2737, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகாராஷ்டிரா மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் மற்றும் படி ரூ.35,000 மாதம் வழங்குவதுபோல் தமிழக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1835, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அண்டை மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தினைப்போல், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தை உயர்த்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3060, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கணினிப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4015, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3176, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2262, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் கணிப்பொறி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3015, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 94, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவர்களது தொகுதியின் தலைமையிடத்தில் அலுவலகம் ஒன்று கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3754, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடத்திலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டவாறு உடன் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1471, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தட்டச்சு இயந்திரங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2841, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற நூலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் வசதிக்கென தனியாக xerox, fax machines பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3847, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் நியமனம் செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3128, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வரவு-செலவுக் கூட்டங்களைத் தவிர ஏனைய சட்டமன்றக் கூட்டங்களுக்கான நாட்களை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,26,62,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.7,12,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

[1999 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2734, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் வேட்பாளர்களின் தேர்தல் செலவை அரசே ஏற்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1851, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுயேட்சை வேட்பாளர்கள் அதிக அளவில் தேர்தலில் போட்டியிடுவதைக் குறைக்க தேர்தல் வைப்புத் தொகையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,17,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3062, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4016, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1999 மே 13] [திரு. ப. ரங்கநாதன்]

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2266, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றத் தேர்தல்களில் சுயேட்சையாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க, காப்புத் தொகையை ரூ.25,000 என உயர்த்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3021, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 500 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி வீதம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 91, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதி, கர்னாவூர் ஊராட்சியிலுள்ள ஒரு புதிய வாக்குச்சாவடி அமைக்க வேண்டியன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3755, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சடையப்பபுரம் கிராமத்திற்கென தனி வாக்குச்சாவடி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4285, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டமங்காடு ஊராட்சியைச் சேர்ந்த நடுவக்குறிச்சி கிராமத்தில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் அங்கு ஒரு வாக்குச் சாவடி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3848, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேர்தல்கள் நடைபெறும் காலங்களில் தேர்தல் பணிபுரியும் அலுவலர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வகையான படிகளையும் அதிகப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3096, திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேர்தல் நடைபெறும்போது வாக்காளர்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று வாக்களிக்கச் செய்வதை முழுமையாகத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,12,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் மற்றும் தேர்தல்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநிலச் சட்டமன்றம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு அவைக்கு அளிக்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின் கடைசி நாள். பேரவை விதி 185(3)ன்படி விவாதமும் பதிலுரையும் பிற்பகல் 1-30-க்குள் முடிந்து மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, விவாதத்தில் இன்று கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் மிகவும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்

@ 157 முதல் 206 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV மற்றும் V ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

கொள்கிறேன். கடைசி நாளாக இருப்பதன் காரணத்தால் இதுவரை பேசாத உறுப்பினர்கள் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அதற்கு மாறாக இப்போது திரு. ஞானசேகரன் 5-வது, 6-வது தடவையாக, விவாதத்திலே பேசப்போகிறார். சுருக்கமாக அவர் தன்னுடைய பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, திரு. ஞானசேகரன் அவர்களை அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு....

## 6. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்போதே கிடைக்கும் (சிரிப்பு)

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்**

**(ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை**

**(இ) கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு**

**(ஈ) கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்**

**(உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம்**—தொடர்ச்சி

**(ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது உறுப்பினர் ஞானசேகரன் பேசலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக்



கடமைப்பட்டிருக்கிறேன். இன்று அவையைத் தொடங்குவதற்கு வருகை தந்தபோது நீங்கள் ஒரு குறளைச் சொல்வதற்கு முன்னாலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'அவா வெறுத்தல்' என்ற கருத்தினைச் சொல்லி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த அவாவை வெறுக்க வேண்டும் என்கிற ஓர் அறிவுரையை அவர்கள் எடுத்துச் சொல்ல வந்தார்கள். நாங்கள் நிச்சயமாக, அதை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கக்கூடிய நிதி நெருக்கடி எங்களுக்கு நன்றாகவே தெரியும். ஆகவே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் என்மீது வருத்தப்பட்டாலும் பரவாயில்லை. அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக ஒரு கருத்தை நான் இங்கே வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். அரியானா, கேரளா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளமே கிடையாது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் காஞ்சனா கமலநாதன்) தலைமை]

ஆகவே, தமிழகத்திலே மாண்புமிகு முதல்வருடைய பவளவிழா நினைவாக நாங்கள்கூட இன்றுமுதல் சம்பளமே வேண்டாம் என்று நிச்சயமாக எல்லோருமேகூட உறுதியை அளித்துவிடலாம் என்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். எல்லோருக்கும் ஓர் இன்ப அதிர்ச்சி இருக்கலாம். நீங்கள் சம்பளமே கொடுக்காமல் கொடுக்கக்கூடிய படிகளை மட்டும்—ஏனென்றால் சம்பளம் என்று ஒருபைசாகூட வேண்டாம். படிகளை மட்டும்—நீங்கள் தந்துவிட்டால்போதும் அந்தப் படிக் கணக்கில் மட்டும், எங்களுக்கு எவ்வளவு செலவாகிறதோ அந்தச் செலவை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றுதான் எல்லா சர்வ கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எல்லா ....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ராஜாஜி மண்டபத்தில் ஏராளமான படிகள் இருக்கின்றன, ஏறி, இறங்கலாம். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லாடலிலே வல்லவர். நான் அந்தப் படியைக் கூறவில்லை. ஆங்கிலத்தில் சொல்லக்கூடிய Allowance. மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள்கூட Allowance-க்கு படி என்று சொல்கிற காரணத்தால், அந்தப் 'படி'யை நான் இங்கே

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக ஆந்திரப் பிரதேசத்திலே தொலைபேசிப் படியாக 7,000 ரூபாய் தருகிறார்கள். இப்போது STD வசதி எல்லாம் வந்துள்ளன. பழைய காலத்திலே தொலைபேசி என்பது தொலைவாக இருந்த காரணத்தால் தொலைபேசி என்ற பெயரைப் பெற்றதாகக் கருதுகிறேன். இப்போதெல்லாம் தொலைபேசி மிக நெருங்கி வந்துவிட்ட காரணத்தால் நெருங்கிப் பேசக்கூடிய பேசியாக வந்து நிறைய STD வசதி வந்திருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் தொலைபேசிக் கட்டணத்தைக்கூட எங்களாலே கட்டி மாள முடியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கு பெருந்தன்மையாக ரூ.9,000 வழங்குகிறார்கள், ஆனால், சென்னையில் இருக்கக்கூடிய விடுதியில், அருமை நண்பர் அழகிரி அவர்களுக்கு மாதம் 8,000 ரூபாய் ஆகிறது. ஊரில் அவர் சொல்லவில்லை. அவருடைய ஊரில் இருக்கிற தொலைபேசி கட்டணத்தையும் சேர்த்தால் அதுவே 20,000 ரூபாய்க்கு வந்து சேரும். தொலைபேசிக் கட்டணத்திற்கு இப்போது ஆந்திராவில் 7,000 ரூபாய் தருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழிற்சாலை மற்றும் பிற துறைகளினுடைய வளர்ச்சியைப்பற்றி பேசுகிறபோது நம்முடைய தமிழ் மாநிலம்தான் இன்று இந்தியாவிலே முதலிடம் பெற்றிருக்கிறது என்று சொன்னார். மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய நம்முடைய தமிழ் மாநிலம் நிச்சயமாக ஆந்திராவைவிட முன்னணியில் இருக்கிறது என்பதைக் காட்டுகின்ற வகையில் நம்முடைய கலைஞர் அவர்கள் நிச்சயமாக அந்த 7,000 ரூபாயையே அதையே கொடுத்தாலும் சரி அல்லது நீங்கள் அதிகரித்துக் கொடுத்தாலும் சரி. அதை சரியென்று ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஆந்திராவைப் போல ஆடம்பரச் செலவு செய்யாமல் சிக்கனமாக நா[illegible] இருப்பதால்தான் இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறோம்.

*முற்பகல் 10-55*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதைப்போல, ஆடம்பரம் என்று சிலர் இருக்கலாம். ஆனால், இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் அடிப்படைத் தேவைகளுக்குக்காகத்தான் கேட்டுக்



கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களில் எப்படியோ, சிக்கனத்தின் காரணமாகத் தொழில் துறையில் முதலிடத்தில் இருக்கிறது என்று முதல்வர் அவர்கள் கூறினார்கள். ஆனால், நாங்கள் இங்கே ஆடம்பரச் செலவுகள் எதையும் கூறாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் வெறும் படிகளை மட்டும் கேட்கிறார்கள் என்பதற்காக நான் அதைக் குறிப்பிடுகிறேன். தொலைபேசிப் படி என்று ஆந்திராவில் 7,000 ரூபாய் தருகிறார்கள். அதுபோல, தொகுதிப்படி என்று அரியானாவிலும், ராஜஸ்தானிலும் 6,000 ரூபாய் தருகிறார்கள்.

தபால்படி என்று மகாராஷ்டிராவில் 2,000 ரூபாய் தருகிறார்கள். நேர்முக உதவியாளர் படி என்று மகாராஷ்டிராவில் 2,500 ரூபாய் தருகிறார்கள். ஆந்திரப் பிரதேசத்தில் போக்குவரத்துப் படி என்று 3,000 ரூபாய் தருகிறார்கள். அதுபோல, அரியானாவில் அலுவலக உதவியாளர் படி என்று 2,500 ரூபாய் தருகிறார்கள். டில்லியிலே செயலகப் படி என்று 5,500 ரூபாய் தருகிறார்கள். கேரளாவில் நிலையான படி என்று 3,000 ரூபாய் தருகிறார்கள். மிசோரோமில் வீட்டு வாடகைப் படி என்று 3,000 ரூபாய் தருகிறார்கள். எதிர்பாராச் செலவு என்று அஸ்ஸாமில் 1,500 ரூபாய் தருகிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட பயணப் படி என்று 3,000 ரூபாய் ஒரிசாவில் தருகிறார்கள். Driver allowance என்று மகாராஷ்டிராவில் 8,000 ரூபாய் தருகிறார்கள். அதுபோல மருத்துவப் படி என்று மத்தியப் பிரதேசத்தில் 1,500 ரூபாய் தருகிறார்கள். மின்சாரப் படி என்று மிசோரோமில் 452 ரூபாய் தருகிறார்கள். தண்ணீர்க் கட்டணம் என்று இமாச்சலப் பிரதேசத்தில்—தண்ணீர் கட்டணம் என்றால் மினரல் வாட்டர் என்று எல்லாம் இப்போது வந்து விட்டது—தண்ணீர் கட்டணமாக 500 ரூபாய் தருகிறார்கள். இடவசதிப் படி என்று ஆந்திரப் பிரதேசத்தில் 3,000 ரூபாய் தருகிறார்கள். ஈட்டுப் படி என்று 5,000 ரூபாய் அரியானாவில் தருகிறார்கள். நிறை உடைப் படி என்று 1000 ரூபாய் அரியானாவில் தருகிறார்கள். பத்திரிகைப் படி என்று 250 ரூபாய் கேரளாவில் தருகிறார்கள்.

நிறைய படிக்கட்டுகளில் நாங்கள் ஏறினாலும்கூட, எங்களுக்குக் கிடைப்பது என்பது மிகமிகக் குறைவு. அதனால்தான் சம்பளமே வேண்டாம் என்று சொல்கிறோம். தமிழகத்திலே சம்பளமாக கொடுத்துக் கொண்டிருப்பதை, அந்த 2,000 ரூபாயை, அதிலே சேர்க்காமல் கணக்கிட்டுப் பார்த்தால், மொத்தம் 59,902 ரூபாய் வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிலே தள்ளுபடியைக் கூட வேண்டுமானால்.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினை கொண்டு வரக்கூடிய அளவிற்கு ஒரு தவறான கணக்கை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆந்திரா என்று எடுத்துக் கொள்கிறார். கேரளா என்று எடுத்துக் கொள்கிறார், மகாராஷ்டிரா என்று எடுத்துக்கொள்கிறார். எல்லாவற்றையும் கூட்டி 50,000 ரூபாய், 59,000 ரூபாய் என்று சொல்கிறார். எல்லா வகையிலும், ஒரு மாநிலத்தை ஒபபிட்டுப் பார்த்தால் நன்றாக இருக்கும்.

**திரு. சி. ஞானசேகரன்:** அந்த முறையை எடுத்துக்கொண்டாலும் கூட மகாராஷ்டிராவில் உள்ள விவரத்தை நம்முடைய சட்டமன்றச் செயலரிடம் கொடுத்து, நிதிச் செயலர் அவர்களுக்கும்கூட. அது போய்விட்டு வந்திருக்கிறது. காரணம், நாங்கள் சொல்வது பொய் அல்ல; அதைக்கூட சரிபார்ப்பதற்கு இதை முதலிலேயே கொடுத்துவிட்டேன். சரிபார்த்தால், கிட்டத்தட்ட 34,500 ரூபாய் மகாராஷ்டிராவில் தருகிறார்கள். மகாராஷ்டிராவில் தரக்கூடிய சம்பளம் 2,500 ரூபாயை எடுத்துவிடுங்கள், நாங்கள் சம்பளம் வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். ஆகவே, 34,500 ரூபாயிலிருந்து 2,500 ரூபாய் கழித்த பிறகு சுமார் 32,000 ரூபாய் நிச்சயமாக மகாராஷ்டிராவில் கொடுக்கிறார்கள். பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திரப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டாலும்கூட 20,000 ரூபாய் தருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியும். கடந்த ஆண்டு ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சர் 20,000 ரூபாய் என்று ஆக்கினார்கள். 21,500 ரூபாய் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் இங்கே தெரிவிக்கின்றார்கள். ஆகவே, அதிலே சம்பளம் 1,500 ரூபாய் இருக்கும். அதைக் கழித்துவிட்டுப் பார்த்தால் 20,000 ரூபாய் தேறும். சம்பளம் வேண்டாம் என்கிற வாக்கில் நாங்கள் நிச்சயமாக நிற்போம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியதைப்போல, இரண்டு மாநிலங்களை இப்போது எடுத்துக்காட்டாகச் சொல்லியிருக்கிறேன். மகாராஷ்டிராவை எடுத்துக்கொண்டாலும் சரி, இல்லை என்று சொன்னால், பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திராவை எடுத்துக்கொண்டாலும் சரி, இரண்டு மாநிலங்களில் ஏதாவது ஒரு மாநிலத்தை எடுத்துக்கொண்டு—நிதிச் சுமை அதிகமாக இருக்கிறது என்று கருதினால், வேண்டுமானால், மகாராஷ்டிராவை விட்டுவிடலாம். ஆந்திரத்தையாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன் உதாரணமாக எடுத்துக்கொண்டு—சம்பளத்தை அதில் கழித்துக்கொள்ளுங்கள். சம்பளத்தைக் கழித்தபின் படிகளை





மட்டும் தர வேண்டுமென்று நான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலேயும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எப்போதும் உறுப்பினர்களுக்கு சம்பளம் அளிப்பது என்பதில், அதிகம் வாங்குகிறார்கள் என்ற கெட்ட பெயர் வந்து விடும் என்ற நோக்கத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயக்கத்தோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் சொன்னேன். சம்பளம் இல்லை என்று முதல்வர் அவர்களே அறிவிக்க வேண்டும். எங்களுக்குச் சம்பளமே வேண்டாம். வெறும் செலவுகளை மட்டும் ஏற்றுக்கொண்டால் போதும் என்பதுதான் என்னுடைய கருத்து.

இரண்டாவது மகாராஷ்டிராவில் சுமோ கார் கொடுக்கிறார்கள். எப்படி, நீங்கள் ஒவ்வொரு அதிகாரிக்கும் கொடுக்கிறீர்களோ, அதுபோல ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுக்கலாம். பராமரிப்புப் பணியை அரசு பார்த்துக்கொள்கிறது. ஓட்டுநரை அவர்களே கொடுக்கிறார்கள். எரிபொருள் அவர்களே கொடுக்கிறார்கள். எங்கள் உறுப்பினர் பதவி முடிகிறபோது அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் காரை ஒப்படைத்து விட்டுப் போகிறோம். புதிதாக வரக்கூடிய உறுப்பினர்கள் அந்தக் காரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பொறுப்பேற்று எடுத்துக்கொள்ளலாம். ஒரு மாவட்டத்திற்கு 12,9,10 கார்கள் என்ற அளவில்தான் வரும். இப்போது நிறைய அதிகாரிகளுக்கு ஈப்புகள் எல்லாம் வாங்கிக் கொடுத்த முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சுமோ காரை மகாராஷ்டிரத்திலே கொடுத்ததுபோல வாங்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

அதேபோல, ஏற்கெனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவையிலே இந்த மானியக் கோரிக்கை சென்ற முறை வந்தபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கலாம் என்ற ஒரு நிலையைக்கூட எடுத்தார்கள். ஆனால், சில பிரச்சினைகள்; கடனைக் கொடுத்தால் இந்த உறுப்பினர்களிடமிருந்து திரும்ப வாங்க முடியுமா, திடீரென்று பதவி போய்விட்டால் இவர்களிடமிருந்து எப்படி வசூலிப்பது என்ற எண்ணத்திலே விட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களை நம்பி வங்கிகள் எல்லாம் பணம் கொடுக்கின்றன. நீங்களும் கொடுக்கலாம். ஓய்வூதியம் உண்டு. அதிலிருந்து பிடித்துக்

கொள்ளலாம். ஒருவேளை அந்த முறை சரிவரவில்லையென்று சொன்னால், குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாய் கார் வாங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வட்டியில்லாத கடனைத் தந்தால்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் கார் வாங்குவதற்கு அது ஏதுவாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

உத்திரப் பிரதேசத்திலே 50 ஆயிரம் கிலோ மீட்டர் First Class Fare-லே எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் குடும்பத்தோடு பயணம் செய்வதற்கான கட்டணத்தை தருகிறார்கள். அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்களுக்கு இரயில்வே படி முதல் மாதத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் என்றும் அடுத்த 6 மாதத்தில், 5 ஆயிரம் ரூபாய் என்றும் கொடுப்பது எங்களுக்கு வேண்டாம். ஆண்டுதோறும் First Class Fare-லே குடும்பத்தோடு 50 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் செல்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்திரப் பிரதேசத்தை எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டு அதைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

Medical Bill. அதாவது இன்றைய தினத்திலே மருத்துவச் செலவை re-imburse பண்ணுவதில் மிகச் சிரமமான வழிமுறைகள் இருக்கின்றன, நம்முடைய மாநிலத்தில். சட்டமன்ற உறுப்பினர்கள் உரிய பில்லை கொடுத்தவுடன் இரண்டாவது நாளே, பில்போட்டு கொடுப்பதற்கு எளிமையான முறையை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையாள வேண்டும். Medical reimbursement நிறைய பேர் வாங்காமலேயே விட்டுவிடுகிறார்கள். (குறுக்கீடு) வாங்குவதே இல்லை. ஆகவே, அதை வாங்குவதற்கு ஒரு எளிமையான முறையைக் கண்டுபிடித்து ....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எத்தனையோ மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, மருத்துவமனையிலே அவர்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டதற்கான பணத்தை அரசு கொடுத்திருக்கிறது. உதாரணத்திற்கு சுதர்சனம் எம்.எல்.ஏ. அவர்கள் Open-heart Surgery செய்ததற்கான பணத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** Heart surgery போன்ற பெரிய சிகிச்சை பற்றி எல்லாம் நான் சொல்லவில்லை. மற்ற சின்னச் சின்ன செலவினங்கள் எல்லாம் வருகின்றபோது எல்லாம்கூட, யாரும்



bill போட்டு வாங்க முடியவில்லை. அந்தச் சிரமத்தைத்தான் நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். இல்லையென்று சொன்னால், நீங்கள் consolidated ஆக மற்ற மாநிலங்களிலே...

**திரு. சி. வேலாயுதன்:** எனக்குக்கூட அப்பலோ ஆஸ்பத்திரியிலே செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைக்கான மொத்த செலவையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மொத்தச் செலவையும் அரசு ஒத்துக்கொள்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல சில்லறைச் செலவுகளுக்கு bill வாங்க முடிவதில்லை என்பது உண்மை. Bill கேட்டால்கூட கஷ்டமாக இருக்கிறது. 2 ஆயிரம், ஆயிரம் ரூபாய்க்கு bill கொடுத்துவிட்டு, போய் நின்றுகொண்டிருக்கும்போது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னென்ன மாத்திரை வேண்டும் என்று சொல்லிவிட்டால், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, தேவையான மாத்திரைகளையெல்லாம் கொடுக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாத்திரைகள் வேறு வகையிலே போய்விடும், வேண்டாம். (குறுக்கீடு) வயாக்ரா யாரும் கேட்கமாட்டார்கள். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம் உறுப்பினர் விடுதியில் இருக்கக்கூடிய மருத்துவமனை போதுமான வசதி இல்லாத ஒன்றாக இருக்கிறது. ஏதோ, ஒரே ஒரு மருத்துவர் வருகிறார். அவரும் அறையிலே போய் படுத்துக்கொள்கிறார். சட்டமன்ற உறுப்பினர் போய்க் காத்துக்கொண்டிருக்க வேண்டும். ராத்திரியில் மூடிவிடுகிறார். ஆனால், சண்டிகரில் போய்ப்பார்த்தோம், அந்த இடத்தில் 9 டாக்டர்கள் இருக்கிறார்கள். சிறந்த மருத்துவர்களை வைத்துக்கொண்டு 24 மணி நேரமும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விடுதியிலே சிகிச்சை தரப்படுகிறது. அதாவது session இல்லாத நேரத்திலேகூட, சண்டிகரில் 24 மணி நேரமும் மருத்துவமனை இயங்குகிறது. 9 டாக்டர்கள் shift முறையில் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படி நம்முடைய சட்டமன்ற வளாகத்திலும் 9 டாக்டர்கள் வரும் அளவில் சிறந்த மருத்துவமனையை நீங்கள் அமைக்க வேண்டும். சில மாத்திரைகள் வெயிலுக்கு பொங்கிவிட்டது என்று சொல்கிறார்கள். போய்க் கேட்டால் பூசிக்கொள்வதற்கான அந்த மருந்துகூட அங்கே இல்லை. மாத்திரைகள்

சரியாக இல்லை. ஏற்கெனவே, எல்லா மாத்திரைகளும் இருக்கின்றன என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஆனால், அங்கே போனால் எழுதிக் கொடுத்துவிடுகிறார்கள் Medical shop-லே வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, சிறந்த எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு மருத்துவமனையை நீங்கள் அந்த இடத்திலே அமைத்துக் கொடுத்தால்தான் நலமாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, டெல்லியில் இருக்கக்கூடிய தமிழ்நாடு இல்லம். அது ஏனோ நாள் ஆக ஆக தரத்தை இழந்து கொண்டிருக்கிறது. உணவிலும் சரி; அங்கேயிருக்கக்கூடிய பராமரிப்பிலும் சரி; அதைச் சரி செய்வதற்கான சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவை அமைத்தால்கூட நன்றாக இருக்கும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் காஞ்சனா கமலநாதன்):** உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களையே உரையை முடிக்கச் சொல்லலாமா என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். எனவே குறுக்கீடு அதிகம் வேண்டாம்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, புதுடெல்லியிலே தமிழ்நாடு இல்லத்தைப் பொறுத்தவரையிலே அங்கே செல்கின்ற விருந்தினர்கள் தொலைபேசியில் பேசுவதற்கு S.T.D. வசதி செய்யப்படவில்லை. எல்லா மாநிலங்களுடைய விடுதிகளிலும் அந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது. அது அடிப்படை வசதி; அது செய்யப்படவில்லை என்பதை நான் மாநில அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன்.

*முற்பகல் 11-05*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உணவைப் பொறுத்தவரையில் நல்ல தரமான உணவை வழங்க வேண்டும். ஒருவேளை Cook-க்கு சம்பளம் போதவில்லை என்றாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்தை அறிந்து அதிகரித்துக் கொடுத்துவிடலாம். அங்கு தரமான உணவு இல்லை என்பதால், எல்லோரும் ஆந்திரா பவனுக்கு போகிறார்கள். N.V. ஆனாலும்சரி, Vegetarian ஆனாலும் சரி அங்கு நல்ல உணவு இருக்கிறது என்கின்ற





காரணத்தால் அங்கு போகக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. தமிழ்நாடு இல்லம் என்றால், முன்பு நிறைய பேர் அங்கு வந்துதான் சாப்பிட்டுப் போவார்கள்; குடும்பத்தோடு தமிழர்கள் அலை அலையாக வந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால், இப்போது அங்கு உணவு சரியில்லாத காரணத்தால், அவர்கள் அங்கு வருவதில்லை. மேலும், அங்கு பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஒரு குழுவை அமைத்து அதையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நம்முடைய சட்டமன்றம். நம்முடைய சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் விடுதியின் வளாகத்தில் இருக்கக்கூடிய hotel-ஐ cholera canteen என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அங்கே சரியான உணவு இல்லை; அங்கே தரமான உணவு இல்லை. மும்பையில் இருக்கக்கூடிய மனோரா hostel-ல் இருக்கக்கூடிய உணவுவிடுதி ஓர் அருமையான உணவு விடுதியாக இருக்கிறது. அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 25 சதவீதம்தான் உணவுக் கட்டணம் போடுகிறார்கள். உறவினர்கள் அல்லது நண்பர்களோடு சேர்ந்து சாப்பிட்டாலும்கூட அங்கு மானிய விலையிலேதான் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால், மற்றவர்களுக்கு எல்லாம் முழு விலை; சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதில் 25 சதவீதம் மட்டுமே. அங்கு நாங்கள் 5 பேர் போயச் சாப்பிட்டோம். நாங்கள் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொன்ன பின்னாலேயும்கூட, பரவாயில்லை, உறுப்பினர்கள் என்று சொன்னால், உங்களுக்கும் அந்த 25 சதவீதம்தான் என்று சொன்னபோது, நாங்கள் 5 பேர் சாப்பிட்டும்கூட எங்களுக்கு என்னவோ 12 ரூபாய் தான் bill வந்தது. (குறுக்கீடு) அருமை அண்ணன் பழனிசாமி அவர்கள் சொல்கிறார்கள், 5 ரூபாய்தான் பில் வந்தது என்று. நாங்கள் எல்லாம் அங்கே சாப்பிட்டபோது அதன் விலையில் 25 சதவீதம்தான் bill போட்டார்கள். எங்களுக்குத் தரமான உணவையும் அளித்தார்கள்; அதேநேரத்தில் மானிய விலையிலும் அளித்தார்கள். அதைப்போல இங்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாராளுமன்றத்தில் இருப்பதுபோல இங்கு எங்களுக்கு ஒரு central hall வேண்டும். அங்கே பொதுவாக பாராளுமன்ற உறுப்பினர்கள் வீட்டிற்குப் போய்ச் சாப்பிடுவது இல்லை; central hall-லேயே சாப்பிட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். அந்த அளவிற்கு அங்கு தரமான

உணவைக் குறைந்த விலையில், சிக்கனாக இருந்தாலும், பிரியாணியாக இருந்தாலும், vegetarian உணவான தயிர் சாதமாக இருந்தாலும், அதேபோல பழ ரசமாக இருந்தாலும்கூட எல்லாமே central hall-லே மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக இங்கே ஓர் இடத்தில் வருகிற ஆண்டில் நிச்சயமாக ஒரு central hall உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய நிருபர்களுக்கு பாராளுமன்ற நிருபர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். இந்த அலுவலகத்தில் பணியாற்றக்கூடியவர்கள் எல்லாம் நீண்ட நேரம் பணியாற்றுவதால், Over time பணி செய்பவர்களுக்கு அதற்கான பணத்தை அதிகரித்துக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய சட்டமன்றத்திலே temporary-யாகப் பணியாற்றிக்கொண்டு இருப்பவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் Chief Secretary-க்கு இணையானவர்கள் என்ற protocal இருக்கிறது. ஆனால், சில இடங்களிலே T.B.-க்கு போகிறபோது, IAS-க்கு அடுத்தபடியாகத்தான் கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு இடம் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், உறுப்பினர்களுக்கு இடம் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, protocal-படி எல்லா இடங்களிலும், Chief Secretary-க்கு இணையானவர்கள் என்று இருக்கிற காரணத்தினாலே, போகிற இடங்களில் எல்லாம் தங்குவதற்கு இடம் கொடுக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், சேப்பாக்கம் Guest House-ல்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கொடுப்பதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஏற்பாடு செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் இல்லை என்று சொன்னால், புதிதாக நீங்கள் ஒரு வளாகத்தைக் கட்டலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் வசதியோடு தங்கக்கூடியவர்கள்; அவர்களோடு நண்பர்கள் வந்தால் அவர்களுக்கு நாங்கள் அறை ஒதுக்க முடியவில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கக்கூடிய அளவில் சேப்பாக்கம் Guest House-ல்கூட எங்களுக்கு இடம் அளிப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து சிகப்பு விளக்கு. மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர் சிகப்பு விளக்கைப் பொருத்திக்கொண்டு போகிறார். பால் பண்ணை ஒன்றிய தலைவர் சிகப்பு விளக்கைப் பொருத்திக்கொண்டு போகிறார். மற்றவர்கள் எல்லாம் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஒன்று அவர்களையாவது எடுக்கச் சொல்லுங்கள்; இல்லை என்று சொன்னால், (குறுக்கீடு) சரி, அவர்களிடம் இருந்து எடுக்க வேண்டாம்; சட்டமன்ற உறுப்பினர்கள் Chief Secretary-க்கு இணையானவர்கள் என்று சொல்கிற காரணத்தினால், அவர்களுடைய வண்டிக்கும் சிகப்பு விளக்குகளை பொருத்திக்கொள்ளலாம் என்கின்ற ஆணையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாகப் பரிசீலித்து அறிவிக்க வேண்டும். சிகப்பு விளக்குகளை எல்லாம் குறைப்பேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு சொன்னார்கள். நாங்களும் அது குறையுமா என்று பார்த்தோம்; அது குறையவில்லை. ஆகவே, சிகப்பு விளக்குகளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் கார்களில் பொருத்திக்கொண்டு போவதைப்போல சட்டமன்ற உறுப்பினர்களும் பொருத்திக்கொள்ளலாம் என்று நீங்கள் அறிவித்துவிட்டாலும் பரவாயில்லை என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பவளவிழா நினைவாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேலூருக்கு பல்கலைக்கழகம் நிச்சயமாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, எங்களுடைய வேலூருக்கு உடனடியாக ஒரு பல்கலைக்கழகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைத்துத் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பதினோராவது சட்டமன்றப் பேரவையின் 4 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா காணுகின்ற இந்த நேரத்தில் அனைவருக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் இல்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து படிக்கட்டுகளில் ஏறிக்கொண்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு படிகளையாவது ஏற்றித்தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் காஞ்சனா கமலநாதன்):** திரு. ஏ. ராசேந்திரன்.

*முற்பகல் 11-10*

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற மானியங்களில் மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள் ஆகியவற்றில் என்னுடைய கருத்துகளைச் சொல்லலாம் என்றிருக்கிறேன்.

மாநிலச் சட்டமன்றம் என்கிறபோது நாங்களெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, பல்லாண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினர் விடுதி புதிதாகக் கட்டப்பட வேண்டுமென்று, வேண்டுகோள் விடுத்தோம். அந்த வேண்டுகோளை ஏற்று கலைஞர் அவர்களும், இந்த அரசும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புதிதாக சட்டமன்ற உறுப்பினர் விடுதி கட்டுவதற்காக முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைக்கும்போதெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் "நம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுக்காக நாம் உழைக்க வேண்டும்; நமக்கு நாமே சம்பளத்தை அதிகமாக்கிக் கேட்பது, படிகளை அதிகமாக்கிக் கேட்பது, என்றால் மக்கள் நம்மை வேறுவிதமாகப் பார்ப்பார்கள்" என்று சொல்கிறார்கள். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் சொன்னபடி, எங்களுடைய கோரிக்கைகளை நீங்கள் கனிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் நாங்கள் பணியாற்றும்போது எங்களுக்கு ஓர் உதவியாளர் வேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களாலும் வைக்கப்பட்டு வருகிறது. ஏனென்றால், எங்களுக்கு வருகின்ற தபால்களை—நாங்கள் Postman உத்தியோகம் செய்தாலும் அந்தத் தபால்களை—உரிய அமைச்சரிடத்திலே கொடுப்பதற்கு ஓர் உதவியாளர் வேண்டுமென்று பல்லாண்டு காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நிதிநிலை நெருக்கடி இருந்தபோதும், இதை மனமுவந்து நம்முடைய கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலுள்ள canteen-ஐ cholera canteen என்று சொன்னார்கள். உண்மைதான். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கின்ற canteen மோசமாக உள்ளது. இப்போது சென்னையில் இருக்கின்ற தரமான உணவகம் 'சரவணபவன்'—இந்த சரவணபவன் போன்று—அதைக்கூடச் சொல்லவில்லை. அதைப்போன்ற —தரமான உணவகங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நிறுவ நீங்கள் tender மூலம் கோரி அல்லது அவர்களிடம் நேரடியாகப் பேசி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இதற்கு முன்பு, சென்ற ஆண்டிலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பாராளுமன்றத்தில் இருப்பதைப்போன்று, இங்கு ஒவ்வொரு துறைக்கும் ஒரு standing advisory committee இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். கல்வித் துறை அல்லது பொதுப் பணித் துறை, சட்டத் துறை குறித்த மானியங்கள் வரும்போது, அந்த standing advisory committee-யிலே அவையெல்லாம் விவாதிக்கப்பட்டு, அதன் பிறகு இங்கு சட்டமன்றத்திலே வைக்கப்பட வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். பொது நிறுவனங்களுக்கு என்று ஒரு குழு இருக்கிறது. ஆனால், கூட்டுறவு நிறுவனங்களைக் கண்காணிக்க ஒரு குழு இல்லை. அதற்கும் ஒரு குழு அமைக்க வேண்டும். இப்போது சம்பள உயர்வு குறித்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கேட்காவிட்டாலும், சம்பளம் உயர்த்த வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளம், படிகள் இவற்றை நிர்ணயிப்பதற்காக ஒரு குழு அமைத்தால், அந்தக் குழுவினுடைய சிபாரிசின்பேரில் நம்முடைய அரசு செயல்பட மிக ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதைப்போல் Private Member's Bill Committee, Ethics Committee. General Purpose Committee, Committee on Leave of Absence of Members, போன்ற குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். எங்களுக்குக்கூட, அரசுக் கொறடா அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் எத்தனை நாட்கள் சட்டமன்றத்திற்கு வரவில்லை என்கிற ஓர் அறிவிப்பைத் தந்தார்கள். இதையெல்லாம் எப்படி ஒழுங்குபடுத்துவது? ஏன் என்றால், வெளியிலிருந்து பார்க்கின்ற பார்வையாளர்கள் சட்டமன்றத்தைப் பார்க்கும்போது, ஒரு சிலராவது குறைந்திருந்தால் ஏன் இவர்கள் எல்லாம் வரவில்லை என்றுகூட நினைக்கக்கூடும். அதற்காக எப்படி இதைச் சீர் செய்யலாம், எப்படி ஒழுங்குபடுத்தலாம் என்பதை ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய சட்டமன்றத்திலே பணிபுரிகின்ற நிருபர்கள்பற்றி இப்பொழுதுகூட பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்றப் பேரவை நிருபர்கள் கடினமாக உழைக்கின்றார்கள். பேரவைக் கூட்டம் நடைபெறும்போது, அவைக் குழு, மதிப்பீட்டுக் குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகிய குழுக் கூட்டங்களும் நடைபெறுகின்றன. அப்பொழுதெல்லாம் அவர்களுடைய உழைப்பு மிகவும் அதிகமாக இருக்கிறது. அவர்கள் சிரமப்படுகிறார்கள். எனவே,

சட்டமன்ற நிருபர்களுக்கு பாராளுமன்ற நிருபர்களுக்கு இணையான சம்பள விகிதம் வழங்கப்பட வேண்டும். பாராளுமன்ற நிருபர்களுக்கு ஒத்த அடிப்படை ஊதியம் இவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். சிறப்பு ஊதியமாக 800 ரூபாய் இவர்களுக்கும் அளிக்கப்பெற வேண்டும். வடமாநிலங்களுக்கு சட்டமன்றக் குழுக்கள் செல்லும்போது, நிருபர்களும் உடன் செல்கின்றார்கள். அந்தச் சமயத்தில் சட்டமன்றப் பேரவை நிருபர்கள் அனைவருக்கும் அளிக்கப்படும் தினப் படியை உயர்த்த வேண்டும். சட்டமன்றப் பேரவைக் கூடும் நாட்களில் அனைத்து நாட்களுக்கும் சட்டமன்ற நிருபர்களுக்கு O.T. அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தந்தால் அது மிகவும் சிறப்பாக இருக்கும். மேலும், வீடு கட்டுவதற்கான கடனை ரூ. 7½ இலட்சமாக உயர்த்தித் தரவேண்டும். அவர்கள் பல்லாண்டு காலமாக இந்தக் கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் கனிவோடு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அவர்களுக்குத் தனியாகக் கடன் வேண்டுமென்றும் சொன்னார்கள். இமாசலப் பிரதேசத்தில் வழங்குவதைப்போன்று 6 இலட்சம் ரூபாய் கடன் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த 6 இலட்சம் ரூபாயைக் கடனாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அந்தக் கடனைக்கூட எப்படித் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று அரசு சொல்கிறதோ, அப்படி அதனை நிர்ணயித்துக்கொள்ளலாம் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, சென்ற ஆண்டு நம்முடைய கலைஞர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அந்தந்தத் தொகுதியில் அவர்கள் அலுவலகம் அமைத்துக்கொள்வதற்கான பணம் ஒதுக்கப்படும் என்று அறிவித்தார்கள். அது இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நிதி நெருக்கடியின் காரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று நினைக்கின்றேன். இருந்தாலும், அதை எப்படியாவது சரிசெய்து, அதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தேர்தல்கள்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) தேர்தல்கள் நடக்கும்பொழுது, மலைவாழ் மக்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. 500 மக்கள் தொகை இருந்தாலே



அந்த இடத்தில் வாக்குச்சாவடி அமைக்கவேண்டும். குறிப்பாக, போளூர் தொகுதியில் ஜவ்வாது மலை ஒன்றியம் இருக்கிறது. அந்த ஜவ்வாது மலை ஒன்றியத்தில் 15, 16 கி.மீ. தூரம் நடந்து சென்று ஓட்டுப் போடுகிறார்கள். இவற்றையெல்லாம் மாற்றி, மலைவாழ் மக்கள் இருக்கிற பகுதியில் வாக்குச்சாவடி அமைக்கவேண்டும். அதே சமயம், பல்வேறு தொகுதிகளில் 3, 4 கி.மீ. தூரம் நடந்து வந்து வாக்களிக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் வாக்குப் பதிவு குறைந்துவிடுகின்றது என்று கருதுகின்றேன். இதையெல்லாம் சரிசெய்வதற்கு குறைந்தது ஒரு கி.மீ.க்கு மேலாக மக்கள் நடந்து சென்று வாக்களிக்கும் நிலையை மாற்றிடவேண்டும். அப்படிச் செய்தால்தான் வாக்குப் பதிவு அதிகமாக இருக்கும். அதற்கும் நம்முடைய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். தேர்தல் பற்றி இன்னும் நிறைய பேசவேண்டுமென்று நினைத்தாலும், நேரத்தின் அருமை கருதி, இந்தத் தேர்தல்கள் சிறப்பாக நடைபெறவேண்டும்; அதற்கு இப்பொழுதே அந்தந்தத் தொகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் கோருகின்ற இடத்தில், அதாவது ஒரு கி.மீ.-க்கு மிகாமல், மக்கள் நடந்து செல்வதைத் தவிர்க்க, வாக்குச் சாவடியை அமைக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் காஞ்சனா கமலநாதன்):** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'ஓய்வூதியங்களும், ஓய்வுகால நன்மைகளும், மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் மற்றும் பல்வகை, ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுவாக நமது சட்டமன்றக் கூட்டத்தை போதிய கால அவகாசம் இல்லாமல், போதிய நாட்கள் இல்லாமல், நடத்திக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வகையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட அளவிற்கு அனைவரும் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. பேசுகிறபோதுகூட, தொகுதியில் செய்யப்பட்டு இருக்கின்ற நல்ல திட்டங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு, கோரிக்கைகளை வைக்கிறபோது மணி அடித்தவுடனே, வாயை அடைத்துவிடுகிறோம். மணி அடித்தால் போயிற்று. அவ்வளவுதான், பேச்சே வருவதில்லை. இரண்டாவது மணி அடித்தால், கையில் உள்ள பேப்பர், குறிப்பு

எல்லாம் பறந்து போய், அப்புறம் எதைப்பற்றிப் பேசுவது என்று தெரியாமல் போய்விடுகிறது. ஆகவே, சட்டமன்றக் கூட்டங்களுக்கான நாட்களை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே இரண்டு மானியக் கோரிக்கைகளை ஒரே நாளில் எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, ஒவ்வொரு மானியக் கோரிக்கையாக நாம் எடுத்துக்கொள்ளலாம். இன்னும்கூட இதை அதிகப்படுத்தி, பெரிய துறைகளுக்கு இரண்டு நாட்கள் என்று ஒதுக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

அதோடு மட்டுமல்லாமல், தொடர்ச்சியாகப் பார்த்தால், ஒவ்வொரு மானியத்திலும், ஒவ்வொரு துறையிலும், அதிகாரிகள் தயாரிக்கின்ற அந்தக் குறிப்புகள்தான்—இன்னும் சொல்லப்போனால் நிதிநிலை அறிக்கைகூட—வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு துறையினுடைய மானியக் கோரிக்கைகளும் அதிகாரிகள் ஆண்டுதோறும் தயார் செய்கின்ற அதே நிலையில்தான் சற்று மாறுபட்டு வருகிறது. புதிய அறிவிப்புகளும், திட்டங்களும் மட்டுமே வந்துகொண்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தில்—இமாச்சலப்பிரதேசத்திற்கு நாங்கள் சென்றபோது சொன்னார்கள்—பட்ஜெட் விவாதத்தின்போது ஒரு சில உறுப்பினர்களை மட்டுமே கொண்ட அந்தத் துறையைச் சார்ந்திருக்கின்ற நிலைக் குழுவை அமைத்து அதன் மூலமாக விவாதிக்கின்ற நிலை இருக்கிறது. அதன் மூலமாகப் பிரதான வாய்ப்பை உருவாக்க முடியும் என்பதால் நம்முடைய மாநிலத்திலும்கூட இதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அந்த வகையில் நம்முடைய மாநிலத்திலும் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பொது நிறுவனங்கள் குழு, பிரதானமான அந்தக் குழு ஆய்வுப் பயணங்களுக்குச் செல்வதன் மூலமாகப் பயனுள்ள திட்டங்களில், நடைபெறுகின்ற தவறுகள், அதிகாரிகளுடைய அலட்சியப் போக்குகள் போன்றவற்றைக் கண்டறிந்து திருத்துவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் குழு செல்லுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுகிறார்களா என்பது வேறு. இருந்தாலும்கூட இப்போது கூட்டுறவுத் துறை, அநேகமாக பொது



நிறுவனங்கள் குழு சென்று பார்ப்பதற்கு வாய்ப்பே இல்லாத துறையாக இருக்கிறது. பொது நிறுவனங்கள் குழு இதையெல்லாம் பார்ப்பதற்கு அனுமதியை வழங்க வேண்டும். அதன் மூலமாக அரசினுடைய திட்டங்களை விரைவாகச் செய்வதற்கு வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை, தமிழ்நாட்டில் கடந்த காலத்தில் செய்ய முடியாத திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திற்கான புதிய நவீன முறையிலேயான ஒரு சட்டமன்ற அலுவலகத்தைக் கட்டுவது குறித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்தார்கள். அதுபோன்ற சட்டமன்ற அலுவலகத்தைக் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் புதிய வீடுகள் கட்டப்படுகின்றன. மிகவும் தரமான முறையிலே, விரைவான முறையிலே அந்தப் பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அந்த அளவுக்கு அந்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதேபோன்று ஒரு புதிய சட்டமன்ற வளாகத்தைத் தமிழகத்திற்குத் தாங்கள் கொடுக்க வேண்டும். மகாராஷ்ட்ரா போன்ற மாநிலங்களில் இரண்டு இடங்களில் சட்டமன்றத்தை நடத்துகிறார்கள். மகாராஷ்ட்ராவில் சிறந்த முறையில், நவீன முறையில் இருக்கக்கூடிய வகையில், ஒரே வளாகத்தில் இருக்கும் வகையில் அங்கே சட்டமன்றம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல நம்முடைய தமிழ்நாட்டிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பணியைச் செய்ய வேண்டும். அதையும் செய்வதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஓய்வூதியத் திட்டத்தைப் பார்த்தோம் என்றால், குறிப்பாக வாரிசுதாரர்களுக்கு வேலை அளிப்பதில் சட்டச் சிக்கல் இருக்கின்றது. வாரிசுதாரர்களுக்கு வேலை அளிப்பதைப் பொறுத்தவரையில் அரசுப் பணியில் இருக்கும்போது கணவன் இறந்துவிட்டால் மனைவிக்கு வேலை வாய்ப்பு வழங்க வாய்ப்பு இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் 1988-ஆம் ஆண்டு இறந்துபோனவரின் வாரிசுக்குத் தீயணைப்புத் துறையில் இன்றுவரை வேலை கிடைக்கவில்லை. ஏனென்றால் பெண்களுக்கு அங்கே வேலை வாய்ப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே

அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வேறு துறைகளில் ஏதாவது வேலை வாய்ப்பை அளிப்பதற்குண்டான முயற்சிகளை நம்முடைய அரசு எடுக்க வேண்டும். இதுபோன்ற துறைகளில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது, தீவிரமான பணி என்கின்ற காரணத்தால் முடியாது என்று சொல்லுகிறார்கள். இன்னொரு துறையைப் பார்த்தால், தஞ்சை மாவட்டத்தில் ஒருவர் அரசு வழக்கறிஞராகப் பணியாற்றியிருக்கிறார். அவருடைய வாரிசு பேராசிரியருக்குப் படித்திருக்கிறார். அங்கே பார்த்தால் கிளார்க் வேலைதான் அந்த வாரிசுதாரருக்குக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இப்படி உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, கருணை அடிப்படையில் சில பணிகளை உருவாக்கிக் கொடுப்பது என்பது பிரதானமாக அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். இதுபோன்ற பணிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் தலைமை)**

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்து எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அவர்களுக்கு மருத்துவப்படி என்று பணம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் மருத்துவப்படியை வாங்க வேண்டுமென்றால் டாக்டர்களைப் பிடித்து அவர்களிடத்திலே *200* ரூபாய், *300* ரூபாய் என்ற அளவில் காசு கொடுத்து, பொய்யான சான்றிதழ் வாங்கி வந்து இங்கே கொடுத்து அந்தப் பணத்தை வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அந்தச் சலுகையான மருத்துவப்படியை ஓய்வூதியத்துடன் வழங்கலாம். இதுகுறித்து நம்முடைய அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போன்று சட்டமன்றத் தொகுதிகளில் ஒரு முக்கியமான இடத்தில், எந்தக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் சந்தித்து மனு கொடுப்பதற்கு அல்லது சிபாரிசு கேட்பதற்கு ஏற்ற வகையில் சட்டமன்ற உறுப்பினருக்கான அலுவலகத்தைக் கண்டிப்பாகக் கட்டிக்கொடுக்க வேண்டும். அதோடு இப்போது பார்த்தோமானால், ஒரு chairman



இருக்கிறார் என்று சொன்னால், அவருக்கு ஒரு peon இருக்கிறார்; ஒரு jeep இருக்கிறது; எல்லாம் இருக்கிறது. அதுபோல் சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு peon அல்லது ஒரு உதவியாளரையாவது நாம் நியமிப்பது என்பது அவசியமாக இருக்கிறது. நிறைய மனுக்கள் வருகின்றன. நிறைய இடங்களுக்குப் போகிறோம்; கிராமங்களுக்குப் போகிறோம். அப்படிப் போகின்றபோது, என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்லி, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும், அநேகமாக எல்லாவற்றையும் அவர்கள் மனதிலே வைத்துச் செய்வது என்பது ரொம்பக் கடினம். அப்பொழுது பெற்ற அந்த மனுக்கள் குறித்தெல்லாம் நாங்கள், திரும்ப இரவு பகலாக உட்கார்ந்து எழுதி அமைச்சர்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். பதில் வருகிறதா, இல்லையா என்பது வேறு. இருந்தாலும், அந்தக் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, அதுபோன்ற அந்த உதவிகளை நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி—தலைவர் அவர்கள் அங்கே இருந்துகொண்டு, மணி அடிக்கவா என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்—இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:*** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் எங்களுக்குச் சம்பளமே வேண்டாம் என்றெல்லாம் சொன்னார்கள். அதை வழிமொழிந்து, நானும் சொல்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு சம்பளம் மற்றும் படியெல்லாம் சேர்த்து, *9,000* ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அதிகப்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டாலும், இந்த *9,000* ரூபாய் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. பொதுவாக, ஆடம்பரமேயில்லாமல், சாதாரணமாக, என்னுடைய செலவு என்று பார்த்தாலே, நான் என் தொகுதியிலே குடியிருக்கின்ற இடத்திலே வீட்டுவாடகை ரூ. *1,000* ஆகின்றது; தொலைபேசிக் கட்டணம் ரூ. *6,500* ஆகின்றது; S.T.D.

[திரு. அ.வ. அப்துல் நாசர்] [1999 மே 13

செலவு உட்பட. இதுபோக, மின் கட்டணம் 412 ரூபாய் ஆகின்றது. அதைப்போல, ஓட்டுநர் சம்பளம் ரூ. 1,500; படியெல்லாம் சேர்த்தால் ரூ. 2,500 ஆகின்றது. அதுபோக, உதவியாளரை நியமித்தால், அவருக்கும் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படிப் பார்ப்போமேயானால், சாதாரணமாகக் குடும்பச் செலவு, மற்றும் இதையெல்லாம் பார்ப்போமேயானால், குறைந்தபட்சம், ஆடம்பரமேயில்லாமல், நிதானமாகச் செலவு பண்ணினாலே 20,000 ரூபாய் தேவைப்படுகிறது. இந்த 20,000 ரூபாய் என்பது மிகவும் அவசியமான செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து, எங்கள் மீது கருணை காட்டவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், மக்களின் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய நாங்களெல்லாம் நேர்மையாக இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புவதோடு, ஒரு நல்ல ஆட்சியை இந்த மக்களுக்குத் தந்துகொண்டிருக்கிறீர்கள். அதேபோல, நாங்களும் நல்லவர்களாக இருக்கவேண்டும் என்றும் நீங்கள் நினைக்கின்றீர்கள். எனவே, நிச்சயமாக எங்களுடைய தேவைகளை நீங்கள் நிவர்த்தி செய்கின்றபோது, நிச்சயமாக நாங்கள் நேர்மையானவர்களாக நடந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். சென்ற ஆண்டுகூட, துக்ளக் சோ அவர்கள் தன்னுடைய பத்திரிகையிலே எழுதியிருந்தார்கள். "சட்டமன்ற உறுப்பினர்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்வதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும்; அவர்கள் நேர்மையாக நடந்து கொள்வார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு இலட்சம்கூட சம்பளம் கொடுக்கலாம்" என்று எழுதியிருந்தார்கள். எனவே, நாங்களும் நேர்மையாக நடக்க வேண்டும்; இந்த ஆட்சி நல்லமுறையிலே நடக்க வேண்டுமென்று விரும்புகிற தாங்கள் நிச்சயமாக எங்களது தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே நீங்கள் சம்பளத்தை உயர்த்தித் தருவீர்கள்; அந்தப் படிகளையெல்லாம் உயர்த்தித் தருவீர்கள் என்று நம்புகிறோம்.

அதுமட்டுமல்ல, இப்போது சட்டமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் தொகை குறைவாக இருந்ததை நீங்கள் 3,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். ஏனென்று சொன்னால், சில சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடம் சொல்லும்போது சொன்னார்கள்; சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து சென்ற பிறகு, மீண்டும் வேறு எந்த வேலைக்கும் செல்ல முடிவதில்லை என்றார்கள். அவர்கள் வேறு



1999 மே 13] [திரு. அ.வ. அப்துல் நாசர்]

எந்தவிதமான பணியிலும் சேர்ந்து செயல்பட முடியாததனால், அவர்கள் தனித்து விடப்படுகின்றார்கள். குடும்பத்தில் அவர்கள் ஓரங்கட்டப்படுகின்ற ஒரு நிலைமை ஏற்படுகின்றது. எனவே, இந்த 3,000 ரூபாய் ஓய்வூதியம் என்பதைத் தயவுசெய்து 6,000 ரூபாயாக நீங்கள் ஆக்கினீர்களென்று சொன்னால், நிச்சயமாக ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறக்கூடிய நிலையில், குடும்பத்தாரால் அவர்கள் கவனிக்கப்படக்கூடிய ஒரு கண்ணியமான ஒரு நிலை அவர்களுக்கு ஏற்படும். அவர்களுடைய சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இது பயன்படும் என்ற வகையிலே அவர்களுக்கு 6,000 ரூபாயாக நீங்கள் ஓய்வூதியத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதைக் குடும்ப நல ஓய்வூதியமாக மாற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள் மரித்துவிட்டபிறகு, அவருடைய குடும்பத்தில் உள்ளவர்கள், அவருடைய மனைவியை ஒதுக்கிவிடக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். அவர்களுக்கு இந்த உதவித் தொகை கிடைக்குமென்று சொன்னால், நிச்சயமாக அவர் அந்தக் குடும்பத்தில் கண்ணியமாக நடத்தப்படக்கூடிய நிலைமை ஏற்படும்; அவருடைய பாதுகாப்பிற்கும் உகந்ததாக இருக்கும் என்பதால் இந்த ஓய்வூதியத்தைத் தயவுசெய்து குடும்ப நல ஓய்வூதியமாக மாற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, உறுப்பினர்கள் இறந்துவிட்டால் வழங்கப்படுகின்ற ஒரு இலட்ச ரூபாய் உதவி நிதியை ஐந்து இலட்ச ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களில் வசதியானவர்கள் நிறையப்பேர் இருக்கலாம். ஆனால், ஏழைகளும் இங்கே இருக்கின்றார்கள். அதாவது, அடித்தட்டு மட்டத்திலேயிருந்து வந்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்களுடைய நிலைமையைக் கருத்தில் கொண்டு தாங்கள் அதை உயர்த்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-30*

இப்போதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளிடம் எந்தத் தகவலைச் சொன்னாலும் அவர்கள் சரிவரச் செய்து தருவதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால் என்னுடைய

தொகுதியில் கடந்த வாரம் என்னிடம் ஒரு நண்பர், பம்பாயிலிருந்து வந்த சுயம்பு என்பவர் ஒரு புகாரைக் கூறினார். நமது சென்னையிலே இப்போது ரூபாய் நோட்டை இரட்டிப்புச் செய்து தருவது என்ற மோசடி மிகப் பெருமளவில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மோசடிக் கும்பலிடம் அந்த சுயம்பு என்பவர் மாட்டிக்கொண்டார். அவரை ஏமாற்றி அவரிடமிருந்து 8¼ இலட்ச ரூபாய்வரை பணத்தை ஏமாற்றி இருக்கிறார்கள். அவரை ஏமாற்றிய அந்தக் கும்பலில் உள்ளவர்களின் பெயர்களை என்னிடம் குறிப்பிட்டுச் சொன்னார். அதாவது செக்ரடேரியட் காலனியைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவர் அந்தக் கூட்டத்திற்குத் தலைவராக இருக்கிறார். அவருக்கு ஏஜெண்டுகளாக இருக்கக்கூடியவர்கள் ஜாவீது, கமலக்கண்ணன், ரஷீது என்ற வாணியம்பாடியைச் சேர்ந்தவர்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். தயவுசெய்து இதை நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** அது மட்டும் அல்ல, அவருக்குப் பாதுகாப்பாகக் குண்டர் படை ஒன்று இருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆசாத் என்பவரும், ஹாஜா என்பவரும் அவருக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். அவரிடம் போய் அந்தப் பணத்தைத் திருப்பிக் கேட்டபோது, 8¼ இலட்ச ரூபாயைத் திருப்பிக் கேட்டபோது 1 இலட்ச ரூபாய்தான் தருவேன், இல்லை என்றால் உன்னைக் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி அவரைத் திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். இதுகுறித்து நான் காவல் நிலையத்திலே கேட்டபோது "இரண்டு இலட்சம் வரை தான் காவல் நிலையத்திலே பார்க்கமுடியும். எனவே Central Crime Branch-க்கு செல்லுங்கள் என்று சொன்னார்கள். அந்த அதிகாரியைத் தொடர்பு கொண்டு நான் சொன்னபோது சட்டமன்ற உறுப்பினருக்கு அவர் அளிக்கிற பதில் என்ன என்று சொன்னால், நீங்களே அவர்களைக் கூப்பிட்டுப் பேசினால் பாதித் தொகையைத் தந்துவிடுவார்கள். அதை வாங்கிக் கொண்டு பிரச்சினையை முடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார். இப்படி அவர்களே கட்டைப் பஞ்சாயத்து செய்யக்கூடிய நிலைமை—இந்தக் காவல் துறை அதிகாரிகள்—எதற்கு என்று தெரியவில்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் கொடுக்கக்கூடிய புகாருக்கே இந்த நிலைமை என்று சொன்னால் பொதுமக்கள் கொடுக்கக்கூடிய புகாருக்கு என்ன



பதில் கிடைக்கும் என்பதைத் தாங்கள் உணர்ந்து பார்த்து உரிய நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட அந்த நபருக்கு நியாயம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பை அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பல்வகை மூலதனச் செலவு மற்றும் இதர மானியக்கோரிக்கைகள் மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசுவதிலே மகிழ்ச்சியடைகின்றேன். ஜனநாயகத்தினுடைய மிகப் பெரிய பலவீனமாக இருப்பது தேர்தல் செலவுகள் என்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தேர்தல் செலவுகள் அபரிமிதமாக ஆகின்றபோது பல ஒழுங்கீனங்கள் அரசியல் ஒழுக்கத்தைமீறி வருவதற்கு ஏதுவாக அமைந்து விடுகிற நிலையைக் கருத்தில் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடைய வேட்பாளர்களுடைய செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை நான் முன்வைக்க விரும்புகின்றேன். இந்தியாவில் இருக்கிற பிற மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்கின்றபோது நம்முடைய தென்னிந்திய மாநிலங்களுக்கும், அங்கே இருக்கக்கூடிய மாநிலங்களுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் தென்படுகிறது. மிகப் பெரிய வித்தியாசங்கள், விளம்பரங்கள், கட் அவுட்டுகள் போன்ற கலாச்சாரம் நம்முடைய தென்னிந்தியாவில்தான், குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டிலும், பக்கத்து மாநிலமான ஆந்திராவிலும்தான் அதிகமாகக் காணப்படுகிறது. ஆகவே ஒரு போஸ்டர் அடிப்பது என்றால்கூட இந்த அளவில்தான் அடிக்க வேண்டும், அதற்கு மேல் அடிக்கக்கூடாது என்று விதிமுறைகளை மிகவும் கண்டிப்பாக நிறைவேற்றி தேர்தல் செலவுகளை, பொதுவாக அரசியல் கட்சி சம்பந்தப்பட்ட செலவுகளைக் குறைப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு ஆவன செய்ய அரசு முன்வரவேண்டும். மத்திய அரசை வலியுறுத்தி இந்தக் கருத்தினை நிலைநாட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையிலே ஏற்கெனவே நடந்த கூட்டத் தொடரிலே அவர்களுக்குக் கணினி வழங்க வேண்டும்,

அதேபோல உதவியாளர் வழங்க வேண்டும் என்ற அடிப்படையான கோரிக்கைகள் வைக்கப்பட்டன. ஆனால் இதுவரை அந்தக் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை. எனவே அவற்றை ஏற்று அரசு உதவ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக ஒரு ஒன்றியத் தலைவருக்கு இருக்கின்ற வசதிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்பதை நாம் இங்கே நினைவுகொள்ள வேண்டும். தனக்கென்று ஓர் அலுவலகம், ஒரு வாகனம் போன்ற அடிப்படைத் தேவைகள் அனைத்தும் ஒரு Union Chairman-க்கு இருக்கிறபோது சட்டமன்றப் பேரவை உறுப்பினருக்கு அத்தகைய வசதிகள் இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும் என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அளிக்கின்ற கோரிக்கைகளுக்கும், எல்லாக் கடிதங்களுக்கும் துறையிடமிருந்து சரியாக பதில் வருவதில்லை. பாராளுமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அனுப்புகிற அத்தனை கடிதங்களுக்கும் குறிப்பிட்ட காலவரையறைக்குள்—அவர் அமைச்சராக இருக்கட்டும் அல்லது அதிகாரியாக இருக்கட்டும், குறிப்பிட்ட கால அளவில்—பதில் அளிக்கப்பட்டு அந்தக் கோப்பு நிறைவு செய்யப்படுகிறது. ஆனால் நம்முடைய அரசாங்கத் துறைகளிலே, அத்தகைய நிலை இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு தொலை தொடர்புச் சாதனங்கள், Fax, E-Mail போன்ற பல்வேறு சாதனங்கள் அதிநவீன சாதனங்கள் வந்துவிட்ட நிலையிலே, ஓராண்டு, ஈராண்டு காலக்கெடு என்று எங்களுக்குப் பதில் அளிப்பது, வருந்துதற்குரிய நிலை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விழைகிறேன். அத்தகைய தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும்; முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

*முற்பகல் 11-35*

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களுடைய தொகுதியிலே, 5 இலட்ச ரூபாயிலே ஓர் அலுவலகம் கட்டிக் கொடுக்கலாம் என்று சென்ற கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்பட்டது. இந்நாள் வரை அத்தகைய காரியம் நடைபெறவில்லை என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். இதற்கு மேலாகக்கூட—மாதம் 5 ஆயிரம் ரூபாய் வாடகைகூட கொடுப்பதற்கு—மாற்றுத் திட்டம் இருப்பதாக நான் அறிந்தேன். ஆனால், அதையும் செயல்படுத்தவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.



குறிப்பாக, சட்டப் பேரவை உறுப்பினர்களைப் பொறுத்தவரையிலே, சென்ற ஆட்சிக் காலத்திலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, சட்டப் பேரவை உறுப்பினர்களை, பிற நாடுகளுக்கு, காமன்வெல்த் நாடுகளுக்கு அனுப்பி, அங்கே இருக்கிற பாராளுமன்ற நடைமுறைகளைப் பார்த்து வருவதற்காக வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அத்தகைய வாய்ப்புகளை, குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய பவள விழா ஆண்டிலே இருக்கின்ற இந்த நிலையிலே, ஒரு சிறப்பான திட்டமாக அறிவித்து, பயிற்சி பெறுவதற்காகவும் உல்லாசப் பயணம் என்ற நிலையிலே அல்ல—அங்கே இருக்கின்ற பாராளுமன்ற முறைகளை அறிந்து வருவதற்காகவும், இருக்கின்ற ஜனநாயக நெறிமுறைகளை மேலும் பலப்படுத்துவதற்காகவும், அத்தகைய பயணத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி அந்த காமன்வெல்த் நாடுகளுக்குச் செல்கின்ற சுற்றுப் பயணத்திற்கு அனுமதிப்பீர்களேயானால், நிச்சயமாக அது பயனுள்ளதாக இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால், அண்டை மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள அபிவிருத்தித் திட்டங்களைக் கற்றுக் கொண்டு வருவதுபோல் முன்னேறிய பல்வேறு நாடுகளிலே நடக்கின்ற ஜனநாயக நெறிமுறைகளை, நடைமுறைகளைக் கற்றுக் கொண்டு வந்தோமேயானால் நிச்சயமாக நம்முடைய ஜனநாயகக் கோட்பாட்டிற்கு அது உதவும் என்று நான் கூற விரும்புகிறேன்.

அதேபோல், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற ஓய்வூதியத்தை, குடும்ப ஓய்வூதியமாக—Family pension-ஆக மாற்றியமைக்க வேண்டுமென்று நான் இங்கே கூற விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பொதுவாக, புதுதில்லியிலே இருக்கின்ற தமிழ்நாடு இல்லத்தைப் பொறுத்தவரையில், எனக்குரிய வருத்தத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். பிற மாநிலங்களினுடைய விருந்தினர் மாளிகைகளுக்கெல்லாம் நான் பலமுறை சென்று வந்திருக்கிறேன். நம்முடைய, தமிழ்நாடு அரசின் சார்பாக இருக்கின்ற தமிழ்நாடு இல்லத்தில், நம்முடைய தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் அன்றன்றைக்கு வழங்கப்படுவதில்லை. பல வசதிகள் இருக்கின்ற இந்த

நேரத்திலே, அந்தப் பத்திரிகைகள் வழங்கப்படாமல் இருப்பது, அங்கே செல்கின்ற விருந்தினர்களுக்கு, குறிப்பாக முக்கியஸ்தர்களுக்கு — முக்கியஸ்தர்கள்தான் அங்கே செல்கிறார்கள் — அவை வழங்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், எல்லா அறைகளிலும் தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்படுவதில்லை. சாதாரண ஓட்டல்களிலேகூட இப்போது தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கிறபோது, எல்லா முக்கியஸ்தர்களும் அங்கே போகிறார்கள்; அவர்களும்கூட அன்றாடச் செய்திகளை அவ்வப்போது அறிய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அத்தகைய முக்கியஸ்தர்கள் செய்திகளை அறியும் வண்ணம், எல்லா அறைகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட வேண்டும். பல மாநிங்களிலே இருக்கின்ற விருந்தினர் மாளிகைகளுக்கு S.T.D. Booths, Private-க்குக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற தமிழர்களைக் கண்டுபிடித்து, அந்தத் தமிழர்களை அழைத்து, அவர்களுக்கு வாழ்வளிக்கும் வண்ணம் அங்கே S.T.D. Booths நிறுவினால் நிச்சயமாக வருகின்ற விருந்தினர்களுக்கு அது ஏதுவாக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், வடவெல்லைப் போராட்டத்திலே சிறைசென்ற தமிழ்த் தியாகிகளுக்கு இன்னும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. 14 நாட்களாக இருந்தால்தான் அந்த ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற நிலை இருக்கிறது. அதைத் தளர்த்தி (மணியடிக்கப்பெற்றது)—ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்— வடவெல்லைப் போராட்ட வீரர்களுக்கு அந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, அண்ணா சமாதியைப் பொறுத்தவரையில், என்னுடைய அச்சத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கே மணல் அள்ளுகிறார்கள் எனற செய்தி வந்திருக்கிறது. அண்ணா சமாதியும், எம்.ஜி.ஆர். சமாதியும் இப்போது கடற்கரையிலே இருக்கின்றன. அவை, மிகப்பெரிய சுற்றுலாத் தலங்களாக ஆகிவிட்டன. இந்த நிலையிலே மணலை அள்ளுவதால் அங்கே கடலரிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதால், பொதுப்பணித் துறை விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணா சமாதி பின்புறத்திலேயும், எம்.ஜி.ஆர். சமாதி பின்புறத்திலேயும் மணல் அள்ளுவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அள்ளவே முடியாத அளவுக்கு, அந்தப் பகுதிக்கு லாரியே போக முடியாத அளவுக்கு ஒரு பெரிய சுற்சுவரே கட்டப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம்கூட நான் ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். அந்தக் கூவம் நதி கலக்கிற இடத்தில் மட்டும் மணல் அள்ளுகிறபோது, லாரி வரவேண்டியிருக்கிறது; காரணம், கூவம் முகத்துவாரத்திலே மணல் அள்ள வேண்டும். இல்லாவிட்டால், தண்ணீர் கடலுக்குள் போகாது. அதற்கு நாமாகக் காசு கொடுத்து அள்ளுவதைவிட அவர்களே காசு கொடுத்து அள்ளிப் போகிறார்கள். எனவே, கூவம் நதி கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் மணல் அள்ளப்பட வேண்டும். அதை, அந்தப் பத்திரிகை தவறுதலாக நினைத்து எழுதியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, அவர் குறிப்பிட்ட இடத்திலே மணல் அள்ளுவது முடியவே முடியாது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு நாளைக்கு அண்ணா சமாதிக்குப் பின்புறத்திலே சென்று பார்த்தால், அங்கே நாங்கள் என்ன தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்பது தெரியும். காரணம், ஒரு நாள் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இதுபற்றிக் குறிப்பிட்டுக் காட்டினார். உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, திரு. டி. மணி.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிவடைந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முக்கியமான சில விஷயங்களை இன்றைய பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மீது பேச விரும்புகின்றேன்.

குறிப்பாக கன்னியாகுமரி பகுதி என்பது நம்முடைய முக்கியமான சுற்றுலாப் பகுதியாகும். அங்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத

ஒரு மிகப்பெரிய குறை இருந்துகொண்டே இருக்கிறது. எனவே, சம்பந்தப்பட்ட துறை அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அம்மையார் ஆட்சி நடத்துகின்ற நாகர்கோவில் நகராட்சியிலே 10 தினங்களுக்கு ஒரு முறைதான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கிறது. எனவே, அதற்கும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மலைப்பாங்கான பகுதிகள் வருகின்ற தொகுதிகளிலே, தேர்தல் வாக்குச்சாவடியை 300 பேர்களுக்கு ஒரு சாவடி என்ற அடிப்படையிலே அமைக்க வேண்டும். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, நம்முடைய கடையான்கூடு பேரூராட்சிப் பகுதி பூராவும் ஒரு மலைப்பாங்கான பகுதியாகும். அதுபோல கோதையாறு, நாம் மின்சார உற்பத்தி செய்கின்ற பகுதி, அது வனப்பகுதியல் இருக்கிறது. அதுபோல ஆறுகாணியும் reserve forest பகுதியிலே வருகின்றது. எனவே, அந்த கடையான்கூடு பேரூராட்சியை மலைப்பாங்கான பகுதியாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற அந்த நேரத்தைச் சற்று உயர்த்தித் தர வேண்டும். அதிலே அகில இந்திய கட்சிகள் என்ற முறையிலே ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் அந்தக் கட்சிகளுக்கென்று ஒரு கொள்கை இருக்கும். எனவே, அந்தக் கொள்கையைச் சொல்வதற்குக் குறைந்தபட்ச நேரத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய பல்வேறு கோரிக்கைகளை நாம் சொல்கின்றோம். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் நீண்ட காலமாக ஒரு பாலத்தினுடைய பிரச்சினையைப்பற்றி நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். மலைப்பாங்கான பகுதியிலே பழங்குடியினர், ஆதிதிராவிடர் மக்கள் வாழ்கின்ற பகுதியிலே ஒரு பாலம் உடைந்து போய் இருக்கிறது. அதற்கு அதிகபட்ச செலவு 40 இலட்சம் ரூபாய்தான் ஆகும். 6 ஆண்டுகாலம் தாண்டிவிட்டது. எனவே, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதுபோன்று கடலோரக் கிராமத்திலே இரணியல் கால்வாய்க்குக் குறுக்கே இருக்கின்ற பாலம் உடைந்து சில வருடங்கள் ஆகிவிட்டன. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய சட்டமன்றப் பேரவை நிருபர்களுக்கு நாடாளுமன்றத்திலே எந்தச் சம்பளம், எந்த உரிமைகள் வழங்கப்படுகின்றனவோ அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வழங்க வேண்டும். அதுபோல வடமாநிலங்களுக்குச் செல்கின்றபோது, அவர்களுக்கு அதிகப்படியான செலவு வருகின்றபோது, அந்தச் செலவினத்தை, எந்த அளவிற்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு வழங்கவேண்டும். அதுபோல வீடு கட்டிக்கொள்வதற்கான கடன் வசதியைச் சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாமன்றத்திலே, என்னுடைய சொந்தக் கோரிக்கையை நான் சொல்ல வேண்டியுள்ளது. நான் அடுத்த மாநிலமான திருவனந்தபுரத்திற்கு வைத்திய சிகிச்சைக்காகச் சென்றிருந்தேன். அது என்னுடைய ஊரிலிருந்து 23 மைல் தூரத்தில்தான் இருக்கிறது. அந்த வைத்திய சிகிச்சைக்குண்டான செலவினத்தைத் தருமாறு இந்தத் துறைக்கு ஒரு மனுவைத் தந்திருந்தேன். ஆனால் இன்று வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. அதில் ஏதாவது சட்டச் சிக்கல் இருந்தாலும் அதற்கு ஏற்ற மாற்றம் செய்து அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தமட்டில் 1943-ல் காங்கிரஸ் இயக்கத்திலே சேர்ந்து 1945-லிருந்து 1947-ல் நாடு விடுதலை பெறுவது வரையிலும் தலைமறைவாக இருந்த அந்தப் போராட்டத்திலே கலந்துகொண்டவன். அப்படித் தலைமறைவாக இருந்து போராடிய எங்களுக்குத் தர வேண்டிய pension குறித்து கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, நம்முடைய மாநில அரசாங்கம் மிகத் தெளிவாகச் சொல்லி இருந்தது. அந்த அடிப்படையிலே ஒரு மனுவைக் கொடுத்திருக்கின்றேன். ஆனால், அந்த மனுவைப் பரிசீலனை செய்கின்ற அதிகாரிகள், அந்த மனுவிலே சொல்லப்பட்டிருக்கின்ற காரியங்களைப் பொறுத்து, எங்களுக்குச் சான்றிதழ் வழங்கியிருக்கின்றவர்கள் எந்தச் சிறையில் இருந்தார்கள், எப்போது போனார்கள் என்றெல்லாம் என்னைக் கேட்டால் அதற்குப் பதில் தெரியாது. எனவே, அதனைப் பரிசீலனை செய்து நியாயம்

என்ற அடிப்படையிலே அதற்கான pension வழங்குவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று பாலங்களைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். குழித்துறை ஆற்றுப் பாலத்தைப் பொறுத்தவரையில் அதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால், நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்தியிருக்கின்றதா என்பதுதான் இங்கே பிரச்சினை. அதே போல, அந்தப் பாலத்தினுடைய தூண் உடையக்கூடிய பெரிய ஆபத்திலே இருக்கிறது. அந்தப் பாலத்தின் நிலை என்னவாகும் என்பது தெரியாது. தற்காலிகமாக அதைச் சரிசெய்வதற்குக் கொஞ்சம் பணத்தை ஒதுக்கியிருக்கின்றார்கள். ஆனால், வேலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அந்த ஆற்றுப் பாலத்தைத் துரிதமாகக் கட்டுவதற்குரிய நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் குறிப்பிடக்கூடிய குழித்துறை பாலம், தேசிய நெடுஞ்சாலையிலே கட்டப்பட உள்ள பாலம். அதற்குரிய நிலம் மாநில அரசால் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. ஆனால், பாலம் கட்டுகிற அந்தப் பொறுப்பு மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. மத்திய அரசு அதை B.O.T. திட்டத்திலே எடுக்க வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறார்கள். B.O.T. திட்டத்திலே எடுப்பதற்கான அந்த மாடல் ஒப்பந்தம் குறித்து மத்திய அரசு இன்னும் முடிவு செய்யாமல் இருக்கிறது. அதன் காரணமாக, அதிலே காலதாமதம் ஆகிறது. மத்திய அரசு அதை முடிவு செய்தவுடன் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும். அதுவரையில் பழைய பாலம் முறையாகப் பராமரிக்கப்படும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. டி. மணி, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சில



விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நன்றி. இருந்தாலும்கூட நான் இரண்டு வாரத்திற்கு முன்னாலே ஊருக்குச் சென்று பார்த்தபோது, நிலத்திற்குரிய பணத்தைக் கொடுத்திருக்கிறார்களே தவிர, அந்த மாவட்ட நிர்வாகத்திற்கு அதைக் கையகப்படுத்துவதிலே என்ன கோளாறு இருக்கிறது என்ற விவரத்தை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, திருவிதாங்கூர் சமஸ்தானம் இருந்த காலத்தில் அந்தப் பகுதியை தமிழகத்தோடு சேர்ப்பதற்காக ஒரு இணைப்புப் போராட்டத்தை நடத்தினார்கள். கல்குளம், விளவங்கோடு, அகஸ்தீஸ்வரம், தோவாளை தாலுகாக்களில் 1954-ல் அந்தப் போராட்டம் நடந்து நூற்றுக்கணக்கான பேர் 6 மாதங்கள் வரையில் சிறைச்சாலை சென்றார்கள். ஆனால், யாரிடத்திலும் தஸ்தாவேஜ்கள் இருக்கின்றனவா என்று கேட்டால், தஸ்தாவேஜ்கள் இல்லை. அந்த தஸ்தாவேஜ்கள் எல்லாம் நீதிமன்றங்களிலே, அதுபோன்று கோர்ட்டுகளிலே அழிக்கப்பட்டுவிட்டன. எனவே, அவர்களுக்கு இந்த pension வழங்க வேண்டுமென்று கேட்கின்றபோது, அதற்குரிய ஆதாரங்கள், ஜெயிலுக்குப் போன ஆதாரங்கள் இருக்கிறதா என்று கேட்டால், ஒருவரிடத்திலும் அந்த ஆதாரங்கள் இல்லை. எனவே, இதைச் சரிவர கண்டறிந்து அதிலே சிறைக்குச் சென்று அதனாலே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அந்த pension வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகம் பேர் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையின்போது நான் பேசுகின்றபோது, இதைக் கண்டறிந்து உரிய விவரங்களைத் தரச் சொன்னார்கள். ஏறத்தாழ 200-க்கும் அதிகமானவர்களின் விவரங்களைப் பட்டியல் போட்டு, நானும் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், அதுபோன்று மற்றும் உறுப்பினர்களும் அவற்றைத் தந்திருக்கிறோம். ஆனால், சமீபத்தில் 14 தினங்கள் ஜெயிலிலே இருந்ததாக தஸ்தாவேஜ்கள் இருந்தால்தான் இது வழங்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அப்படி என்றால், இந்தப் போராட்டத்திலே கலந்து கொண்ட ஒருவருக்கும் இந்த ஓய்வூதியம் கிடைக்காது. எனவே, அந்தப் பகுதியினுடைய பிரத்தியேக சூழ்நிலையைக் கணக்கெடுத்துக் கொண்டு அவர்களுக்கு இந்த ஓய்வூதியம் கிடைக்கக் கூடிய வகையிலே வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

[1999 மே 13

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள்.

*முற்பகல் 11-50*

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பல்வகை மானியக் கோரிக்கை உள்ளிட்ட சட்டமன்றம், தேர்தல் உள்ளிட்ட பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துகளைக் கூற வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கையில் காவல் துறைக்கான ஒதுக்கீடும் சேர்ந்து வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பலவற்றை அறிவித்திருந்தார்கள். விடுபட்ட ஒன்றிரண்டை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். போன முறை ஏறக்குறைய 200, 250 பேர் உதவி ஆய்வாளர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டதில் ஒரு batch training-க்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இரண்டாவது batch-ஐயும் சீக்கிரத்திலேயே, இந்த ஆண்டே அனுப்பி, பயிற்சிதர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Training Exam. எல்லாம் முடிந்து, medical test எல்லாம் முடிந்து அறிவிப்பு எல்லாம் ஒரே நேரத்தில்தான் வந்தது. ஆனால் ஒரு batch-க்கு மட்டும் என்ன ஆகிவிட்டது? அவர்கள் முதலிலே பயிற்சிக்குப் போகிறார்கள். ஒரு வருடம் கழித்து இவர்கள் போகிறார்கள். அதனால் seniority போன்ற பல பிரச்சினைகள் பின்னர் வரும். எனவே, இவர்களையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தமிழகத்திலுள்ள காவல் துறை மிகச் சிறப்பாக சிரமத்தோடு பணியாற்றுகிறது. காவல் துறை என்றாலே அவர்களைத் திட்ட வேண்டும் என்கிற உணர்வுகள் உள்ளன என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய இந்தக் கருத்தை எங்களிலே பலரும்கூட ஏற்றுக்கொள்கிறோம். 'உரலுக்கு ஒரு பக்கத்திலே இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலே இடி' என்பார்கள். அதே போல காவல்துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கு இரண்டு பக்கத்திலேயும் இப்படியுள்ளது. பொதுமக்கள் மூலமாகவும் சரி, அரசியல்வாதிகள் மூலமாகவும் சரி, அரசாங்கத்தின் சார்பிலேயும் சரி, சில இடங்களிலே ஒருசிலபேர் தவறு செய்கிறார்கள் என்பது உண்மையாக இருந்தாலும், பலரும் பல நேரத்திலே விமர்சனத்திற்கு உள்ளாகின்ற சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். எனவே, பல நேரத்திலே காவல் துறையையினர் செய்கிற தவறுகளை, நாம் சுட்டிக்காட்டுகிறோம். ஆனால், காவல்துறை மானியக் கோரிக்கை என்று வருகிறபோது



1999 மே 13] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அதிலே அவர்களுடைய நலன் காக்கப்படுகிற விதத்திலே சிலவற்றைச் சொல்ல வேண்டியதும் நம்முடைய கடமையாகும். அப்படிப் பலவற்றை, பல நன்மைகளை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே பொதுவாக காவலர்களைப் பொறுத்தவரை, சென்னைக்கு தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயிருந்தும் பந்தோபஸ்துக்காகவும், நீதிமன்றங்களிலே நடக்கிற வழக்குகளைக் கவனிப்பதற்காகவும் பல நேரங்களிலே வருகிறார்கள். அப்படியெல்லாம் வருகிறபோது அவர்கள் எல்லாம் எங்கே குளிக்கிறார்கள் என்று சொன்னால் bus stand-க்கு வந்தால் அங்கேயே குளிக்க வேண்டியதிருக்கிறது. Train-ல் வந்தால் பல பேர், நீங்கள் பார்க்கலாம், உடுப்பையெல்லாம் கழற்றி பைப்புக்குப் பக்கத்திலே மேலேயே போட்டுவிட்டு அந்தப் பைப்பிலேயே குளித்துக்கொண்டிருப்பார்கள், போலீஸ்காரர்கள். இதுபோன்ற ஒரு நிலை காவலர்களுக்கிருக்கிறது. காவலர்களுக்கு மேலே இருக்கிற அதிகாரிகள், உயர் அதிகாரிகள் I.P.S. Officers வந்தால் guest house-லே தங்கிக்கொள்ளலாம். அவர்களுக்கு ஒன்றும் பிரச்சினை கிடையாது. ஆனால், அந்தக் காவலர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு sub-inspector, inspector அளவுக்கு உள்ளேயிருக்கிற அந்தக் காவலர்களுக்கு இங்கே ஒரு dormitory மாதிரி 50, 100 bed போட்டு குளியலறை வசதியோடு இங்கேயிருக்கிற ஐ.ஜி. அலுவலகத்திற்குப் பக்கத்திலேகூட—உள்ளேகூட நிறைய இடம் இருக்கிறது. அதிலே—கட்டிக் கொடுத்தால் வெளியிலேயிருந்து இந்தமாதிரி பணிகளுக்கு வருகிறபோது அவர்கள் நேராக அங்கே சென்று குளித்துவிட்டு, உடை மாற்றிவிட்டு அல்லது court-க்குப் போய்விட்டு வந்தார்கள் என்றால் 4 மணி நேரம் தூங்கிவிட்டுப் போவதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் அவர்களுக்கு அது வசதியாக இருக்கும் என்ற காரணத்தினாலே இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலித்து ஒரு guest house அளவிலே இல்லாவிட்டாலும் நான் சொன்னதுமாதிரி, dormitory மாதிரி, A.C. ஒன்றும் வேண்டியதில்லை. fan போட்டு, கட்டில் போட்டு குளியலறை வசதியோடு, வந்தால் 50 பேர், 100 பேர் தங்கிக்கொள்வது மாதிரி, வாய்ப்பைச் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே காவல்துறையின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விடுமுறையைப் பொறுத்தவரை, ஏற்கெனவே 20 நாட்களாக இருந்தது 12 நாட்களாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) பேசவா? பின்னாடி பேசுகிறேன். அரசு அலுவலர்களை எடுத்துக் கொண்டால் சனிக்கிழமை, ஞாயிற்றுக் உறுப்பினர்களுக்காகப்

கிழமைகளையெல்லாம் சேர்த்து மற்ற விடுமுறை நாட்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் நூற்றுக்கு மேற்பட்ட நாட்கள் வருகின்றன. எனவே, காவலர்களுக்கும் இந்த விடுமுறை நாட்களை அதிகரிக்க வேண்டும். ஏனென்றால், 12 நாட்கள்தான் மொத்தமாக இருக்கின்றன. ஏற்கெனவே, 20 நாட்களாக இருந்தது. அதுவும் குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த விடுமுறை நாட்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதை நான், அவர்களுடைய நலன் கருதி இதையும் நான் வற்புறுத்துகிறேன்.

அதேமாதிரி, இன்னொரு முக்கியமான பிரச்சினை. தீயணைப்புப் பணியாளர்கள் ஏறக்குறைய 6,500 பேர் தீயணைப்புத் துறையிலே பணியாற்றுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, இந்தியாவிலேயே இங்கேதான் தமிழ்நாட்டிலேதான் குறைவான சம்பளம் வாங்குகிறோம் என்றும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் தரப்படவில்லை என்றும் அதிலேகூட காவல்துறையிலே பணியாற்றுகிற காவலர்களுக்கும், தீயணைப்புத் துறையிலே பணியாற்றுகிற காவலர்களுக்கும் சம்பளத்திலே வித்தியாசம் இருக்கிறது என்றும், எனவே அதற்கேற்ப, மற்ற காவலர்களுடைய சம்பளத்திற்கேற்ப, மத்திய அரசு ஊழியர்களுடைய சம்பளத்திற்கேற்ப இதிலே பணியாற்றுகிற 6,500 குடும்பங்களுடைய நலன் காக்கப்படும் விதத்திலே அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறைக்கு இயக்குநராக யாராவது additional D.G.P. அளவிலே வருகிறார்கள். பொதுவாகக் காவல் துறையிலேயிருந்து இந்த Fire service-க்கு வருகிறபோது அங்கிருந்து அந்தத் துறையிலேயிருந்து ஏதோ தண்டிக்கப்பட்டதைப் போல அல்லது அங்கே சரியாக வேலை பார்க்கவில்லை என்பதைப்போல தூக்கி Fire service-லே போடுவார்கள். இங்கே வருகிறபோது அவர்கள் இதிலே interest காட்டி இந்த 6,500 பேர்களுடைய நலனைக் காக்கிற அந்த முயற்சிகளிலே அவர்கள் அதிகமாக அக்கறை செலுத்துவதில்லை என்கிற மனக்குறை உள்ளே பணியாற்றுகிறவர்களுக்கு இருக்கிறது. அதனாலே பல கோரிக்கைகள் அனுப்பப்படாமலும், ஏற்கப்படாமலும் இருக்கின்றன என்ற காரணத்தினாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த 6,500 குடும்பங்களுக்கும் வாழ்வு அளிக்கிற விதத்திலே அவர்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-55

அதேபோல, பரிசுச் சீட்டுக்களைப் பொறுத்தவரை, பரிசுச் சீட்டு, லாட்டரிச் சீட்டு அடிப்பது என்பது ஏதோ நோட்டு அடிக்கிறது மாதிரி, கள்ள நோட்டு அடிக்கிறது மாதிரி என்று சொல்லக்கூடிய அளவிற்குப் பல இடங்களிலே கோடிக்கணக்கான அளவுக்கு, இப்போது டி.வி.-யிலேயெல்லாம் காட்டுகிறார்கள்; இரண்டரை கோடி, மூன்றரை கோடி பதுக்கி வைத்திருந்தது கைப்பற்றப்பட்டிருக்கிறது, கைது செய்தார்கள் என்கிற செய்திகள் தினம் தினம் வருகின்றது. ஏழை எளிய மக்களைச் சுரண்டுகிற அந்த நிலை இதனாலே உருவாகிறது. எனவே, இந்த மாதிரி கள்ள லாட்டரியை, போலி லாட்டரிச் சீட்டுகளை ஒட்டுமொத்தமாக, எப்படி கள்ளச்சாராயம் ஒழிக்கப்பட வேண்டுமோ அதே முனைப்போடு இப்போது கள்ள லாட்டரிச் சீட்டுகளை, போலி லாட்டரிச் சீட்டுகளை ஒழிக்கும் அந்தப் பணியிலே அரசு மும்முரமாக ஈடுபட வேண்டும். தமிழ்நாடு அரசு லாட்டரிச் சீட்டு தவிர மற்ற மாநில லாட்டரிச் சீட்டுகளை இங்கே விற்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. அதற்கு நீதிமன்றத்திலே தடையாணை வழங்கப்பட்ட காரணத்தாலே அதை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை என்றாலும் அந்தத் தடையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், இப்போது நீதிமன்றத் தீர்ப்பு வந்ததற்குப் பின்னாலே உரிய நடவடிக்கை எடுத்து, என்னைக் கேட்டால் தமிழ்நாடு அரசு லாட்டரி சீட்டே இல்லாமல் இருந்தால்கூட பிரச்சினை இல்லை. ஆனால், தமிழ்நாடு அரசு லாட்டரிச் சீட்டிலேயிருந்து வருகிற பணம் ஆதிதிராவிடப் பெருமக்களுக்கும், கிராமங்களுக்கும், குடிநீருக்கும், பயன்படும் வகையில் அரசுக்கு வருகிறது, தனியாருக்குப் போவதில்லை. மக்கள் பணம்தான் அரசாங்கத்திற்கு வந்து மக்களுக்குப் போகிற காரணத்தாலே அதை மட்டும் வைத்துக்கொண்டு—தமிழ்நாடு அரசு லாட்டரிச் சீட்டு மட்டும் இருக்கலாம்—மற்ற அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஒழிக்கவேண்டும். கள்ளச்சாராயத்தை ஒழிக்கிற முனைப்பைக் காட்டுகிற அதே முனைப்போடு, அரசு லாட்டரிச் சீட்டுகளையும், கள்ள லாட்டரிச் சீட்டுகளையும், போலி லாட்டரிச் சீட்டுகளையும் பிற மாநில லாட்டரிச் சீட்டுகளையும் ஒழிக்க வேண்டும். ஒரு எண் லாட்டரி, குலுக்கல் லாட்டரி இதெல்லாம் மோசடி; ஏழை எளிய மக்களை மோசடி செய்து ஏமாற்றுகிற காரியமாகும். எனவே, இதிலே அரசு முனைப்போடு இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்கிறேன் .....

22|200
D
V211,31'N9
N99.8.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேச்சை முடித்துவிடுகிறேன். இன்னும் உறுப்பினர்பற்றிப் பேச வரவில்லையே! வந்துவிடுகிறேன்.

அப்புறம் இந்த அகதிகள் முகாம்கள். இலங்கை அகதிகள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு மாதம் 200 ரூபாய் தரப்படுகிறது. அதிலே 17,114 குடும்பங்கள் தமிழ்நாட்டிலே பல பகுதிகளிலே எல்லாம், திரும்பிப் போனவர்கள் போக மீதம் இருக்கிறார்கள். இருப்பதற்கு இடம் இல்லை, அவர்கள் கஷ்டங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த முகாம்களுக்குப் போவோம் என்றால், நான் போனபோதுகூட, வண்டியை நிறுத்தி அவர்கள் பல கோரிக்கைகளை பலமுறை சொன்னார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்து, இப்போது 200 ரூபாய் கொடுக்கிறோம். மத்திய அரசாங்கம் ஏதோ மாநில அரசாங்கத்தின் பிரச்சினை என்கிற காரணத்தினாலே, மாநில அரசுதான் ஒட்டுமொத்தமாக எல்லா சுமையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கக்கூடாது. இது மத்திய, மாநில அரசுகள் இரண்டும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியமாகும். எனவே, இந்தப் பணத்தை 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்தி, 200 ரூபாய் தாருங்கள் என்று கேட்டால் அதைக்கூட மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாமல், 150 ரூபாய்தான் தருவோம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது. மீதம் 50 ரூபாயை மாநில அரசு தருகிறது. எனவே, இந்தப் பணத்தை, ஒரு குடும்பத்திற்கு 200 ரூபாய் மாதம் என்று கொடுப்பது போதாது. அதை 300 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 300 ரூபாயையும் மத்திய அரசு தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மாநிலம் பல சலுகைகளை செய்கிறது. இலவசமாக வேஷ்டி, சேலை, குறைந்த விலையிலே அரிசி, போன்ற அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் தரப்படுகின்றன. மாநில அரசு இதற்கான செலவுகளை ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசு தருகிற அந்தப் பணத்தை, என்ன தருகிறதோ அதை அதாவது இருநூற்றைம்பதோ, முந்நூறோ என்று உயர்த்தப் போகிற பணத்தை மாநில அரசு அப்படியே தர முன்வரவேண்டும். மத்திய அரசை வற்புறுத்தி இதைப் பெற முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரியிலே 3 இடங்கள் தரப்படுகின்றன. பொறியியல் கல்லூரியிலே ஒரேயொரு இடம்தான் ஒதுக்கப்படுகிறது. அதுபோல Polytechnic-லே ஒரேயொரு இடம்தான் ஒதுக்கப்படுகிறது. அரசு பொறியியல் கல்லூரியிலேகூட குறைவாக இருக்கலாம். ஆனால், Polytechnic நிரம்ப இருக்கின்றன. எனவே, சுதந்திரப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்டத் தியாகிகள் அவர்களுடைய குழந்தைகளுக்கோ, பேரக் குழந்தைகளுக்கோ இந்த ஒதுக்கீடு என்பது வேண்டும். மருத்துவக் கல்லூரியிலே 3 இடம், அதுகூட M.B.B.S.-லேயே 3, சித்தா இவை எல்லாம் சேர்த்து 2 இடங்கள் தருகிறார்கள். மருத்துவத் துறையைப் பார்த்தீர்கள் என்றால் ஐந்தாகிறது. எனவே, அந்த மாதிரி Polytechnic மற்றும் பொறியியல் கல்லூரிகளிலே இந்த நாட்டுக்காகத் தியாகம் செய்த, சிறை சென்ற, எதையும் எதிர்பார்க்காமல் சுதந்திரப் போராட்டம் நடத்தப் பாடுபட்ட, இப்போது கஷ்டத்திலே இருக்கிற அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடைய குழந்தைகளுக்கு, மூன்று இடமோ, முடிந்தால் ஐந்து இடமோ தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். Polytechnic-லே கண்டிப்பாக உயர்த்தலாம். அதிலே ஒன்றும் கஷ்டம் கிடையாது. ஒரு சீட் ஒதுக்கப்போகிறோம். அதுபோல விடுதலைப் போராட்ட வீரர்களுடைய வழித்தோன்றல்களுக்கு, மருதுபாண்டியன், வீரபாண்டிய கட்டபொம்மன் போன்றவர்களுடைய வழிதோன்றல்களுக்கு, அவர்களுடைய வாரிசுகளுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. அதுபோல, மாவீரன் பூலித்தேவன், அவருடைய நினைவு மண்டபத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமீபத்திலே திறந்து வைத்தார்கள். பல ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு, எந்த ஜாதியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும், இந்த நாட்டுக்காக, மொழிக்காக, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகளைக் கௌரவிக்கிற முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இருந்து இப்போது பல்வேறு நினைவு மண்டபங்களை எழுப்பி வருகிறார்கள். அழியாத புகழை அவர்களுக்கு ஏற்படுத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த பூலித்தேவன் குடும்பத்தினருக்கும், அவருடைய வாரிசுகளுக்கும் இதைச் சேர்த்துக்கொண்டு போக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மே 13

நண்பகல் 12-00

புதுக்கோட்டை மன்னர்கள் காலத்திலே தனி State-ஆக இருந்தது. சமஸ்தானங்களெல்லாம் இணைக்கப்படுகின்றபொழுது புதுக்கோட்டையையும் ஒன்றாகச் சேர்த்து தமிழ் நாட்டோடு இணைக்க வேண்டுமென்று அங்கே போராடினார்கள். மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல அதற்காகப் பாடுபட்ட பலர் இன்றைக்கு வறுமையிலே, கஷ்டத்திலே இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தங்களுக்கு ஓய்வூதியம் வேண்டும், உதவித்தொகை வேண்டும் என்று கேட்டு, அதற்கான மனு பொதுத் துறைக்கு வந்தது. அது, மற்ற இடங்களிலே விசாரிக்கின்றபொழுது ஏதோ ஹைதாரபாத்திலே தரப்படவில்லை, நிஜாமை எதிர்த்த போராட்டத்திலே அங்கே தரவில்லை, இங்கே தரவில்லை என்று சொல்லி இங்கே இவர்களுக்கு இல்லை என்று மறுக்கப்பட்டிருக்கிறது. எண்ணிக்கை ரொம்பக் குறைவாகத்தான் இருப்பார்கள். எனவே, அவர்களுக்கு உதவித் தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் பலபேர் இந்தச் சட்டமன்றம் கூடுகிறபொழுது தற்காலிகப் பணியாளர்களாகத் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பலபேர் அரசாங்க வேலைக்குப் போவதற்கு என்ன வயது வரம்போ அதைத் தாண்டக்கூடிய நிலையிலே, எட்டுகிற நிலையிலே இருக்கிறார்கள். எனவே, அப்படி பல ஆண்டுகளாக இந்தச் சட்டமன்றம் கூடுகின்ற காலங்களிலே தற்காலிகமாகப் பணியாற்றுகின்ற பணியாளர்களை நிரந்தரப்படுத்துகிற அந்த முயற்சிகளை சட்டமன்றத்தினுடைய சபாநாயகர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அன்றைக்கு பேசுகின்றபொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல சலுகைகளையெல்லாம் அறிவித்தார்கள். அதிலே ஒன்றிரண்டு விட்டுப்போயின. மாண்புமிகு முதலமைச்சரவர்கள், இந்த சாம்பிராணி, சூடம் இதற்கெல்லாம் வரியைக் குறைத்து அறிவித்து இருந்தார்கள். 11 சதவீத வரியைக் குறைத்து ஒரு விழுக்காடாக அறிவித்தார்கள். அந்த அகர்பத்தி என்கிற ஊதுபத்தி, பூஜைக்குப் பயன்படுத்துகிற அந்த ஊதுபத்தி எப்படியோ அதிலே தவறுதலாக விடுபட்டிருக்கிறது. அதைக்



1999 மே 13] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

குறைக்க வேண்டுமென்பது சிறுதொழில் நடத்துகிறவர்களுடைய கோரிக்கை. அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடியங்குளம் சம்பவத்தையொட்டி, அந்த நேரத்திலே அந்தப் பகுதியிலேயிருந்த இரண்டு சமுதாய மக்களிடத்திலும் பிரச்சினை ஏற்பட்டபொழுது, அதிலே ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து—இதற்கு முன்னாலேயிருந்த ஆட்சியிலே நிகழ்ந்த சம்பவங்கள்—கோமதிநாயகம் அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிஷனால் விசாரிக்கப்பட்டது. திரு. சந்தானம் அவர்கள்கூட இங்கே கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள், C.B.I. விசாரணைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; அதனாலே அந்த இடைக்காலத் தீர்ப்பை இங்கே சட்டமன்றத்திலே மரபின்படி வைக்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள். இதில் என்ன பிரச்சினை என்றால், அந்தச் சம்பவங்களின்போது. அந்த ஊரைவிட்டே வெளியே போனவர்கள் 7, 8 ஆண்டுகளாக, இன்றும் தங்களுடைய பகுதிகளுக்கு—10, 12 கிராமங்களைச் சார்ந்தவர்கள், இரண்டு பிரிவினரும் இருக்கிறார்கள், தேவர்களும் இருக்கிறார்கள், ஆதி திராவிடர்களும் இருக்கிறார்கள்—இரண்டு பேருமே அந்தப் பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். அதையெல்லாம் அந்தக் கலெக்டர் மூலமாக, S.P. மூலமாகக் கேட்டறிந்து, தங்களுடைய பூர்வீகப் பகுதிகளுக்கு அவர்கள் திரும்பிச் சென்று குடியேற ஆவன செய்ய வேண்டும். சென்னையிலேயிருந்து, நேற்று 10, 20 பேர் வந்து பார்க்கிறார்கள். இரண்டு பக்கத்திலேயும் இருக்கிறார்கள். 10 வருஷம் ஆகிவிட்டது, இன்னும் போக முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அதுகுறித்து விசாரித்து உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுப்பதோடு ....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கொடியங்குளம் விவகாரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடுவதுபோல, அந்தப் பகுதியிலேயிருந்து வெளியேறி பல பகுதிகளிலே இரு சாராரும் இருப்பது உண்மைதான். அதைப்பற்றி புள்ளிவிவரங்களை எடுக்கச் சொல்லி அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தப் புள்ளிவிவரங்கள் வந்த பிறகு தக்க ஏற்பாடுகள் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1999 மே 13

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதோடுகூட, உதவி செய்யவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக — இப்பொழுது கோயம்புத்தூரிலே குண்டு வெடிப்புக்குப் பின்னாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணங்கள் வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டு, அதிலேகூட ஒரு இடைக்கால அறிக்கை வாங்கி அவர்களுக்கு உதவி செய்வதற்கு நிதியொதுக்கம் செய்கிறீர்கள். அது மாதிரி செய்ய வேண்டும். சி.பி.ஐ. விசாரணையெல்லாம் முடியும் வரை சின்ன அளவிலே பாதிக்கப்பட்டவர்கள் அவ்வளவு காலம் பொறுத்திருக்க வேண்டியதில்லை. கோமதிநாயகம் கமிஷனிலே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு என்று சொல்லியிருக்கின்றார்கள். அதிலே ஒரு இடைக்கால அறிக்கையாகக்கூட அரசின் சார்பிலே, அதையெல்லாம் யோசித்து, முழுமையாகப் பாதிக்கப்பட்ட இரண்டு தரப்பிலேயும் இருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு எந்தெந்த விதத்திலே அவர்களுக்கு நஷ்ட ஈடு தரலாம், உதவலாம் என்பதைக் கணக்கெடுத்து, அதிலேயும் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மசகு எண்ணெய் என்று மாடு வைத்து செக்கைச் சுற்றி எண்ணெய் எடுப்பார்கள். அதற்குப் பின்னாலே கொஞ்சம் மாற்றம் அடைந்து 3 H.P.Power-லே அதுமாதிரி ஒரு செக்கைப் போட்டு ஒரு மூட்டை அரைத்து எண்ணெய் எடுக்கிறார்கள். அதற்கு, செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக வருவதற்கு முன்னாலேயெல்லாம் வரி விலக்கு இருந்தது, 1994-லே வரி போடப்பட்டிருக்கிறது. அந்த வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜப்தி எல்லாம் வந்து 5,000 சின்னச் சின்ன குடும்பங்கள் — ஒரு மூட்டை அரைத்து எண்ணெயை லோக்கலில் விற்கிறார்கள் அல்லவா, அவர்கள். —தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களிலே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது.) முடித்து விடுகிறேன், ஒரு நிமிடம் தாருங்கள். எனவே, இதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை, இரண்டு, மூன்று விஷயங்களை மட்டும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒன்று, ஒவ்வொரு



1999 மே 13] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

தொகுதியிலும் ஒரு தொகுதி அலுவலகம் கட்டலாம். தொகுதியின் மத்தியப் பகுதியிலே, சென்ற முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டார்கள். ரொம்ப வேண்டியதில்லை. 5 இலட்சம், 6 இலட்சம் அந்த அளவிலே இரண்டு, மூன்று அறை கட்டினால் போதும். ஒரு உறுப்பினர் கட்டில் போட்டு, பேன் போட்டு பயன்படுத்திக்கொள்ளலாம், வேண்டுமானால் அவர்களே ஏ.சி. போட்டுக்கொள்ளலாம் அது ஒரு அறை. இன்னொன்று, அலுவலக அறை, ஒரு வரவேற்பு அறை, முடிந்தால் ஒரு சமயலறை அந்தமாதிரி போட்டு, multi-purpose வீடு மற்றும் அலுவலகம், அந்தமாதிரி ஒவ்வொரு தொகுதியிலும் இருந்தால் ஆங்காங்கே உறுப்பினர்கள் போகிறபோது, சில மந்திரிகள்கூட அவர்களுடைய அலுவலகமாக வைத்துக்கொள்ளலாம். மற்றபடி உறுப்பினர்கள் அலுவலகமாக இருந்தால் பொதுமக்கள் அவர்களைப் பார்க்க வரமுடியும், இன்றைக்குப் போகிறோம், உறுப்பினர்களை அலுவலகத்தில் பார்க்கலாம், போனால் மனு கொடுக்கலாம் என்கிறமாதிரி ஒரு இடம் இருக்கும், அதற்கு வசதியாக இருக்கும். அதற்கு ஒரு அலுவலகத்தைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அலுவலகத்திலிருந்து உறுப்பினர்கள் இங்கே வந்துவிட்டால், அங்கே யாராவது இருந்து மனு வாங்குவதற்கு ஒரு ஆள் வேண்டும். அதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு உதவியாளர் வேண்டும். பல்வேறுவிதமான கோரிக்கைகள் வருகின்றன. உறுப்பினர்களுக்கு கடிதம் வந்தால் அதைப் பிரித்து, லெட்டர் அடித்து, போன் செய்து, உறுப்பினர்கள் இல்லாத நேரத்தில் அதை வாங்குவதற்கு, ஒரு P.A. மாதிரி, உறுப்பினர்களுக்கு ஒருவரை போட்டு, குறைந்த சம்பளம்கூட நீங்கள் consolidated payment மாதிரி கொடுக்கலாம். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். உறுப்பினர்களுக்கு ஓர் உதவியாளரை நியமித்து அதற்கான சம்பளத்தை அரசாங்கம் தரலாம். இது உறுப்பினர்கள் சிறப்பாகப் பணிபுரிவதற்கு வசிதியாக இருக்கும். உறுப்பினர்கள் சிறப்பாக, திறமையோடு பணியாற்ற வேண்டும், மக்கள் தொண்டு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பக்கூடியவர். உறுப்பினர்களிடம் நீங்கள் அதிகமாக வேலை வாங்குவதற்கு P.A. வையும் போட்டுக் கொடுத்தீர்கள் என்றால், என்னய்யா செய்கிறீர்கள் என்று இன்னும் அதிகமாக விரட்டி வேலை வாங்கலாம். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னும் திறம்படச் செயல்பட ஓர் உதவியாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னமாதிரி தொலைபேசி படியை உயர்த்தலாம். சம்பளம் இருந்தாலும் சரி அல்லது 2,000 ரூபாய் சம்பளம் இல்லை

என்றாலும்கூட மற்ற படிகளை உயர்த்தித் தரலாம். இது பலருக்கும் உதவியாக இருக்கும்.

M.P.கள் இந்தியா முழுவதும் இரயிலில் போகலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்தில் தமிழ்நாடு முழுவதும் போகலாம் என்றிருக்கிறது. இப்போது இருக்கிற சூழ்நிலையைப் பார்த்தோம் என்றால், பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் போவது கிடையாது. 234 பேரில் பேருந்தில் கணக்குப் பார்த்தால் 2, 3 பேர் போவார்களா என்பதே சந்தேகம்தான். பெரும்பாலும் காரில்தான் போகிறார்கள். இல்லையென்றால் 4 பேரை கூட்டிக்கொண்டு போகும்போது பேருந்தில் போக முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பார்க்கப் போக வேண்டும் அல்லது சென்னைக்கு வரவேண்டும், சிபாரிசுக்கு என்று வருகிறபோது பெரும்பாலும் பேருந்தை யாரும் பயன்படுத்துவது கிடையாது. அதனாலே ஒதுக்கப்படுகிற பணமும் அதற்குப் போய் சேரப் போவது இல்லை. ரயில்வேதுறைக்கு என்று 10,000 ரூபாய் இரண்டு கட்டமாகத் தரப்படுகிறது. என்ன செய்யலாம் என்றால், இந்தப் பணத்தைக் கொஞ்சம் அதிகரித்துக் கொடுக்கலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்தில் தமிழ்நாடு முழுவதும் போகலாம் என்று இருக்கிறது அல்லவா, அதைக்கூட எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக இரயில்வே கட்டணமாகத் தரப்படுவதை 20,000, 25,000 ரூபாயாக உயர்த்தலாம். இல்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முழுவதும் போய் வந்த பிறகு, அந்தப் பயணச்சீட்டைக் கொடுத்து reimburse செய்துகொள்கிற மாதிரி, தமிழ்நாடு முழுவதும், தமிழ்நாட்டிற்குள்ளே இரயிலில் எங்கே வேண்டுமானாலும் போகிறமாதிரி வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இதுபோன்ற சலுகைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கொடுத்த கோரிக்கை. என்னைப் பார்த்து நீங்கள் ஏதோ திருநாவுக்கரசுக்கு வேண்டுமா என்று கேட்டு விடாதீர்கள். எனக்கும் வேண்டும், எல்லோருக்கும் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை முதல்வர் அவர்கள் பரிவோடு முடிந்தவரை கவனிக்கக் கூடியவர். கண்டிப்பாக இந்தத் தடவை ஏதாவது கவனிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தளவிலே அவர்களுடைய தேவைகளைக் குறித்து இங்கு பேசுகின்ற அத்தனைபேருமே அதை வலியுறுத்தியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உயர்வான இரயில்வே படி வேண்டும், அவர்களுக்கு கார் வாங்குவதற்குக் கடன் வழங்கப்பட வேண்டும் என்கிற பல்வேறு கோரிக்கைகள் உள்ளன. மற்ற மாநிலங்களிலே எல்லாம் இதனைக் காட்டிலும் மிக அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் நம்முடைய அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்றவைகளில் எல்லாம் இந்த இரயில் பயணத்திற்காக மிக அதிகமாக தொகைகளை உயர்த்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கர்நாடகத்திலே 30,000 ரூபாயும், ஆந்திராவிலே 30,000 கிலோமீட்டர் வரையிலான பயணம் செய்யக்கூடிய பயணப் படியும், கேரளாவிலே 35,000 ரூபாயும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு வழங்கப்படுகின்ற இந்தப் படி, ஒரு மாதத்திற்கு ஒரு தடவைகூட சென்னைக்கு வந்து செல்வதற்கு வேண்டிய அளவிற்கு இல்லை என்பது நியாயமான ஒன்று என்கிற காரணத்தால், இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

இப்போது மற்ற மாநிலங்களில் எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, கார் வாங்கிக்கொள்வதற்காக கர்நாடக மாநிலத்திலே 2 இலட்ச ரூபாய் கடன் கொடுக்கிறார்கள்; அரியானா மாநிலத்திலே 4 இலட்ச ரூபாய் வரை கடன் கொடுக்கிறார்கள்; பஞ்சாப்பிலே 3 இலட்ச ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். நமது பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு இடத்திலே குறிப்பிடுகிறபோது "இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் 3 இலட்ச ரூபாய் அளவில் சட்டமன்ற உறுப்பினர்கள் கார் வாங்கிக்கொள்வதற்காகக் கடன் கொடுப்பதற்கு அரசு பரிசீலித்து வருகிறது. அது உடனடியாக நடவடிக்கைக்கு வரும்" என்று பத்திரிகையிலே பேட்டி அளிக்கின்ற நேரத்திலே சொல்லியிருக்கிறார்கள். அது Sun T.V. போன்றவற்றில் எல்லாம். வந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் பார்த்துவிட்டு, நிச்சயமாக அது வழங்கப்படும் என்கிற ஒரு நிலை இருந்தது. அதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

[திரு. லா. சந்தானம்] [1999 மே 13

அதுபோல, தியாகிகளுக்கு எல்லாம் நமது அரசாங்கம் ஓய்வூதியம் வழங்கி வருகிறது. தியாகிகளைப் பொறுத்தவரையில் இந்திய இராணுவத்திலே பணியாற்றியவர்கள். இந்திய இராணுவம் என்பது எங்களுடைய இயக்கத்தினுடைய தலைவரான நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களால் அமைக்கப்பட்ட இராணுவம். இந்த இராணுவத்தினர், சுதந்திரப் போராட்ட காலத்திலே, மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற பகுதிகளில் வாழ்ந்து, அன்றைக்கு சுதந்திர உணர்வால் உந்தப்பட்டு, நேதாஜி அவர்கள் நடத்திய அந்த இந்திய தேசிய இராணுவத்திலே தங்களை இணைத்துக் கொண்டு போராடியவர்கள். அவர்கள் எல்லாம் இப்போது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குடியமர்ந்து, ஓய்வூதியம் மட்டும் பெற்றுக்கொண்டு வாழ்கின்ற ஒரு நிலையிலே இருக்கிறார்கள். மத்திய அரசு அவர்களுக்கு 3,000+210=3210 ரூபாய் வழங்குகிறது. ஆனால், மாநில அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசு ஓய்வூதியம் பெறுகிற இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்கு 500 ரூபாய்தான் வழங்குகிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, ஆந்திரா போன்ற மாநிலங்களில் மத்திய அரசு ஓய்வூதியத்தோடு அவர்களுக்கு 1,500 ரூபாய் வழங்குகின்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே, அதை அவர்கள் சொல்கிறார்கள். தமிழக அரசு தியாகிகளை மதிக்கின்ற அரசு. ஆனால், இப்போது தியாகிகளை மதிக்கின்ற நிலை சற்றுக் குறைந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைக்கு முன்தினம்கூட, தினமணி பத்திரிகையிலே பெரிதாக ஒரு படத்தைப் போட்டு இருக்கின்றார்கள். இங்கே, திருவொற்றியூர், தேரடித் தெருவிலே இருக்கின்ற, இப்போது தேசப்பிதா என்று அழைக்கக்கூடிய மகாத்மா காந்தி அவர்களுடைய சிலையின் கை உடைக்கப்பட்டு, அவருடைய மூக்குக் கண்ணாடி எல்லாம் கழற்றப்பட்டு, ஊனமுற்று இருக்கின்ற ஒரு படத்தை எடுத்துப் போட்டிருந்தார்கள். இப்போது இந்த நாட்டுக்காக தன்னையே அர்பணித்துக்கொண்ட தியாகிகளுக்கு எல்லாம், இந்த அளவுக்கு மரியாதை இருக்கிறதே என்று நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது இப்போது ஓட்டுகளைப் பெறுகின்றவர்கள், யாரைச் சொன்னால் வாக்கு கிடைக்கும் என்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான் மரியாதை இருக்கிறது. அவர்களும், தேசியத் தலைவர்களை எல்லாம் ஜாதிய தலைவர்களாக ஆக்கி, அந்தத் தலைவர்கள் பின்னால் அதிகமான அந்த இனத்து மக்கள் இருப்பார்களேயானால், அந்தச் சிலைகள் உடைக்கப்பட்டுவிட்டால், எவ்வளவோ பெரிய பிரச்சினைகள் இந்த நாட்டிலே வருகின்றன.



1999 மே 13] [திரு. லா. சந்தானம்]

ஆனால், தேசப் பிதா என்று அழைக்கப்படுகின்ற காந்தியினுடைய சிலை உடைக்கப்பட்டது பத்திரிகைச் செய்தியாக வந்திருக்கிறதே தவிர, அதனுடைய நிலை என்ன என்பதைக்கூட உணர முடியாத நிலை இருக்கிறது.

எங்களுடைய தலைவர் நேதாஜி அவர்களைப் பொறுத்தளவிலே காந்தி அவர்களுடைய கருத்திலே மாறுபட்ட கொள்கை இருந்தாலும்கூட அவர் நடத்திய இந்திய தேசிய இராணுவத்திற்குப் பெயரிடுகிறபோது அந்த 'Gandhi Regiment' என்றுதான் பெயரை வைத்துக்கொண்டு தேசிய இராணுவத்தை நடத்தினார். எனவே, இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, நமக்கு, இந்த நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுத் தருவதற்காகப் போராடிய அந்த நல்லவர்களிடத்திலே இருந்த மரியாதை எல்லாம் குறைந்து கொண்டிருக்கிறதோ என்று சிந்திக்கின்ற ஒரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டு இருக்கிறது. எனவே, அந்த I.N.A. தியாகிகளுக்கு மாநில அரசு வழங்கிக்கொண்டிருக்கிற அந்த 500 ரூபாய் உதவித்தொகையை உயர்த்தி, குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாயாகவாவது வழங்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதுபோல, இராணுவத்திலே பணிபுரிந்து ஓய்வுபெற்றிருக்கிறவர்களுக்கும், அந்த தேசிய இராணுவத்திலே பணிபுரிந்தவர்களுக்கும், அவர்கள் சொந்தமாகக் குடியிருப்பதற்கு இப்போதும் பலபேருக்கு வீடு இல்லை. அவர்களுக்கு—வீட்டுமனை வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றபோது இங்கே இருக்கின்ற சந்தை விலைக்கே அவர்கள் வாங்கிக்கொள்வதற்கு நமது அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால், அவர்கள் எல்லாம் இந்த அளவிற்கு விலை கொடுக்க முடியாத அளவுக்குக் கஷ்டத்திலே இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு என்று தனியாகக் குறைந்த விலையிலே வீட்டுமனை வழங்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பரம்பரையாக கிராமப்புறங்களிலே கிராம முன்சீப், கர்ணம் என்கிற பதவியை வகித்தவர்கள் எல்லாம், கடந்த காலத்தில் ஒரே நாளிலே வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, அதற்குப் பின்னால், இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையைப் பரிவோடு ஏற்று, அவர்கள், மீண்டும் பணியினைத் தொடர்வதற்கு உரிய வாய்ப்பினைப் பெற்றவர்களுக்கு எல்லாம் பணியினைக் கொடுத்து, அதற்குரிய அந்தத்

தகுதி இல்லை என்கிறவர்களுக்கு எல்லாம் ஓய்வூதியத்தை இந்த அரசுதான் வழங்கியது. ஆனால், இந்த அரசு 375 ரூபாய் குறைந்த ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு எல்லாம் அதை 1,275 ரூபாய் என்று உயர்த்தி எல்லா தரப்பினருக்கும் வழங்குகின்ற இந்த நேரத்திலே, அந்த கிராமத்திலே முன்சீப்புகளாக, கர்ணங்களாக இருந்தவர்களுக்கு எல்லாம், அவர்கள் பாரம்பரியமான நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் இப்போது வறுமையிலே, மிகுந்த கஷ்டத்திலே இருக்கின்றார்கள் என்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய ஓய்வூதியத்தையும் உயர்த்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எத்தனையோ துறைகளிலே இருக்கின்றவர்களுக்கு எல்லாம் நாம் மிகுந்த கருணையோடு ஓய்வூதியங்களையும், ஊதியங்களையும் உயர்த்தித் தந்திருக்கின்றோம். எனவே, இந்த வேலை இழந்த கர்ணம், V.A.O. போன்றவர்களுக்கு இந்த அரசு கருணையோடு ஓய்வூதியத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

*பிற்பகல் 12-20*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேச எனக்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை முதலிலே சொல்லிக்கொண்டு, இன்று இந்த நன்னாள் வாழ்விலே ஒரு பொன் நாள் என்று சொல்வதுபோல, நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த 9 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து, அதிலே நான்காவது முறை முதல்வர் பொறுப்பேற்று, அதிலே இது நான்காவது ஆண்டு தொடக்க நன்னாள் என்பதனை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) களைப்பை அறியாத கடின உழைப்பாளி, களைப்பு ஏற்பட்ட நேரத்திலே, எங்களுடைய களைப்புகளை அகற்ற பல நேரத்திலே பல புன்னகைகளைச் செய்து எங்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய முதல்வர். சட்டமன்ற உறுப்பினர் என்றால் எப்படி மக்கள் தொண்டாற்றுவது என்று எண்ணிய நேரத்திலே, நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்துக்காட்டாக இரவிலும், பகலிலும் தூங்காது இந்த நாட்டு மக்களைச் சிந்தித்து சிந்தித்து, அது எந்த இடத்திலே என்ன உடைந்தாலும், அது ஏரி உடைந்தாலும் சரி அல்லது நாமம் போட்டு உள்ளே வந்தாலும் சரி (சிரிப்பு) யாரை எப்படித் தடுப்பது,



யாரை எப்படி விட்டுப் பிடிப்பது, விடுவது எப்படி, பிடிப்பது எப்படி என்ற கலையை உலகுக்குக் கற்றுக் கொடுத்த மூத்தவர் இந்த முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி). இந்திய மண்ணில் இவர்போல் இல்லை; எங்களுக்கு இனிமேல் தொல்லை இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முழு நம்பிக்கையோடு என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். அன்புச் சட்டமன்ற உறுப்பினர்களிடம் இங்கு நான் பேசும்போது, சில பத்திரிகைக்காரர்கள்கூட 2 நாட்களுக்கு முன்னால் கணேசன் முதல்வரை மிக அதிகமாகப் புகழ்கிறார் என்று நாசுக்காக அல்ல, தெளிவாக எழுதினார்கள். (சிரிப்பு) நான் அதற்கு வெளிப்படையான ஒரு உண்மையைச் சொல்ல வேண்டும். இந்திய வரலாற்றிலே இந்தத் தமிழ்நாட்டினுடைய மண்ணை, இந்த மண்ணிலே இருக்கக்கூடிய உயிர்களை, அந்த உயிர்களினுடைய உணர்வுகளைப் புரிந்த ஒரு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) யாராவது உதித்து இருக்கிறார்களா என்பதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் பத்திரிகை நண்பர்கள். என்னுடைய அரசியல் வாழ்விலே நான் இந்த சட்ட மன்றத்திற்கு மூன்றாவது முறையாக வந்திருக்கிறேன்; எனக்கும் முதல்வருக்கும் கொள்கை ரீதியிலே எதிரும் புதிருமாக இருந்த காலத்திலேகூட முதலமைச்சரைப் பாராட்ட வேண்டிய நேரத்திலே பாராட்டுவது என்னுடைய நெஞ்சுரம் என்பதை பல நேரங்களிலே இங்கு உறுதிப்படுத்தி இருக்கிறேன். அதேபோல, நாட்டு மக்களுடைய குறைகளை எந்த முறையிலே சொல்லி நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே அனுமதி பெற வேண்டும் என்ற ஒரு கலையை நான் கற்று இருக்கிறேன் (சிரிப்பு) என்று மருத்துவத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்து கூறினார் என்பதனையும் இந்த அவையிலே நான் சொல்லிக்கொள்கிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு என்ன தேவை? தன்னுடைய தொகுதி மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை, திரு. சொக்கர் சொல்வதுபோல, செய்ய வேண்டிய கடமையைச் செய்பவர்தான் ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற அகராதியைக் கற்றுக் கொடுத்தவர் நம்முடைய முதல்வர் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) நாம் எதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறோம்? என்னுடைய அருமை நண்பர் ஞானசேகரன் கூறியதுபோல, 54 ஆயிரம் ரூபாய் சம்பளம் கேட்பதற்காகவா? (சிரிப்பு) எத்தனையோ கருத்து வேற்றுமைகள் எனக்கும் அருமை நண்பர் ஞானசேகரனுக்கும் இருந்தாலும், அவர் பேசியதிலே பல உண்மைகள் இங்கே இருந்தன: (சிரிப்பு). அதற்கு நான் நண்பர் அவர்களைப் பாராட்டி, அவர் சொன்னதனை நானும் கூறியதாக

எடுத்துக்கொள்ள வேண்டும். (சிரிப்பு) நம்முடைய முதல்வர் அவர்கள், சகோதரர் ஞானசேகரன் பேசியதை உரிமைக் குழுவிற்குக்கூட விடலாம் என்று தெரிவித்து அவருக்கே உண்டான வேடிக்கையிலே அதை அவர் ஆரம்பித்தார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுக்குப் பணிவோடு சொல்லிக்கொள்வது எல்லாம், இந்திய வரலாற்றிலே தமிழ்நாடு தொழிற் துறையிலே 7-வது இடத்திலிருந்து, 3-வது இடத்திற்கு வந்து, இன்று நம்முடைய முதல்வர் அவர்களுடைய 3 ஆண்டு உழைப்புக்குப் பிறகு, முதலிடம் வகிக்கிறது (மேசைத் தட்டும் ஒலி) என்ற பெருமையை தமிழ்நாடு பெற்று இருக்கிறது என்பதைச் சொல்லும் போது, என்னுடைய மார்பு எப்படியெல்லாம் துடிக்கிறது என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (சிரிப்பு). இருப்பினும் சட்டமன்ற உறுப்பினர்கள் (சிரிப்பு) என்ன எல்லோரும் சிரிக்கிறீர்கள்? (சிரிப்பு) சட்டமன்ற உறுப்பினர்கள் ஒழுங்காக, சிறப்பாக .... (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெஞ்சம் துடிக்கிறது என்று சொல்லுங்கள். (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of order.

**திரு. ஐ. கணேசன்:** அவர்களைப் பற்றிப் பேச மாட்டேன். இதோடு விட்டுவிடுகிறேன். (குறுக்கீடு) உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பாரதியாரே பாடியிருக்கிறார். 'மார்பு துடிக்குதடி கண்ணம்மா' என்று. ஆகையினால் இலக்கிய ரீதியாகப் பேசியிருக்கிறார்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவரே, point of order கேட்கிறார். (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது. தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சிலே குறுக்கிடுவதை நான் விரும்பவில்லை. (குறுக்கீடு) ஒன்றே ஒன்றுகூட கிடையாது. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் yield ஆக மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. ஐ. கணேசன்:** ஆந்திரப் பிரதேசத்திலே .... (குறுக்கீடு) கொடுத்துவிடலாமா? (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் மிக அற்புதமாக, சிறப்பாக, அவருக்கே உரித்தான பாணியில் நடித்துக் காட்டியிருக்கிறார். அந்த 'மார்பு துடிக்கிறது' எப்படியென்பதையும் அவரே நடித்துக்காட்டிவிட்டார் என்றால், அது என்னவென்பதை நாங்கள் தெரிந்துகொள்வோம். (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நண்பர் சுந்தரம் அவர்களுக்கு, போயும் போயும் கணேசன் மார்பு துடிப்பதைப் பார்ப்பதிலே அவ்வளவு ஆர்வமா? (பலத்த சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சற்று அழுத்தமாகச் சொன்னேன். நம்முடைய முதல்வர் அவர்கள் சற்று நிதானமாகச் சொல்லிவிட்டார். இருப்பினும் நேரம் இல்லாத காரணத்தினால் முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல நம்முடைய
தென்னாட்டைச் சேர்ந்த ஆந்திர மாநிலத்தில் சட்டமன்ற
உறுப்பினர்களுக்குச் சம்பளமாக 2,500 ரூபாயும், தொலைபேசிக் கட்டணம்
ரூ. 7,000-மும் வழங்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் தொலைபேசிக்
கட்டணம் வெறும் 875 ரூபாய்தான். அதேபோல தொகுதிப்படி, அங்கு
3,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இங்கு 875 ரூபாய்தான் வழங்கப்படுகிறது.
அதேபோல, அங்கு தபால்படி 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இங்கு
875 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. இட வசதிப்படி 3,000 ரூபாய்
வழங்கப்படுகிறது. ஆனால் இங்கே அந்தப் படி வழங்கப்படவில்லை.
அலுவலக உதவியாளர் படி 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இங்கு
வழங்கப்படவில்லை எதிர்பாராச் செலவு அங்கு 1,000 ரூபாய்
வழங்கப்படுகிறது. இங்கே வழங்கப்படவில்லை.

நம்முடைய தென்னாட்டில் இருக்கக்கூடிய ஆந்திரப் பிரதேசத்தில் 21,500 ரூபாய் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பல வகைகளிலே படிகளாக வழங்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டிலே அது வெறும் 9,000 ரூபாய் என்பதை முதல்வர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல, மகாராஷ்டிராவிலே வாகனப்படி 8,000 ரூபாயும், தொலைபேசிப் படி 4,500 ரூபாயும், தபால் செலவிற்கு 2,000 ரூபாயும், நேர்முக உதவியாளருக்கு

[திரு. ஐ. கணேசன்] [1999 மே 13

2,500 ரூபாயும், ஆக மொத்தம் 20,500 ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோல ஹரியானாவிலே ரூபாய் 19,500 வழங்குகிறார்கள். மற்ற மாநிலங்களிலே குறைந்தது 12,000 ரூபாய்க்கு மேலாக வழங்குகிறார்கள் என்பதை முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இரயில்வே படியைப்பற்றி நான் சென்ற முறை இங்கே மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே இரயில் இட வசதிக்காக அங்கு ஒரு அலுவலகம், முன்பதிவு அலுவலகம் இருக்கிறது. இது குறித்து நான் சபாநாயகர் அவர்களிடத்திலே குற்றமாகவே இந்த இடத்திலே ஒன்றைச் சொல்கிறேன். விதியில்லாவிட்டாலும் பரவாயில்லை. அதைச் செய்தாக வேண்டும். நான் இரண்டு, மூன்றாண்டுகாலமாகச் சொல்லி வருகிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்றால், மனைவியோடு செல்வதற்கு எங்களுக்கு உரிமையில்லை. இரண்டு பேருக்கான டிக்கெட்டுகள்தான் அந்த இரயில்வே கவுண்டரில் புக்கிங் செய்யமுடிகிறது. அதை மாற்ற வேண்டும். நாளை சட்டமன்றக் கூட்டம் முடிந்து ஊருக்குச் செல்லவேண்டுமென்றால், யார் முந்திச் செல்வது? எப்பொழுது டிக்கெட் வாங்குவது என்று ஒரே பிரச்சினை. நான் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடத்திலே சொன்னேன். சபாநாயகரிடமும் சொன்னேன். இந்தச் சட்டமன்றத்திலேயும் சொன்னேன். இது ஏன் கவனிக்கப்படவில்லை? அவ்வளவு பெரிய வேலை என்ன? இரயில்வேக்கு ஒரு தபால் எழுதவேண்டும். கால் கடிதம் எழுத வேண்டும் அவ்வளவுதான். அவர்களுக்கு இடவசதி, phone வசதி, fan வசதி ஆகிய அனைத்தும் செய்து கொடுத்திருக்கிறோம். ஆனால், அவர்கள் ஜாலியாக வந்துவிட்டுச் செல்கிறார்களே ஒழிய, எங்களுக்கு அது பயன்படவில்லை. தயவுசெய்து இந்த ஆண்டாவது...

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், உட்காருங்கள். இரயிலில் பயணம் செய்வதைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சுய கட்டுப்பாடு இருக்கவேண்டும். உறுப்பினர்களுக்காகத்தான் அந்த முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரிந்தவர்கள் யார் போனாலும் கையெழுத்துப்போட்டுக் கொடுத்துவிடுகின்றார்கள். அதனால்தான் மற்ற உறுப்பினர்களுக்குக் கிடைப்பதில்லை என்ற உண்மையை கணேசனுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)



1999 மே 13]

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக செயலாளர் இந்தக் கருத்தை உங்களுக்குச் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். அது தவறு, செங்கோட்டை பாசஞ்சரில் இரண்டே டிக்கெட்டுகள்தான் கொடுக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி இருங்கள், நான் சொல்கிறேன். பேரவைத் தலைவருக்கு ஒன்றும் தெரியாது, செயலாளர் சொல்லித்தான் சொல்கிறார் என்று சொல்வதை நான் கடுமையாக ஆட்சேபிக்கின்றேன். நான் மதுரைக்குப் போகும்போது, பல உறுப்பினர்கள் என்னோடு வருகிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களே சொல்கிற குற்றச்சாட்டு மற்ற உறுப்பினர்கள் பல பேர் எழுதிக் கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள் வந்தால் பரவாயில்லை. அவர்கள் வராமல் மற்றவர்களுக்கு எழுதிகொடுத்துவிடுகிறார்கள். ஆகையால் நாங்கள் M.L.A. என்று போகும்போது, எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று இப்பொழுது ஒரு வாரத்திற்கு முன்புகூடச் சொன்னார்கள். அதனால் செயலாளர் சொல்லி நான் சொல்லவில்லை. நீங்கள் சொல்லுங்கள், இரண்டு டிக்கெட் என்பதை வேண்டுமானால் அதிகப்படுத்தச் சொல்லி எழுதிப் பார்க்கலாம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணேசன் கேட்பதும் அதுதான். செங்கோட்டை பாசஞ்சர் என்று உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், இரண்டு டிக்கெட்டுகள்தான் அதில் எங்களுக்கு அனுமதி இருக்கிறது. ஆனால், சிதம்பரம், பூம்புகார், சீர்காழி, மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு அந்தக் கணக்கு எல்லாம் தெரியும். நீங்கள் வரிசையாக இவ்வளவு சொல்லவேண்டாம். நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் போய் கேட்டு, அந்த இரண்டு டிக்கெட் உங்களுக்கு இல்லை என்றும், வேறு யாருக்கோ அந்த டிக்கெட் கொடுத்தாகிவிட்டது என்றும் பதில் சொல்கிறபொழுது, அந்த இரண்டு டிக்கெட்டிலும் M.L.A. சென்றிருக்கமாட்டார். M.L.A. எழுதிக் கொடுத்து, வேறு யாரோ சென்றிருப்பார்கள். அதுதான் பிரச்சினை, கணேசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குத் தவறான தகவல்கள் வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். Emergency Quota எழுதிக் கொடுப்பதைப் பற்றிப் பேசுகிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். (குறுக்கீடு) அதைப் பற்றி இல்லையா, அப்படி என்றால் சரி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாராவது ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்கள் வேண்டுமானால் அப்படி எழுதிக் கொடுத்திருக்கலாம். அநேகமாக கம்பன் எக்ஸ்பிரசில் .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தவறு என்று சொல்லவில்லை நண்பர்கள் வருகிறார்கள், நீங்கள் கையெழுத்துப் போட்டால் டிக்கெட் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், நீங்களும் எழுதிக் கொடுத்துவிடுகிறீர்கள். இதுதான் நடக்கிறது. நான் இதைக் குறையாகச் சொல்லவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், நமக்குள்ளே ஒரு கட்டுப்பாடு இருந்து, நாமே போனால், அந்த டிக்கெட் நமக்குக் கிடைக்கும். நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு, என்னோடு மதுரைக்கு வந்த சட்டமன்ற உறுப்பினர், அந்த இரயிலில் மூன்று டிக்கெட்டுகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிறார்கள்; அந்த மூன்று டிக்கெட்டுகளுக்கும் வேறு மூன்று M.L.A.கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்; ஆனால், பயணம் செய்தது அந்த M.L.A.கள் இல்லை. அவர்கள் எழுதிக் கொடுத்த ஆட்கள்தான் பயணம் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** இரண்டு டிக்கெட்டுகள் போதாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அதிகப்படுத்தச் சொல்லி எழுதலாம்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு விஷயத்தில் நான் உங்களுடைய சீடனாக இருக்க விரும்பவில்லை. (சிரிப்பு) ஏனென்றால் எனக்குத்தான் தெரியும், வாரா வாரம் எவ்வளவு கஷ்டப்படுகின்றேன் என்பது. இரண்டே இரண்டு டிக்கெட்டுகள்தான். ஏற்காடு எக்ஸ்பிரஸ் என்று உதாரணத்திற்கு வைத்துக்கொள்ளுங்கள். 17 சட்டமன்ற உறுப்பினர்கள் சேலம், நாமக்கல் செல்லவேண்டும். எத்தனை டிக்கெட் அங்கு வழங்கப்படுகின்றன என்றால், இரண்டு டிக்கெட்டுகள்தான் வழங்கப்படுகின்றன. இரண்டே இரண்டு டிக்கெட்டுகள்தான் வழங்கப்படுகின்றன. ஒரு முறை நான் சொன்னேன். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சரும் என்னைக் கிண்டல் செய்தார்கள். எவ்வளவு கஷ்டப்பட்டு தொங்கிக்கொண்டு போனேன் தெரியுமா? சென்னையிலிருந்து சேலம் வரை போனேன் என்று சொன்னபோது, இதே அவையில் அவர்கள் எப்படி இந்த உடம்பை வைத்துக்கொண்டு



தொங்கிக்கொண்டு போனாய் என்று கேட்டார்கள். ஆனால், நீங்கள் வந்து பார்க்க வேண்டும் எவ்வளவு கஷ்டம் என்று. இன்றைக்கு சபையைவிட்டு நாளைக்கு ஊருக்குப் போக வேண்டும்; நாளைக்கு இரவு புறப்பட்டு இங்கே வரவேண்டும். மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இன்றைக்கு அவர் டிக்கெட் வாங்கிவிட்டார், எனக்குக் கிடைக்காது. சுந்தரம் வாங்கிவிட்டார், எனக்குக் கிடைக்காது, தயவுசெய்து அதை அதிகப்படுத்த வேண்டும். வேறு ஒன்றும் கேட்கவில்லை. இரயில்வே துறைக்கு எழுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகப்படுத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

இன்னொன்று, இரயில் பயணத் தொகையாக ஹரியானாவிலே—மாண்புமிகு முதலமைச்சர் கவனத்திற்கு—70 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 70 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். பஞ்சாபில் 50 ஆயிரம் ரூபாய், இராஜஸ்தானில் 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். பழனிசாமி சொல்லுகிறார் இது இருந்தால் நான் விமானத்திலேயே செல்வேன் என்று. (சிரிப்பு) ஆனால், நான் நண்பர் பழனிசாமிக்குத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். உங்களுடைய அரசு ஆளக்கூடிய கேரள மாநிலத்தில் 35 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். மேலும், ஆந்திரபிரதேசத்தில் 30 ஆயிரம் கிலோ மீட்டருக்கு முதல் வகுப்பு டிக்கெட் கட்டணம் வழங்கப்படுகிறது. இமாச்சலப்பிரதேசத்தில் 80 ஆயிரம் கிலோ மீட்டருக்கு வழங்கப்படுகிறது. பீகாரிலே 30 ஆயிரம் கிலோ மீட்டருக்கு வழங்கப்படுகிறது. ஹரியானாவிலே 30 ஆயிரம் கிலோ மீட்டருக்கும், மிசோரத்திலே 40 ஆயிரம் கிலோ மீட்டருக்கும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே மிக, மிக, மிகக் குறைந்த தொகை வழங்கக்கூடிய ஒரு மாநிலம், கடைசியாக இருந்த வெள்ளைக்காரன் விட்டுவிட்டுப்போன அதே தொகை 10 ஆயிரம் ரூபாயைத்தான் இங்கே வழங்குகிறீர்கள். ஆகவே, தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் மனம் மாற்றி (குறுக்கீடு) ஒரு இலட்சம் என்பது அதிகம். 50 ஆயிரம் ரூபாய் வரை வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுப்பராயனும், பழனிசாமியும் உங்களுக்குப் பரிந்துரை செய்வதாகச் சொல்கிறார்கள். நீங்கள் ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள்?

**திரு. ஐ. கணேசன்:** காலையில் நான் முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். அண்ணா இதைப் பாருங்கள், இது மாதிரி எல்லா

மாநிலங்களிலும் கொடுக்கிறார்கள். தமிழகம்தான் கடைசியாக இருக்கிறது என்று கேட்டேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர், பழனிசாமி சொன்னால் கண்டிப்பாகக் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். அதனால் நிச்சயமாக கேரளாவில் கொடுப்பதைவிட ஒரு ரூபாயாவது அதிகப்படுத்திக் கொடுப்பார் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து என்றுமே பின்வாங்கியது இல்லை. இன்றைக்கும் பின்வாங்க மாட்டார் என்று உறுதியுடன் நம்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் இன்றைக்கும் பின்வாங்கத் தயாராக இல்லை. பழனிசாமி சொன்னால் கொடுப்பேன் என்று சொன்னதிலிருந்து பின்வாங்கத் தயாராக இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** நாங்கள் வாங்கிக் கொடுத்தால் வாங்கிக் கொள்வார். அவர் ஏனோ பின்வாங்குகிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சரின் ஆற்றலைப் பற்றிச் சொன்னீர்கள். அவர் சொல்லமாட்டார் என்ற தைரியத்தில்தான் முதலமைச்சர் சொன்னார் என்றுகூட உங்களுக்குத் தெரியவில்லையே, என்ன பிரயோஜனம்.

**திரு. ஐ. கணேசன்:** நான் சொல்வது பழனிசாமி இயக்கத்திலே, அந்தத் தலைமை ஆளக்கூடிய கேரளாவிலே 3.5 ஆயிரம் ரூபாய் பயணப்படி வழங்குகிறார்கள். உண்டா இல்லையா என்பதை அவர் வாயாலே சொல்ல நெஞ்சுரம் இருக்கிறதா என்று கேட்கிறேன். (சிரிப்பு) பழனிசாமியைவிட கணேசன் அண்ணன் என்பதை இதிலே உறுதிப்படுத்துகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் ஆகிவிட்டது. விரைவில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** காவல் துறை மானியக் கோரிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய அந்த பொன்னான நேரத்தில் கலந்து கொள்ளக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை என்னுடைய வீட்டிலே நடந்த ஒரு துக்கத்தின் காரணமாக நழுவவிட்டுவிட்டேன். நீண்ட நெடுங்காலமாக இருந்த அந்தப் பிரச்சினைக்காக, எடப்பாடி காவல் நிலையத்திற்காக இந்த அவையிலே பலமுறை சொல்லி, கர்ஜித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலே அது நவீனப்படுத்தப்பட்ட வசதியுடன் புதுப்பிக்கப்படும் என்று அறிவித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-40

புதுப்பித்துக் கட்டிக் கொடுக்கப்படும் என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திருத்துகிறார்கள். அதற்கு நன்றி. அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக, என்னுடைய சார்பாக, என் இயக்கத்தின் சார்பாக நன்றி, நன்றி, நன்றி என்று சொல்லி, கடைசியாக, சாதாரண ஒன்றியச் சேர்மென்களுக்குக்கூட அலுவலக உதவியாளர், தொலைபேசி வசதி மற்றும் ஜீப் வசதியெல்லாம் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தவிதமான தவறும் செய்யக்கூடாது என்று நினைக்கக்கூடிய நம்முடைய முதல்வருடைய, அந்த உள்ளத்திலே இருக்கக்கூடிய அதே உணர்வின் அடிப்படையிலே நான் சொல்கிறேன்; எந்த சட்டமன்ற உறுப்பினரும் நமக்கு வாக்களித்த மக்களிடத்திலேயிருந்து எந்தத் தேவைகளையும் எதிர்பார்க்காமல் செய்யக்கூடிய, இந்த முதல்வருடைய ஆட்சியிலே, நானும், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் நேர்மையாகச் செயல்பட வேண்டும் என்பதிலே முதல்வருக்குச் சளைத்தவர் இந்த கணேசன் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நேர்மையாகச் செயல்படுவதிலே பல சிக்கல்கள், பல தொல்லைகள். பொருளாதார நெருக்கடிகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் உணர்ந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், மக்களுக்கு முழுமையாகக் காரியங்களை நிறைவேற்ற, அவர்களுடைய குறைபாடுகளை, நம்முடைய முதல்வர் அவர்கள் தன்னுடைய குறைபாடாக எண்ணி, கருதி, அதைப் போக்கவேண்டும். எங்களுக்கு ஓர் அலுவலகமும், உதவியாளரும் கொடுப்பதுடன் தொலைபேசிக் கட்டணத்தையும், அதேபோல, இரயில்வே படியையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்த வாய்ப்பினை நல்கிய அருமைத் தலைவருக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. வி.கே. லட்சுமணன்; மிகவும் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும். இன்றைக்கு guillotine நேரம்; 1½ மணிக்குள் வாக்கெடுப்பு எடுத்தாக வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே மானியக் கோரிக்கைகள் மீது பேச வருகின்ற நேரத்திலெல்லாம், நாம் முதலிலே பார்ப்பது, இந்த வெட்டுத் தீர்மானங்களைத்தான். அதேபோல, இப்போது இந்த வெட்டுத் தீர்மானப் புத்தகத்தை எடுத்துப் படித்துப் பார்த்தால், ஏகதேசம் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரே கோரிக்கையைத் தான்

வைத்திருக்கிறார்கள் என்பதை என்னாலே பார்க்க முடிந்தது. அது என்ன கோரிக்கை என்பதை நான் பின்னாலே சொல்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 6 மானியக் கோரிக்கைகள் இருந்தாலும்கூட, 41-ஆம் எண் மானியக் கோரிக்கையான விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றிய கோரிக்கையைப் பற்றி இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துக் கூறாமல் இருந்தது எனக்குச் சற்று வருத்தமாக இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழக அரசு எந்த நல்ல முடிவினை எடுக்க வேண்டுமென்ற நிலை வந்தாலும், அண்டையிலே இருக்கிற மாநிலங்களைப் பார்த்து, அந்த மாநிலத்திற்கு அதிகாரிகளை அனுப்பி, அங்கே எப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்துகொண்டு, அதற்குப் பின்னாலே முடிவெடுப்பதை ஒரு நல்ல பழக்கமாக வைத்திருக்கிறது. அது பேருந்துக் கட்டண உயர்வாக இருந்தாலும் சரி; பால் விலை உயர்வாக இருந்தாலும் சரி; அல்லது, பஞ்சாயத்துச் சட்டமாக இருந்தாலும் சரி, அப்படித்தான் இந்த அரசு செய்து வருகிறது என்பதை நான் நன்றாக அறிவேன்.

*பிற்பகல் 12-45*

இப்போது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே, மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு 3,000 ரூபாய் பணம் கொடுக்கிறது. ஆனால், மைய அரசு 3,000 ரூபாய் கொடுக்கிறது. அப்படி, மைய அரசு கொடுக்கிற மானியத் தொகையைப் பெறுகிற அந்தத் தியாகிகளுக்கு மாநில அரசு 500 ரூபாய் மட்டும்தான் கொடுக்கிறது. ஆனால், அண்டையிலே இருக்கிற மாநிலத்திலே பார்த்தால், பாண்டிச்சேரியிலே 1,500 ரூபாய் கொடுக்கிறார்கள். அதேபோல, கேரளாவிலே 2,000 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆக, பாண்டிச்சேரியிலே ஒரு தியாகி மாநில, மைய அரசினுடைய இரண்டு மானியத்தையும் பெறுவார் என்று சொன்னால், அவருக்கு 4,500 ரூபாய் வரும். அதேபோல, கேரள மாநிலத்திலே ஒருவர் இரண்டு அரசினுடைய மானியத்தையும் பெறுவார் என்று சொன்னால், அவருக்கு 5,000 ரூபாய் வரும். ஆகையால், நம்முடைய அரசும் அதைக் கருத்திலே கொண்டு நம்முடைய தியாகிகளுக்கு இப்போது கொடுத்து வருகிற 500 ரூபாயை 1,500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதுதவிர, தியாகிகளுக்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டுவிட்டது. மிக அழகாக, சுதந்திரப் போராட்டத்தை



நினைவுபடுத்தும் முறையிலே, நல்ல முறையிலே அந்த மண்டபம் அமைந்திருக்கிறது. அந்த மண்டபத்தில், தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா தியாகிகளுடைய படங்களையும், பெயர்களையும் பொருத்தி வைக்க வேண்டும் என்று நான் அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) சில பேர்களுக்கு இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கிண்டியில் காந்தி மண்டபத்திற்கு அருகில்தான் தியாகிகள் மணிமண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. தியாகிகளுடைய படங்களை அனுப்புமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு எல்லாம் கடிதங்களும், பத்திரிகை மூலமாக அறிக்கையும், இன்னும் சொல்லப்போனால், தியாகிகளோடு அதிகத் தொடர்பு உடையவராக இப்போதும் இருந்து வருகின்ற இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் மூலமாகத் தொடர்புகளும் கொண்டு, அவர் வழியிலே அந்தப் படங்கள் எல்லாம் வரவழைக்கப்பட்டு, அந்த மண்டபத்திலே வைக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து வைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அதை போய்ப் பார்த்தால் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஈமச் சடங்குக்காக 1,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. அது மிகவும் குறைவான தொகை என்று நான் கருதுகின்றேன். அதைக் குறைந்தது 2,500 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலேயும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விடுதலை வேள்வியினுடைய பொன்விழாவை நாம் மெரினா கடற்கரையிலே கொண்டாடியபோது, ஒரு பெரிய cut-out வைத்திருந்தோம். அது என்ன என்று சொன்னால், அந்தமானிலே செல்லுலார் ஜெயில் எப்படி இருக்கிறதோ, அதைப்போல தோற்றத்தை அளிக்கக்கூடிய ஒரு பெரிய cut-out-ஐ அங்கு வைத்திருந்தோம். நான் அந்தமான் போய் இருந்தபோது செல்லுலார் ஜெயிலுக்குப் போய் இருந்தேன். எங்கு தேடிப் பார்த்தாலும், அந்த செல்லுலார் ஜெயிலிலே இருக்கின்ற கல்வெட்டுகளிலே, ஒரு கல்வெட்டிலேகூட ஒரு தமிழன் பெயர் கூட இல்லை. எங்கோ தவறு நடைபெற்றிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிச்சயமாக அந்த மாதிரி இருந்திருக்க முடியாது. ஏதோ சூழ்ச்சியோ, சூதோ நடைபெற்று, அதன் காரணமாக அப்படி நடந்திருக்க வேண்டும். வங்காளிகள் பெயர்,

பஞ்சாபிகள் பெயர் இருக்கிறது, ஆனால், தமிழர்கள் பெயர் ஒரு கல்வெட்டிலே கூட இல்லை என்பதை நான் மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது என்ன என்பதை ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு இந்த அரசு பார்த்து தமிழர்கள் பெயர்களை அங்கே பொறிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த . . .

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஏற்கெனவே இருக்கின்ற கல்வெட்டுகளில் எப்படிப் பெயர் விடுபட்டது என்பதைக் கண்டுபிடிப்பது அரிதாக இருக்கும். காரணம், அங்கே இருக்கிற கல்வெட்டுகளில் முழுமையான வரலாறு இருக்கிறது. குறிப்பாக, மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமானபேர் கைதுசெய்யப்பட்டு கிட்டத்தட்ட 330 பேர் ஒரே நேரத்தில் அங்கே உள்ள 698 அறைகள் கொண்ட அந்தச் சிறைச்சாலையில் இருந்திருக்கிறார்கள். அப்போது பிரிக்கப்படாத தென்னகத்தின் சார்பில், மொத்தம் 6 பேர் தான் இருந்திருக்கிறார்கள். அதுதான் உண்மையான நிலை. அதைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று தெரியவில்லை. நானும் முழுமையாக ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் அதை எழுதியிருக்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அங்கு சென்று பார்த்தவர்களுக்கு, ஒருவேளை தமிழர்கள் அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு அந்தமானுக்கு வரவில்லையோ எனும் எண்ணம் ஏற்படுகிற அளவுக்கு அந்த நிலை இருக்கிறது என்பதை நான் உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த 41 ஆம் எண் மானியக் கோரிக்கையிலே, மொழிப் போர்த் தியாகிகள் எவ்வளவு பேர், அவர்களுக்கு நாம் எவ்வளவு தொகை கொடுக்கிறோம் என்பதைப் பற்றி விரிவாகக் குறிப்பிடப்படவில்லை என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது. இந்த ஓய்வூதியம். ஓய்வூதியத்தைப் பொறுத்தமட்டிலும், இன்னும் பல துறைகளைச் சார்ந்த பணியாளர்களுக்கும் நாம் ஓய்வூதியம் வழங்க வேண்டும். குறிப்பாக, கூட்டுறவுத் துறையைச் சார்ந்த பணியாளர்கள், போக்குவரத்துப் பணியாளர்கள், உள்ளாட்சித் துறையைச் சார்ந்த பணியாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்குமா என்று ஆராய்ந்து, வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அது மட்டுமல்லாமல், விபத்திலே இறந்தவர்களுக்கு கருணைத் தொகை, அந்த விபத்து நடந்து, அதிகாரிகளை அணுகி, ஏறத்தாழ பல மாதங்கள் ஆனபிறகுதான் கிடைக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு விபத்தில்கூட, ஒருவருக்கு 5 மாதங்கள் கழித்துத்தான் அந்தத் தொகை கிடைத்தது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

அதுமட்டுமல்ல, அண்மையிலே நம்முடைய முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கிராமங்களிலே இருக்கின்ற 60 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கும் ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தை அறிவித்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

போடிநாயக்கனூரில், சிவசாமி என்பவருக்கு, பித்தப் பையிலே கல் இருந்ததற்காக ஓர் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு நவீன அறுவை சிகிச்சை; அதை இரண்டு முறைகளிலே செய்யலாம். அது நவீன முறையிலே செய்யப்பட்டிருக்கிறது. அந்த நவீன முறை என்னவென்று சொன்னால், Cholecystitis என்று அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அரசினுடைய ஆணையில் Lithiasis என்று இருந்தால்தான் அவருக்கு முழுத் தொகையும் அளிக்கப்பட வேண்டும் என்றிருக்கிறது. ஆனால், இந்த முறையிலே செய்யப்பட்டதால், தொகை அளிக்கப்படாது என்று பதில் வந்திருக்கிறது. ஆகையினால், நோய் ஒன்றுதான்; அந்த சிகிச்சை முறைதான் வேறுபடுகிறது. எனவே, அதை நாம் எண்ணிப் பார்க்காமல், இந்தச் சிகிச்சைக்கும் உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தேர்தல்கள்; தேர்தல்களைப் பொறுத்தமட்டிலே, மிக விரைவாகத் தேர்தல்கள் இப்போது வர இருக்கின்றன. ஆனால், எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. ஆகவே, மிக விரைவாக, வாக்காளர்களுக்குப் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டையை வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தைப் பொறுத்தமட்டிலே, நான் இங்கே வந்தவுடன் பல்வேறு கேள்விகளை எழுதிக் கொடுத்திருந்தேன். ஆனால், பல கேள்விகளுக்கு பதில் வருவதற்கு ஏறத்தாழ 6 மாத காலம் ஆகியிருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொன்னால், குறுகிய கால வினாவிற்கு 2 நாட்களிலே பதில் அளிக்க வேண்டும். அதற்குக் கூட பல நாட்கள் ஆகிவிடுகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனவே, அரசு அந்த வினாக்களுக்கு விரைவாகப் பதிலைப் பெற்றுத் தருவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே உறுப்பினர்கள் ஏற்கெனவே பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய M.L.A-க்களைப் பற்றி நான் இங்கே எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஏற்கெனவே பலபேர் தங்களுடைய கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அளவிலே என்னுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் எழுந்துள்ள இந்த விவாதத்தில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 10 பேர், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் உட்பட, தங்களுடைய ஆழமான கருத்துகளை, வலியுறுத்துகிற கருத்துகளை எடுத்து வைத்து உரையாற்றியிருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றம் இன்னும் அதிக நாட்கள் நடைபெற வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் திரு. பழனிசாமி அவர்களாலும், வேறு சில உறுப்பினர்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டது. இதுகாறும், கடந்த பல ஆண்டுகளில் இந்தச் சட்டமன்றம் நடைபெற்ற நாட்களைவிட, இப்போது ஓரளவுக்கு அதிகமாகத்தான் நடைபெறுகிறது என்பதும், ஒவ்வொரு நாளும் சட்டமன்றம் முழு நேரமும் நடைபெறக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறது என்பதும், இந்தச் சட்டமன்றத்திலே உரையாற்றுகிற அந்த வாய்ப்பு, அனைத்து உறுப்பினர்களுக்கும் என்று சொல்லாவிட்டாலும்கூட, அனைத்துத் தரப்பினருக்கும் மிக அதிக அளவுக்கு வழங்கப்பட்டு, எதிர்க் கட்சி உறுப்பினர்களுடைய கருத்துகள் அதிக முதன்மை பெற்று, ஜனநாயக மரபு இந்தச் சட்டமன்றத்தின் மூலமாகக் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பதும் சட்டமன்ற உறுப்பினர்களும், அதேபோல் பொதுமக்களும் பெருமைப்படக்கூடிய ஒரு செய்தியாகும்.





நான் அறிந்தவரையில், ஏராளமான கருத்துகள் வாதிக்கப்படுகிற வாய்ப்பு, இந்தச் சட்டமன்றத்திலே, அதுவும் இந்த 3 ஆண்டு காலத்தில் மிகச் செம்மையாக உருவாகியுள்ளது. கேட்கப்பட்ட எல்லாக் கேள்விகளுக்கும் 6 மாதத்திற்குள் பதில் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு குறை சொல்லப்பட்டாலுங்கூட, ஒவ்வொரு நாளும் எவ்வளவு கேள்விகள் இடம் பெற வேண்டுமோ, அவ்வளவு கேள்விகள் இடம்பெற்று, அவற்றிற்குப் பதில் சொல்லப்படுகின்ற நிலையும் தொடர்கிறது. ஜனநாயக மரபைக் காப்பாற்றுவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு சட்டமன்றம்தான் முதலிடம் வகிக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை, அதுவும் அண்மைக் காலத்திலே பல்வேறு சட்டமன்றங்கள், நாடாளுமன்றம் ஆகியவற்றினுடைய நடப்பைப் பார்க்கின்றபோது, நிச்சயமாக நாம் பெருமைப்பட முடியும்.

*பிற்பகல் 12-55*

மேல்நாடுகளுக்குச் சென்று, அங்கேயுள்ள சட்டமன்ற நடவடிக்கைகளையெல்லாம் பார்த்துத் திரும்பி வந்து, இந்தச் சட்டமன்ற நடவடிக்கையிலே தாங்கள், தங்களுடைய பட்டறிவைப் பயன்படுத்த வேண்டும் அல்லது பெற்ற அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்று சில உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மேல்நாட்டிற்குப் போவதற்காக அப்படிச் சொல்லிக்கொள்வது மரபு. அங்கே பார்த்துத் தெரிந்துகொண்டு செயல்படுத்துவது என்பது கடினம். ஏனென்றால், இப்போது உலகத்திலேயே, பல நாடாளுமன்றங்களில் சட்டமன்றங்களில் ஆங்காங்கு பல்வேறு பிரச்சினைகள் தலை தூக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இருந்தாலும் நம்முடைய மரபு, தமிழ்நாட்டு மக்களுடைய மரபு இடைக்காலத்திலே, சில நேரங்களிலே ஊறுபட்டாலுங்கூட, மறுபடியும் எடுத்து நிறுத்தத்தக்கதாக இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாற்றுக் கட்சியினுடைய கருத்துகள் முழுவதையும் பேச இடம் கொடுத்து, அதற்குப் பின்னர்தான் விளக்கமான பதில் சொல்லும் வகையில், அப்படி ஒரு மரபை வளர்த்திருப்பதற்காகவே இந்தச் சட்டமன்றப் பணி மிகச் செம்மையாக, நாம் மனநிறைவு கொள்கிற அளவிற்கு, நீங்கள் எல்லாம் திருப்தி அடையக்கூடிய அளவிற்கு இருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடந்த 5 ஆண்டுகளில், கடந்த ஆட்சியில் சட்டமன்றம் நடைபெற்றதைவிட, இந்த முறை, இந்த 5 ஆண்டுகளில் சட்டமன்றம்

நடைபெறக்கூடிய நாட்கள் அதிகமாகத்தான் இருக்கின்றன என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஓய்வூதியம் பெறுகின்றவர்களைக் குறித்துப் பல கருத்துகள் எடுத்துச் சொல்லப்பட்டன. அரசு அலுவலர்களாக இருந்தாலும் சரி, அல்லது பிற வகை ஓய்வூதியம் பெறுகின்றவர்களாக இருந்தாலும் சரி, இந்த ஓய்வூதியத்தை உடனுக்குடன் பெறுவதற்காகவே ஒரு துறை தனியாக அமைக்கப்பட்டு, ஓய்வூதியம் யாருக்குத் தாமதமாகக் கிடைக்கின்ற நிலைமையிருந்தாலும் அது தெரிவிக்கப்படுமானால், அந்தத் துறை உடனடியாகக் கவனித்து, அந்த ஓய்வூதியம் கிடைக்கச் செய்வதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. அதற்குமேலும் குறைபாடு இருக்குமானால், அமைச்சரிடம் அந்தக் குறைபாடு தெரிவிக்கப்படுமானால் அவ்வப்போது நீக்கப்படும்.

மற்றும் ஒன்று. இறந்துபோன அரசு ஊழியர்களுடைய குழந்தைகளுக்கு வேலை தரவேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் இங்கே எடுத்து வைக்கப்பட்டது. அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்து. பணியில் இருக்கும்போது இறந்து போனால், அவர்களுடைய குழந்தைகளில் ஒருவருக்கு அந்தந்தத் துறையிலே வேலை தரப்பட வேண்டும். ஆனால், அதை முழு அளவில் நிறைவேற்ற முடியாத ஒரு நிலைமையும் இருக்கிறது. நிறைவேற்றத் தொடங்கினால் வேறு ஓர் இடையூறும் இருக்கிறது. மறைந்தவர்களுடைய குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு என்ற முறையில், கல்வித் துறையில் ஓர் ஆண்டுக்கு 250 பேர் அளவிற்குத்தான், மிக அதிக அளவில் இடம்பெறச் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. காத்துக் கொண்டிருப்பவர்கள் 1500 பேர் இருக்கிறார்கள். இன்னும்கூட அந்த எண்ணிக்கை அதிகமாகும். அந்த முன்னுரிமை வரிசைப்படிச் சொல்கிறபோது, காத்திருக்கக்கூடியவர்களுக்கு வருத்தம் அதிகமாக இருக்கிறது. அதற்காக எந்த ஒரு துறையில் இறந்துபோனவர்களுடைய வாரிசுகளாக இருந்தாலும், அவர்களுக்கு வேறு எந்தத் துறையிலும் வேலை தரலாம் என்ற முறையை வைத்தால், அப்புறம் வெளியேயிருந்து யாரும் வேலை கேட்க வேண்டிய அவசியம் கிடையாது. Employment Exchange-கே அவசியம் கிடையாது. ஏனென்றால், 10 இலட்சம் பேர் பல்வேறு துறைகளிலே வேலை பார்க்கிறபோது, கல்வித் துறையிலே மட்டும் மூன்றரை இலட்சம் பேருக்கு மேல் வேலை பார்க்கிறபோது, அவர்களிலே தவறிப்போனவர்களுடைய வாரிசுகளை அந்தந்தத் துறையிலே மட்டுமல்ல, வேறு பல துறைகளிலேயும் சேர்த்து இடம்பெறச்செய்யும் ஒரு நிலைமை ஏற்படும். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் இட ஒதுக்கீட்டுக் கொள்கை நடைமுறையில் செயல்படவே



இயலாத ஓர் இக்கட்டான நிலை ஏற்படும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். ஏனென்றால், அது ஒரு பிரச்சினையாக, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குப் போதுமான அளவு இடம் பெற முடியாத ஓர் இக்கட்டான நிலை இருப்பதையும், மிக மிகப் பின்தங்கியவர்களுக்கும் அது போன்ற நிலை இருப்பதையும் எடுத்துச் சொல்லி, அவற்றிற்கு ஒரு பரிகாரம் தேடவேண்டிய நிலைமை இருக்கிறபோது, இறந்து போன, மறைந்துபோனவர்களுடைய வாரிசுகளுக்காகவே, எந்தத் துறையிலே அந்த நிலை ஏற்பட்டாலும் இன்னொரு துறையிலே உடனே இடம் கொடுக்கலாம் என்ற ஒரு முறையை ஏற்றுக்கொள்ள வாய்ப்பில்லை என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தந்தத் துறை அளவிலேதான் அதைக் கட்டுப்படுத்தி வைக்கவேண்டுமென்ற ஓர் அவசியம் இருக்கிறது.

இங்கே தியாகிகளுடைய குழந்தைகளுக்குப் பொறியியல் கல்லூரியிலே இடம் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே உள்ள விதிமுறைகளில் ஒரு 100 பேர், 80 பேருக்கு, பல்வேறு வகையாக இந்த இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டாலும், தியாகிகளுடைய குழந்தைகளுக்குப் பொறியியல் கல்லூரியிலே ஓர் இடம் என்று இருப்பதை, அவர்கள் சொல்கிறபோதுதான் நான் இதை ஆழ்ந்து கவனிக்க நேரிட்டது. அதை ஐந்து இடங்களாக உயர்த்த முடியும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது பொறியியல் கல்லூரியிலே ஏராளமான இடம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பிலே அப்படிப்பட்ட 5 பேர்களுக்கு இடம் கொடுப்பதில் ஒன்றும் இடர்ப்பாடு இருக்காது.

பிற்பகல் 1-00

அதேபோல், பல்தொழில் பயிலகங்கள் என்று சொல்லப்படுகின்ற Polytechnic கல்வி நிலையங்களிலும் இப்போது single window system என்னும் ஒற்றைச் சாளர முறையிலே இடம் அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால்—அங்கே நடைமுறையிலே எவ்வளவு ஒதுக்கப் பட்டிருக்கிறது என்ற எண்ணிக்கை எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் — அங்கேயும் இதைப் போல 5 இடங்கள் வழங்குவதற்கு அரசு முன்வரும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அண்மைக்காலத்தில் தமிழ்நாட்டிலே பரிசுச் சீட்டுகளால் பொதுமக்கள் ஏமாற்றம் அடைவது; ஆசைப்படுகிற காரணத்தால் அதிகமாகக் கைப்பொருளை இழப்பது; உழைப்பாளிகள்கூட

யைப் பொருளை இழப்பது என்ற நிலை வளர்கிறது என்பதை நாம் கண்டு வருகிறோம். ஓர் ஆய்வாளர் எழுதிய புத்தகத்திலே இந்தியாவிலேயே தமிழர்கள்தான் அதிகமான அளவிற்கு இந்த அதிர்ஷ்டத்தை நம்பியே ஏமாளிகளாக ஆகியிருக்கிறார்கள். நம்புவது அதிர்ஷ்டத்தை, வாய்ப்பது ஏமாளித்தனம். அதனாலே, பொருள் இழப்பும் அதிகம் என்ற கருத்தும் அந்த அறிஞரால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதிலே ஏற்படுகிற, அந்த அதிர்ஷ்டத்தில் ஏற்படுகிற நம்பிக்கையினுடைய விளைவாக, அரசியலே கூடச் சில பேருக்கு அதிர்ஷ்டம் ஆகிவிட்டது. எந்தத் துறையாக இருந்தாலும், இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்தால், அது வரையில் இலாபம் என்று கருதுகிற ஒரு மனப்போக்கு சமூகத்திலே வளர்கிறது. அந்த லாட்டரிச் சீட்டு அல்லது பரிசுச் சீட்டுகளைத் தடை செய்யக்கூடிய அதிகாரம் இன்றைக்கு மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மூலமாகக் கிடைத்திருக்கிறது. ஏற்கெனவே, சுரண்டல் லாட்டரி, ஒரு நம்பர் லாட்டரி—லாட்டரி என்றாலே சுரண்டல் என்றுதான் அர்த்தம். அதிலே இது ஸ்பெஷல். சுரண்டல் லாட்டரி, ஒரு நம்பர் லாட்டரி—அதற்கெல்லாம் மத்திய அரசு தடை விதித்திருந்தாலும், வெளி மாநில லாட்டரிகளுக்கும் இப்போது தடை விதிக்க வேண்டிய அந்த வாய்ப்பு நமக்கிருக்கிறது.

குறிப்பாக, தமிழ்நாட்டிலே கள்ள நோட்டு அச்சடிப்பவர்கள் சில பேர் பிடிபடுவதைப்போல, லாட்டரிச் சீட்டையே கள்ளத்தனமாக அடித்து, அந்தக் கள்ளத்தனமான லாட்டரிச் சீட்டை மக்களிடத்திலே விற்று, அதிலே கொள்ளை இலாபம் சம்பாதிப்பது என்பது இந்த நாட்டிற்கு ஒரு சமூகக் கேடாக இருக்கிறது. எனவே, இந்த அரசு சட்டப்படி ஆராய்ந்து, எந்த முறையிலே தடை செய்ய வேண்டுமோ அந்த முறையிலே தடை செய்யக் கருதுவது மட்டுமல்லாமல், இந்தக் கள்ளத்தனமான லாட்டரிச் சீட்டுகள் மக்களிடத்திலே ஏதேனும் ஒரு வகையில் விற்கப்படுவதை முழுஅளவில் தடுப்பதற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க இந்த அரசு நிச்சயமாக முன்வரும் என்பதையும், அதுவும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு நமக்குத் தந்திருக்கிற ஆர்வம் காரணமாக, அப்படிப்பட்ட கடமையையும் இந்த அரசு செய்யும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, மற்ற மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் பெறுகிற சலுகைகள், அதனுடைய தொகை அதிகமாக இருப்பதை நம்முடைய ஞானசேகரன் அவர்கள் என்னென்ன படி, என்னென்ன படி என்று விவரமாகச் சொன்னார்கள். என்னைப்பிடி, உன்னைப்பிடி என்று



அந்தப் படியைப் பற்றி அவ்வளவு வலியுறுத்தி அவர்கள் பேசினார்கள். கணேசன் அவர்களும் நகைச்சுவையாக அந்த வேண்டுகோளை மிக அழுத்தமாக வலியுறுத்தி, நெஞ்சம் துடி துடிக்க அவர்கள் சொன்னார்கள். இந்தப் படியைச் சொன்னாலே, அவ்வளவு ஆர்வம் பிறக்கிறது. வெளி மாநிலத்திலே போய், பல செய்திகளைத் தமிழக அரசு தெரிந்துகொண்டு வருகிறது. வெளிமாநிலத்தை உவமை காட்டுகிறபோது, பஸ் கட்டணத்தையும், அதேமுறையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்களேயானால், இந்தப் படியை இரண்டு படியாக நான் உயர்த்துவேன். ஒரு படி அல்ல, இரண்டு படி உயர்த்த முடியும். இன்னும் சொல்லப்போனால், மண்டகப் படியாகக் கூட உயர்த்த முடியும். எனவே, அந்த அளவிற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள், அதுவும் இதிலே கட்சி வேறுபாடு இல்லாமல் நாட்டினுடைய பொது நன்மையைக் கருதிவேண்டுமானால், ஒவ்வொரு கட்டத்திலும் பல்வேறு தேவைகள் இருக்கின்றன. இங்கேகூடச் சொன்னார்கள். ஒன்றியத்திலே இருக்கிற பெருந்தலைவருக்கு ஓர் அலுவலகம் இருக்கிறது; ஆபீஸ் இருக்கிறது; உதவியாளர் இருக்கிறார்; இந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கு இருக்கிறதா என்று கேட்டார்கள். ஒன்றியப் பெருந்தலைவர் நிர்வாகத் தலைவராக Executive head என்று கருதப்படுகிறார். நிர்வாகம் செய்ய முடிகிறதா இல்லையா என்பது, அது வேறு. சட்டமன்ற உறுப்பினர் மிகச் சிறந்த ஆலோசனை வழங்குகிறவராகக் கருதப்படுகிறார். நாட்டிலே மிக உயர்ந்த பீடத்திலே ஒன்று சட்டமன்றம். அது, மாண்புமிகு உறுப்பினர்கள் தருகிற ஆலோசனை, கருத்துகள், எண்ணங்கள், உருவாக்குகிற சட்டங்கள், அதைப்பொறுத்தது. அங்கேயிருக்கிற ஒன்றியத் தலைவர் அன்றாடப் பணிகளைக் கவனிப்பதாக ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே, அதேநிலையில் நாம் ஒப்பிட்டுக்கொள்வதிலே சில நேரங்களிலே மாற்றிப்பேச நேர்கிறது.

பிற்பகல் 1-05

உள்ளாட்சி மன்றங்களைப் பற்றிப் பேசுகிறபோது, அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, அவர்களுக்கு என்ன கொடுத்திருக்கிறோம், ஒன்றும் கொடுக்கவில்லை என்று ஒரு கோணத்திலே பேசுவோம். நம்முடைய பணிகளைப் பற்றிப் பேசுகிறபோது, அங்கே என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்று நாம் அதைப் பேசுவோம். ஆகவே, இது மனித இயற்கைதான், நான்கூட அப்படித்தான். கலைஞர்கிட்டே வாதாடுகிறபோது எனக்கு ஏதாவது கிடைக்காவிட்டால்தான் என்னால் அதிகமாக வாதாட முடியுமே தவிர, மற்றவர்களுக்குக் கிடைக்காவிட்டால் வாதாட முடியாது. இருந்தாலுங்கூட அந்த வகையில் மாண்புமிகு

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 மே 13

உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன கருத்தின் அடிப்படையில், நம்முடைய சட்டமன்றத்தில் நமக்கென்று சில மரபுகள், சில அடிப்படைகள், சில வேர்கள் இருக்கின்றன. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், மேலே ஒரு துண்டு போடுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் விரும்பாதவர்கள். அவர்களுடைய காலத்திலேயிருந்து இப்போது நாம் சால்வை போடுகிற இடத்திற்குத்தான் வந்திருக்கிறோம். ஆகவே, கொஞ்சம் கொஞ்சம் படிக்கட்டாகத்தான் ஏற முடியுமே தவிர, உடனே வடக்கே இருப்பவர்களைப் போல, ஹரியானாவிலே இருப்பவர்களைப் போல, பஞ்சாப்பைப் போல என்றெல்லாம் சொல்வது சரியல்ல. அங்கே ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட படிக்கட்டே வேறு. சில இடங்களில் படியேறிப் போனால், படிக்கட்டே முக்கால் முக்கால் அடியாக இருக்கும். சில இடங்களிலே ஏறிப்போனால் 1½, 1½ அடியாக இருக்கும். திருப்பதியிலே பழங்காலத்திலே ஏறுகிறபோது 3 அடி உயரம் இருக்கும். அதுமாதிரி சில இடங்களைப் பொறுத்து, ஏற்ற இறக்கம் இருக்கத்தான் செய்யும். இருந்தாலும், நம்முடைய நிலையில் மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் எடுத்துச் சொன்ன அந்த அடிப்படையில் தொலைபேசிக் கட்டணம் 1750 ரூபாயாக இருப்பதை 2750 ரூபாயாக உயர்த்தலாம் என்று முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மூலமாக, அந்தத் கட்டண உயர்வு மூலமாக மொத்தத்தில் 10,000 ரூபாய் ஒரு திங்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த 10,000 ரூபாய் என்கிறது ஒரு Round sum ஆக இருக்கும். வீட்டிலே சொன்னால்கூட 10,000 என்றால்தான் மலைப்பார்களே தவிர, 11,000 என்றால் இவ்வளவு தானா என்பார்கள். (குறுக்கீடு) அமைச்சர்களின் சம்பளமும் அவ்வளவுதான் என்பதை முதல்வர் அவர்கள் (சிரிப்பு) தெரிவிக்கிறார்கள்.

அதேபோல, ரயில் கட்டணம் போதுமானதாக இல்லை, (குறுக்கீடு) அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் எல்லோருக்கும் ஊதியம் அவ்வளவுதான் என்பதை ஒன்றுக்கு இரண்டு முறை சொல்வதற்குக் காரணம், யாரும் மறுபடியும் கேட்கக் கூடாது என்பதற்குத்தான் (சிரிப்பு). எனவே, அந்த அளவுக்குத் தொலைபேசிக் கட்டணத்தை உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல, ரயில்வே கட்டணத்திற்கான தொகை குறைவாக இருக்கிறது அல்லது அதற்காக நமக்குக் கிடைக்கிற படி குறைவாக இருக்கிறது என்பதைத் திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர்கள்



1999 மே 13] [பேராசிரியர் க. அன்பழகன்]

சொன்னார்கள். இப்போது 5,000 ரூபாய் வீதம் ஆண்டுக்கு இரண்டுமுறை வழங்கப்படுகிறது; ஆண்டுக்கு 10,000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதை, 15,000 ரூபாயாக உயர்த்தி, 7500, 7500 என்று இரண்டு தவணைகளிலே உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கலாம் என்று முதல்வர் தெரிவித்துள்ளார். (குறுக்கீடு) அடுத்த தடவை பேசுகிறபோது பேசலாம். (சிரிப்பு)

தொகுதியிலே அலுவலகம் ஒன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதன் மூலமாகத்தான் பொதுமக்களைச் சந்திக்க முடியும் என்ற கருத்து பல முறையும் பலரும் சொன்ன கருத்து. அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்ததன் அடிப்படையில், தொகுதியிலே மையமாக இருக்கிற இடத்தில் அலுவலகம் அமைப்பது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் கலந்து பேசி, சட்டமன்ற உறுப்பினரே தீர்மானிக்கலாம், ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து என்கிறபோது, ஒரு மாவட்ட அளவிலே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களின் கட்டடங்கள் பக்கத்துப் பக்கத்திலே இருக்கக்கூடிய அளவுக்கு, தொகுதிகள் அண்மையிலே இருக்குமானால், அது ஒரு நகரத்திலே இருக்குமானால், அவரவர்களுக்கு வசதியான இடத்தை எடுத்துக்கொள்வதைவிட, பொதுமக்களுக்கு ஏற்ற இடம் எது என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவியாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கலந்து, 5 இலட்சம் ரூபாய் அளவில் ஒரு கட்டடம் கட்டித்தர அரசு முன்வரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவிக்கப்படுகிறது. அப்படி, ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு 5 இலட்சம் ரூபாய் அளவிலே இல்லை, சட்டமன்ற உறுப்பினருடைய அலுவலகத்திற்கு (சிரிப்பு) 5 இலட்சம் ரூபாய் அளவிலே கட்டடம் கட்டுவது என்பதற்காக 12 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி). அது உடனடியாக, இரண்டு . மூன்று திங்களுக்குள்ளாக அதற்கான பணிகள் தொடங்கப்படும். உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே தாங்கள் தெரிவிக்கிற கருத்தை இங்கே சட்டமன்றத்திற்கும் தெரிவிக்கலாம், இன்ன இடத்தை நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம் என்று. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புக்கொண்டால், தடையில்லாமல் கட்டலாம். அதற்கான பிளான் ஒன்று, வரைபடம் ஒன்று வரைந்து, ஏறத்தாழ ஒரேமாதிரி, ஒரே Pattern-ல் இருந்தால் நல்லது என்பதால் பிளான் வரைந்து தெரிவிக்கவும். அரசு நடவடிக்கை எடுக்கும். அங்கு ஏறத்தாழ 30 ஆயிரம் ரூபாய், 35 ஆயிரம் ரூபாய் அளவிற்கு . . .

பிற்பகல் 1-10

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, தொகுதியினுடைய மத்திய இடம் என்கிற மாதிரி இல்லாமல், அதாவது அங்கே இருந்தாலும், அப்புறம் அவர்களையும் அழைத்துக்கொண்டு வருபவர்களை அழைத்துக்கொண்டு போய் தாலுகா ஆபிசுக்கோ, தாசில்தாரைப் பார்க்கவோ, இன்ஸ்பெக்டரைப் பார்க்கவோ தொகுதியினுடைய தலைநகரத்திற்குப் போக வேண்டியிருக்கும். அந்த மாதிரி, அந்தத் தொகுதியினுடைய தலைநகரம் என்கிறபோது, அது அந்தத் தொகுதியினுடைய headquarters-என்ற நிலையில் அங்கே அமைந்தால், அங்கே வந்தால், எல்லா அதிகாரிகளையும் பார்க்க முடியும்; வசதியாகவும் இருக்கும். அதாவது, Collector ஓர் இடம் சொல்லி, M.L.A. ஓர் இடம் சொல்லி, பிரச்சினையாகிக் கொண்டிருக்காமல், அந்தத் தொகுதியின் தலைநகரத்திற்குக் கொண்டு வருவதற்கு உத்தரவிட்டீர்கள் என்றாலே, சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்குத் தலைநகராக அமைந்திருக்கிற இடத்தைத் தேர்ந்து எடுப்பதிலே எந்த மாறுபாடும் இல்லை. சில நேரங்களிலே அருப்புக்கோட்டை தொகுதி அல்லது சாத்தூர் தொகுதியிலே பார்த்தீர்கள் என்றால், முக்கியமான இடம் அங்கே இருக்காது. அந்தத் தொகுதிக்குள் இருக்காது. அப்படி வருமானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கலந்து அந்தத் தொகுதியைச் சுற்றியிருப்பவர்கள் வந்து போகக்கூடிய மையமான இடமாக இருந்தால்தான், பின்னால் வருபவர்களுக்கும் பயன்படும். (குறுக்கீடு) அருப்புக்கோட்டை தொகுதி என்றால் அருப்புக்கோட்டை நகரம் இல்லை. நகரத்தைத தவிர சுற்றிலும் உள்ள இடம் இருக்கும், அப்படியிருந்தால் விதிவிலக்குத் தர வேண்டும். அது பின்னால் வருபவர்களுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். அந்த அலுவலகத்திற்குத் தேவையான மேசை, நாற்காலி, பீரோ போன்றவற்றை 30, 35 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வாங்கி, வழங்குவதற்கும் அரசு முன்வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கு, நம்முடைய மாநிலத்திலே தகுந்த முறையிலே ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இருந்தாலும், அவர்களிலே பலர் மருத்துவப்படி வேண்டும் என்று கேட்டுள்ளனர். இங்கே



சட்டமன்றத்திலேயும் பலர் எடுத்துச் சொன்னார்கள். அந்த மருத்துவப்படி ஓராண்டிற்கு ரூபாய் 2 ஆயிரம் வழங்குவது என்று அரசு முடிவெடுத்துள்ளது. ஏனென்றால், சில பேர் ரூபாய் 50, 100-க்குக்கூட எப்படி நாங்கள் அதற்கான வேண்டுகோளை அனுப்புவது, பெறுவது என்று கேட்கிற காரணத்தால், பில் அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லாமல், 2 ஆயிரம் ரூபாய் படியாக அவர்களுக்கு வழங்குவது என்று அரசு தீர்மானித்திருக்கிறது.

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சிகிச்சைக்காக ஆகிற நிதியை முறையாகப் பெறமுடியவில்லை என்று ஒரு கருத்து சொல்லப்பட்டது. நோயினுடைய அளவையும், அதற்குத் தரப்பட வேண்டிய சிகிச்சையையும், அதற்கு ஆகிற செலவையும் அந்தக் குறிப்பிட்ட நிலைமைதான் தீர்மானிக்கும். முன்கூட்டியே தீர்மானித்து உறுப்பினர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் நோயை எல்லாம் தடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே, ஏற்படுகிற நோய் நிலைமையைப் பொறுத்து, அது கடுமையாக ஆகிவிடுமானால் அதற்குரிய செலவையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தாலேதான், Medical reimbursement என்ற முறையை அரசு வைத்திருக்கிறது. அப்படி இதுவரையிலே, இந்த மூன்று ஆண்டுகளிலே, 14 இலட்சத்து 12 ஆயிரத்து 579 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் பெற்றிருப்பவர்கள் 50 பேர். குறிப்பாக, பெரிய அளவிலே சிகிச்சை பெற்றிட இந்த நிதி பெற்றவர்கள் திரு. கே.சி. கணேசன், 36,287 ரூபாய் (குறுக்கீடு) திரு. கே.சி. கணேசன், 36,287 ரூபாய், திரு. ச. அழகிரி அவர்கள், 42,301 ரூபாய், குறைவாகச் சொல்லவில்லை, நிறைவாகச் சொல்கிறேன். அதாவது, அவர்களுடைய நியாயமான அந்த மருத்துவச் செலவை இந்தத் துறை ஏற்றுக்கொண்டு வழங்கியிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்கள், மேஜர் சர்ஜரி செய்து கொண்டதற்காக 2,21,245 ரூபாய், திரு. இரா. மகேந்திரன், மேஜர் சர்ஜரி காரணமாக 1,01,376 ரூபாய், திரு. எஸ். ராஜு அவர்களுக்கும் மேஜர் சர்ஜரிக்காக 1,92,283 ரூபாய், திரு. ஏ.ஜி. சம்பத், மேஜர் சர்ஜரிக்கு 1,55,988 ரூபாய். திரு. டி. சுதர்சனம், மேஜர் சர்ஜரிக்கு 2,07,184 ரூபாய், மற்றவர்களுக்கு எல்லாம் வேறு வேறு தொகை அவரவர்களுடைய நிலைமைக்கு ஏற்ப, தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதிலே ஒன்றும் குறைபாடு ஏற்பட இடமில்லை. (குறுக்கீடு) திரு. சி. வேலாயுதன் பெற்ற தொகை பற்றி இதிலே சரியான குறிப்பு இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் அளவிற்கு, மேஜர் சர்ஜரிக்காக நிதி

வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்களுக்கும், மணி போன்றவர்களுக்கும் (குறுக்கீடு)—அது கட்சியினால் தரப்பட்டது—மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அண்மைக்காலத்திலே, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அப்படிப்பட்ட உதவியுடன் சிகிச்சை நடைபெற்றிருக்கிறது. இதைச் சொல்வதற்கு ஒரேயொரு காரணம், நல்ல நோக்கத்தோடு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

*பிற்பகல் 1-15*

அடுத்து, பொதுவாகத் தேர்தல் பணியைக் குறித்துக் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது நாட்டிலேயே தேர்தலைப் பற்றித்தான் பேச்சு. பொதுவாக, தேர்தல் விரைவிலே வர வேண்டுமென்று விரும்பினாலுங்கூட, ஆறு மாதம் கழித்துத்தான் நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது. ஒவ்வொரு தேர்தலுக்கும் எவ்வளவு செலவாகிறது என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால், இந்தச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்குள்ள ஒரு செலவாகத்தான் உள்ளது. சமுதாயத்திற்கு ஒரு தண்டனையாகத்தான் அமைகிறது. ஒரு வகையிலே பார்த்தால், நிலையான அரசு என்பது நமக்கு மாறுபட்ட அரசாக இருந்தாலுங்கூட, கருத்து மாறுபாடு உள்ள அரசாக இருந்தாலுங்கூட, நீடித்த வரையில் இலாபம் என்று நினைக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. இருந்தாலும், இந்தத் தேர்தலுக்கு முன்னதாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், தேர்தலுக்காக உள்ள ஆணையர் அதற்காக முன்கூட்டி ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவாக ஆற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை நான் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள், படத்தோடு கூடிய அடையாள அட்டைகள வழங்குவதில், பெரும்பாலும் எந்தக் குறையும் இல்லை. 4 கோடி பேருக்கு வழங்க வேண்டும். புள்ளிவிவரம் எல்லாம் இருக்கிறது. 4 கோடி பேருக்கு வழங்க வேண்டுமானால், இரண்டே முக்கால் கோடி பேருக்குத் தயாராகி, இரண்டேகால் கோடி பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மிச்சம் பேருக்கு இன்னும் சில திங்களில் வழங்கப்பட்டு விடும்.

இரண்டாவது சில திருத்தங்கள், புதிதாகச் சேர்க்கை, அவையெல்லாம் இப்பொழுது தொடர்ந்து நடைபெற இருக்கிறது. ஆண்டுதோறும் ஜனவரி



மாதத்திலேயிருந்து அப்படிச் சேர்ப்பதற்கான ஒரு கடமை அந்தத் தேர்தல் துறைக்கு உண்டு. ஒரு தேர்தலும் வரவிருக்கிறது என்கிற நிலையில், எவ்வளவு பேர் சேர வேண்டுமோ, சேர்ப்பதற்கான வாய்ப்பான நாட்களையும் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே வாக்காளர்களும் சேர்க்கப்படுவார்கள்.

இன்னுமொன்று. இந்த அடையாள அட்டை வழங்குவதிலே யாரும் வேண்டுமென்று எந்தத் தவறும் செய்வதற்கு வாய்ப்பேயில்லை. ஆனால், ஒரு சட்டமன்ற உறுப்பினரே சொல்லியுள்ளது போல, ஒரு பெண்மணியின் படத்திற்கு ஏதோ நெற்றியிலே பொட்டு இருந்தது, அது இஸ்லாமியப் பெண் என்று ஒரு கருத்து வெளியிலே பத்திரிகையிலே வந்தது. அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அப்படி ஏதேனும் தவறு செய்வதற்கு வழியில்லை. அந்த போட்டோ எடுக்கிற மெஷினுக்கு அரசியல் எப்படி வரும்? ஆகவே, படம் எடுத்த கருவியைப் பொறுத்தவரையிலே, அப்படியெல்லாம் ஒன்றும் இருக்காது. ஏதேனும் தவறு இருக்கலாம். அது என்ன தவறு என்பது தெரியாது. அப்படித் தவறு இருக்குமானால் தங்களுடைய படம் சரியில்லை என்றால்—உடனே அவர்கள் தேர்தல் அலுவலகத்திற்கு, வாக்காளர்கள் சேர்க்கிற அலுவலகத்திற்குத் தெரிவித்தால், மறுபடியும் வேறு படம் எடுத்து....

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வந்து இருந்தது. மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குக் கூட அந்தக் காப்பியை நான் அனுப்பி வைத்திருக்கிறேன். அது உண்மையிலேயே அப்படித்தான் நடந்ததுங்கய்யா. உண்மையிலேயே நடந்தது, நான் உங்ககிட்டே, ஐயாகிட்டே சொன்னேன்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** முதலமைச்சருக்கு அனுப்பினேன் என்று சொல்கிறீர்கள். எனக்கு அது இன்னும் அனுப்பப்படவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** முதலிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த அம்மா நெற்றியிலே பொட்டு வைப்பதற்கு மற்றவனுக்கு என்ன கடமை, என்ன தேவை, என்ன அவசியம்? அதனாலே, படம் தப்பாக இருக்கலாம், ஒன்றோ, நாலோ. அது என்ன காரணத்தினாலே, தப்பு என்பது, அதுவும் Electronic Machine மூலமாகப் படம் எடுத்து, உடனே அந்தப் படம் தரப்படுகிறபொழுது அல்லது அதற்கு முன்னாலே தனியாக எடுத்து, அதற்கப்புறம் அந்தப் படம் வந்திருந்தாலும், அதை உடனே திருத்த முடியும். எது தவறு என்றாலும் திருத்திக்கொள்ள அந்தத் துறை

தயாராக இருக்கிறது. அதிலே ஒன்றும் அரசியல் நோக்கம் இருப்பதற்கு அவசியமில்லை. இல்லை, பொட்டு வைப்பதனாலே யார் ஓட்டு வாங்கி விடப் போகிறான்? ஆகவே, அது யாருக்கும் அவசியமில்லை. அதிலே ஒன்றும் அரசியல் நோக்கம் இல்லை என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னுமொன்று. இங்கே வாக்காளர்கள் மலைப் பகுதியாக இருந்தாலும் அல்லது காட்டுப் பகுதியாக இருந்தாலும் அதிகத் தொலைவில் சென்று வாக்களிக்க வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது; ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள்ளாக அவர்களுக்கு வாக்குச்சாவடி அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். மலைப்பகுதியாக இருந்தாலும், எந்த இடமாக இருந்தாலும், நினைத்த இடத்திலே எல்லாம் வாக்குச்சாவடி வைக்க முடியாது. ஒரு கிலோமீட்டர் அளந்து, அங்கேயே வாக்குச்சாவடி வைக்க முடியுமா என்றால், பல இடத்திலே முடியாது. ஆகவே, சில குறைபாடுகள் இருக்கும். அந்தக் குறைபாடுகளை எப்படித் திருத்துவது என்று அந்தந்த குறிப்பிட்ட இடத்தில், இன்ன இடத்தில் வாக்குச்சாவடி இருப்பதற்குப் பதில், இன்ன இடத்தில் வைக்க முடியும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களோ, ஒன்றியப் பெருந்தலைவர்களோ அங்கேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவிப்பார்களேயானால், கூடுமான வரையில் வாக்களிப்பவர்களுடைய வசதிக்கேற்ற இடத்தில், பொதுவான இடத்தில் அந்த வாக்குச்சாவடியை வைப்பதற்கு நிச்சயமாக மாவட்ட ஆட்சியர்கள் முன்வருவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதையும் மீறி, சில இடங்களிலே வாக்குச்சாவடி வைத்து நடத்தக்கூடிய வசதியே இல்லாத ஓர் இக்கட்டான இடத்திலே, 500, 600 பேர் வாக்களிக்கக் கூடியவர்கள் இருப்பார்களேயானால், ஓர் ஓலைக் குடிசை போட்டாவது அந்த இடத்திலே ஒரு வாக்குச்சாவடி வைத்து வாக்களிக்கச் செய்ய முடியும். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மேற்பார்வையில் தேர்தல்கள் நடக்கின்ற காரணத்தால், அவர்கள்தான் அதைக் கவனிக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, அதை அவர்களுக்குத் தெரிவிப்பதன் மூலமாக அந்தக் குறைகள் நிச்சயமாகப் போக்கப்படும்.

*பிற்பகல் 1-20*

இன்னொன்று, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இந்த அளவுக்கு ஜனநாயக அடிப்படையில்



உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றதாக நாம் காணமுடியாது. எனக்குத் தெரியும், பல்வேறு மாநிலங்களில் உள்ள பொதுவான நிலைமைகள் என்னவென்று. ஏதோ ஆங்காங்கே இருக்கிறவர்கள் ஆங்காங்கே தர்பார் நடத்துவார்கள், அந்த தர்பார் நடத்துகிறவர்கள்தான் அப்படியே மொத்தமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துவிடுவார்கள். இங்கே நம்முடைய தமிழ்நாட்டில் தர்பார் எல்லாம் கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்து, ஜமீன்தாரி முறையெல்லாம் குறைந்து, பொதுமக்கள் தாங்கள் விரும்புகின்றவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். கூடுமான வரையில், நான் சொல்வது நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டு இடத்தில்தான் என்றால், இரண்டு இடத்தில் தவறுகள் இருக்கத்தான் செய்யும். ஜாதி மனப்பான்மையும், மதவெறியும் இருக்கிற இடத்தில் தவறுகள் இருக்கத்தான் செய்யும். அதைக் களைவதற்கு சமூகத்தினுடைய மொத்த எண்ணம்தான் அதற்கு மாறாக இருந்து, நன்மை பயக்கவேண்டும். அந்த எண்ணத்தை உருவாக்குவதில் நாம் அனைவரும் தொடர்ந்து ஈடுபட்டாக வேண்டும்.

இருந்தாலும், உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் 1 இலட்சத்து 25 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள், உள்ளாட்சி அமைப்பின் வெவ்வேறு தொகுதிகளிலும். அது தேவையான தொகுதியா அல்லவா என்பது வேறு. அவ்வளவு பெரிய தேர்தலை மிகச் சிறப்பாக நடத்தி முடித்திருப்பது தமிழக அரசினுடைய, அந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்காக அமைக்கப்பட்டிருக்கிற ஆணையம்தான். மற்றபடி, இடைத்தேர்தல், ஒரு 60 இடங்களுக்கு, 100 இடங்களுக்கு அல்லது 200 இடங்களுக்கு என்று, சாதாரண உறுப்பினர்களுக்கான தேர்தல், இந்த மாதத்திலே நடைபெறுகிறது. அதுவும் முறையாக நடைபெறும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மற்றும் ஒன்று, கார்களுக்குக் கடன் வேண்டும், நிதி உதவி வேண்டுமென்ற வேண்டுகோள் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி ஆழமாகப் பரிசீலனை செய்யப்பட்டது. அந்தப் பரிசீலனையில் கார்களுக்கான கடன் கொடுப்பதற்காக இருக்கின்ற அமைப்புகளை நாம் கேட்டபோது, அந்த அமைப்புகள் 25 விழுக்காடு தொகை சட்டமன்ற உறுப்பினர் போட்டுக்கொண்டு, மிச்சம் 75 விழுக்காடுதான் கடன் தரமுடியும் என்று சொல்கின்றன. அதாவது, 3 இலட்சம் ரூபாய் கடன் என்றால், 2.25 இலட்சம் ரூபாய்தான் கடன் தருவார்கள், 75 ஆயிரம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் போட்டுக்கொள்ள வேண்டும்.

அப்புறம் 18 விழுக்காடு அதற்கான வட்டி செலுத்த வேண்டும். அதில் ஏதும் குறைப்பதாக இருந்தால் கூட — 15 விழுக்காடு என்று இருந்தால் கூட, 2.25 இலட்சம் ரூபாய் கடன் வாங்கினால், 5 வருடத்திற்குள் ஒன்றரை இலட்சம் ரூபாய் வட்டி செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது — இது சட்டமன்ற உறுப்பினர்களுக்கே ஏற்புடையதாக இருக்குமா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. இரண்டாவது, இந்த முறையில் கார் வாங்குவதை ஊக்கப்படுத்தக்கூடிய ஒரு நிலைமையில், நாம் முடிவு எடுக்க வேண்டாம் என்று, அது பற்றி அரசு, கடனுக்குக் க்ார் வாங்குங்கள் என்று ஊக்கப்படுத்துவதை விரும்பவில்லை என்பதை நான் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, மைய அரசு 3000 ரூபாய் வழங்குகிறது ... (குறுக்கீடு)

. **மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், கடனுக்குக் கார் வாங்குகிற திட்டம் உறுப்பினர்களுக்கு வேண்டாம் என்று கூறியதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்காகத்தான் நான் ஒரு உதாரணத்தைச் சொன்னேன். மகாராஷ்டிராவில் ஏற்கெனவே 'சுமோ' காரை அரசே வாங்கிக் கொடுத்துவிடுகிறது. அவர்களே எரிபொருள் போடுகிறார்கள். அவர்களே டிரைவரை வைக்கிறார்கள். அவர்களே எல்லாம் செய்கிறார்கள். அதைப்போலவே, மகாராஷ்டிராவைப் பின்பற்றி நீங்களும் கார் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மராட்டியத்திலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் இல்லை. அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மராட்டியத்திலே, மத்திய சர்க்கார் நிர்ணயித்த அதே விலையைத்தான் அரிசிக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். நாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் ஏற்படுகிற நஷ்டத்தை எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பல மாநிலங்களிலே, இன்னும் மத்திய சர்க்கார் அளவுக்கு, அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்குச் சம்பளம் தரவில்லை. நாம் தந்திருக்கிறோம். அதையும் மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1-30 மணிக்குள் விவாதத்தை முடிக்கவேண்டும். அதனால் நான் குறுக்கீடுகளை எல்லாம் இப்போது அனுமதிக்க முடியாது.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இங்கே உறுப்பினர் மணி அவர்கள் பேசுகின்றபோது, போராட்டத்தில் ஈடுபட்டு, தலைமறைவாக இருந்த காலத்திற்கு நாங்கள் எப்படிச் சான்று பெறமுடியும் என்று கேட்டார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரே அளவு சம்பளம் என்பது என்னுடைய மனசாட்சிக்கு ஒத்துவரவில்லை. தயவுசெய்து ஏற்கெனவே இருந்த அந்த விகிதாச்சார அடிப்படையிலேதான் இந்தச் சம்பளம் அமையவேண்டும். அதுதான் நியாயம், தர்மம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்களுக்கு அப்படி ஒரு நல்ல எண்ணம் இருப்பதற்காக அவருக்கு என்னுடைய பாராட்டு.

இங்கே திரு. டி. மணி அவர்கள் பேசுகின்றபோது, மாநில அளவிலே, அங்கே கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் அவர்கள் தலைமறைவாக இருந்த அந்தக் காலத்தையும் கருதி, அந்த அடிப்படையில், அதற்கான Pension—ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தலைமறைவாக இருந்ததற்குச் சான்று எங்கே இருக்க முடியும்? சிறைச்சாலையிலே இருந்தால், தலைமறைவாக இருக்கத் தேவையில்லை.

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டார்கள். ஆறு மாதம் சிறையிலே இருந்திருக்கிறார்கள்; ஒரு மாதம் இருந்திருக்கிறார்கள்; 15 நாட்கள் இருந்திருக்கிறார்கள். அந்தக் காலக்கட்டத்திலே அதற்கான சான்றிதழை அந்த அரசு தரவில்லை. அந்தச் சான்றுகள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டன. திருவிதாங்கூர் இராஜ்யமாக இருந்த காலத்தில் அந்தச் சான்றுகளை எல்லாம் அழித்துவிட்டார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தமிழகத்திலே எத்தனையோ தியாகிகளுக்கு, கட்சி வித்தியாசம் பாராமல் இந்த அரசு மானியத் தொகை, உதவிகள், உரிமைகள், சலுகைகள் அனைத்தும் அளித்திருக்கிறது. ஆங்காங்கு விட்டுப்போனவை நினைவுபடுத்தப்படும் போதுகூட, மாண்புமிகு உறுப்பினர் மணி போன்றவர்கள்

எடுத்துக்காட்டியவைகளை எல்லாம்கூட ஏற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் குறிப்பாக, குமரி மாவட்டத்திலே நடைபெற்ற போராட்டம், நேசமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற அந்தப் போராட்டத்தையொட்டிக் கைதானவர்களுக்கெல்லாம்கூட அவர்களும் இயற்கையாகவே தியாகிகள் பட்டியலிலே வரவேண்டியவர்கள், அவர்களுக்கும்—இந்த அரசு உதவியை வழங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் அந்தப் பட்டியலையும் தருவார்களேயானால், அவை பற்றியும் இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அடுத்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்காக, நம்முடைய அரசினர் தோட்டத்தில் - ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் - கட்டப்பட்டு வருகின்ற மிகப் பெரிய, மாளிகை போன்ற அந்தக் கட்டடம் 240 குடியிருப்புகளைக் கொண்டது. அதற்காக 45 கோடி ரூபாய் செலவாகிறது. அங்கே எல்லா வசதிகளும் கொண்ட, எல்லா அமைப்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன. உள்ளபடியே, இந்தக் கட்டடத்தினுடைய வசதிகளைப் பார்ப்போமேயானால் அவ்வளவு சிறப்பான முறையில் தமிழ்நாட்டிலே உள்ளதுபோல் வேறு சில மாநிலங்களிலேகூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வளவு வசதியான கட்டடம், வீடாகத் தாங்கள் பயன்படுத்தக்கூடிய முறையிலே கிடைக்கவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். எனவே, அப்படிப்பட்ட அந்தக் கட்டடம் இன்னும் ஆறு திங்களில் நமக்கு வழங்கப்படும். அதைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு விரைந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய வசதிகளைப்பற்றி எல்லாம் நான் இங்கே சொல்லிக்கொண்டிருக்கவேண்டிய தேவையில்லை. எப்படியும் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று பார்க்க முடியும். அந்த இடம் கிடைத்தாலே மற்ற குறை எல்லாம் நீங்கிவிடும் என்று கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் 1-30 மணிக்குள் வாக்கெடுப்பை நடத்தி முடிக்க வேண்டும். ஆகையால் யாரையும் அனுமதிக்க முடியாது.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.





### (அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1999 மே 13

திரு. கே. ரவி அருணன். இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி.மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1881,36,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42- பல்வகை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.



1999 மே 13]

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ன உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.458,30,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-30

### (இ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.



**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.301,07,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ச) கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.



**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.388,29,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை, திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு.அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.10,26,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8 - தேர்தல்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என்.. பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாக கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.7,12,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அறிவிப்புகள்

**(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1999(ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

**தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-5-1999) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

238. மானியக் கோரிக்கை எண் 41-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

239. மானிய கோரிக்கை எண் 41-விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய சலுகைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

240. மானியக் கோரிக்கை எண் 42-பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000.(தமிழ், ஆங்கிலம்)

241. முன்னாள் படைவீரர், அவரைச் சார்ந்தோர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் பற்றிய புத்தகம். (தமிழ்)

242. மானியக் கோரிக்கை எண் 60-பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ்-ஆங்கிலம்)

243. மானியக் கோரிக்கை எண் 61-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

244 மானியக் கோரிக்கை எண் 8-பொதுத் தேர்தல்கள் குறித்த வரைவு [illegible] மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

245. மானியக் கோரிக்கை எண் 8-உள்ளாட்சித் தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

246. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று நான்காவது அறிக்கை, 1998-99.

[1999 மே 13

247. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை, 1998-99.

248. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஆறாவது அறிக்கை, 1998-99.

249. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஏழாவது அறிக்கை, 1998-99.

250. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று எட்டாவது றிக்கை, 1998-99.



1999 மே 13]

## இணைப்பு-I

[65 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்**

**(கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000)**

**பொதுத் (அரசியல் ஓய்வூதியம்) துறை**

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் உரிய ஓய்வூதியங்களும் ஏனைய சலுகைகளும்.**

2235. சமூகப் பாதுகாப்பு நலன் - 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் - 102. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் - I. திட்டத்தில் சேராதது - ஏஎப். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கும் ஓய்வூதியம் முதலியவை. (த.தொ.கு. எண். 2235 60 102 ஏஎப் 0005).

நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் இன்னலுற்றவர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. விடுதலைப் போராட்ட வீரர்கள் மீது நமக்கு இருக்கும் நன்றிக்கடனை வெளிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஓய்வூதியம், மருத்துவ வசதி, இலவச பஸ் பயண வசதி, அவர்களின் வாரிசுகளுக்குக் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு ஆகியவை இந்த அரசால் அளிக்கப்பட்டுள்ளன.

2. பொதுத் (பொது இ) துறையின் 28-9-1966 ஆம் நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 2064-ல் தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3. தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர் களும் அல்லது காவல் கைதியாக இருந்தவர்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மரணமடைந்தவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும், காவலர் தடியடியிலும் கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை உற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்

பெறத் தகுதியுடையவர்களாக இருந்தனர். பிறகு இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித் திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் விடுதலை போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகத் தலைமறைவாக சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற, அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் கால அளவான மூன்று மாதம் என்பது, 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இவ்வோய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

4. விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் சிறைத் துன்பம் அடைந்ததற்கு ஆதாரமாக நீதிமன்ற ஆணையின் அல்லது சிறைத் துறை ஆவணத்தின் பகுதி நகல் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இவை இல்லாத நிலையில் முன்னாள் அல்லது தற்போதைய நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் வழங்கும் சக கைதி சான்றிதழ்கள் சிறை தண்டனை பெற்றதற்கான ஆதாரமாக 1-4-1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் இம்முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதால் சக கைதி சான்று வழங்கும் முறை திருத்தியமைக்கப்பட்டது. இதன்படி பொது (அரசியல் ஓய்வூதியம்.2)த் துறையின் 16-11-1988 நாளிட்ட அரசு (நிலை) ஆணை எண் 2015-ன்படி விண்ணப்பதாரர் சிறைச் சான்று/நீதிமன்ற ஆணை நகல்கள் இல்லாத நிலையில் மாநிலம் முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 சான்றாளர்களுள் எவரேனும் இருவரிடமிருந்து சக கைதி சான்று பெற்று விண்ணப்பிக்கலாம். பின்பு மேற்குறிப்பிட்ட 15 சான்றாளர்களில் பலர் சென்னையில் வசித்ததாலும், கைது செய்யப்பட்ட அனைவரும் ஒரே சிறையில் வைக்கப்படாததாலும் இரண்டு சக கைதி சான்றிதழ்கள் பெறுவதில் சிரமங்கள் உள்ளன என அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எனவே, 7-2-1996 ஆம் நாளிட்ட பொது (அரசியல்



ஓய்வூதியம்.2)த் துறையின் அரசு ஆணை எண் 30-ல் இம்முறை மாற்றியமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட முறையின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியைத் துணைத் தலைவராகவும், மூன்று பிரபல தியாகிகளை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல தியாகிகளைச் சான்றளிப்பவராகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களும், சான்றளிப்பவர்களும் மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் சக கைதி சான்றின் அடிப்படையில் இல்லாமல் மூல அரசு ஆவணங்களின் அடிப்படையில் பெற்றவராக இருத்தல் வேண்டும். மேற்படி குழு செயல்படுவது குறித்து வழிகாட்டி நெறிமுறைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி விடுதலைப் போராட்ட வீரர் தன்னுடன் சிறைத் தண்டனை அனுபவித்த சக கைதி சிறையில் அடைப்பட்டிருந்த கால அளவைக் குறிப்பிட்டு அந்த மாவட்டத்திலுள்ள சான்றளிக்க அதிகாரம் பெற்ற இருவரில் ஒருவரிடமிருந்து சக கைதி சான்றிதழ் பெற வேண்டும். விடுதலைப் போராட்ட வீரர் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

5. வரையறுக்கப்பட்ட படிவத்தில் அமைந்த விண்ணப்பம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பத்தாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப் பரிசீலிக்கப்படும்.

6. அரசியல் ஓய்வூதியதாரர், தமது மரணத்திற்குப்பின் தனது மனைவியை/கணவனைத் தொடர்ந்து ஓய்வூதியம் பெற வாரிசாக நியமனம் செய்யலாம்.

7. விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு ஒன்றில் கொடுக்கபட்டுள்ளது.

8. இதனைத் தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்கு மாநில அரசு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இதன் விவரம் இணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

[1999 மே 13

9. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்றுவருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தால் இந்த ஓய்வூதியத் தொகையானது அவரது மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. இதன் விவரம் இணைப்பு மூன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்குச் சிறப்பு ஒட்டுமொத்த மானியங்களும், ஓய்வூதியங்களும், அரசினால் வழங்கப்படுகின்றன. 29-08-1996 வரை, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150/- வீதம் 202 பேர்களுக்கும் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ. 300/- வீதம் 9 பேர்களுக்கும் மேற்படி ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஓய்வூதியம் 30-08-1996 முதல் சிவகங்கை மருதுபாண்டிய சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கும், வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுதாரர்களுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ. 500/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. 31-03-1999 அன்று நிலவரப்படி சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் சுமார் 170 பேரும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான மற்றும் முதுநிலை வாரிசுதாரர்கள் 8 பேரும் மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

*(அ) மருத்துவ வசதிகள்:*

மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது இவ்விரு அரசின் ஓய்வூதியங்களையும் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் 01-08-1990 ஆம் நாளிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ. 15/- வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

மத்திய/மாநில அரசு ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் அரசு மருத்துவமனைகளில் 'பி' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவ சிகிச்சை பெற அனுமதிக்கப்படுகின்றனர்.



1999 மே 13]

விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ, மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்கும் நேர்வில் அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழக்கமாக அனுமதிக்கப்படுகின்ற இலவச மருத்துவ சிகிச்சை வசதியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

*(ஆ) கல்விச் சலுகைகள்:*

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு / பேரன், பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும் படிப்பு உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு தொழில்/தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

1. குழந்தைகளுக்கு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து பொறியியல் பட்டப் படிப்பில் (முதலாவது ஆண்டு) ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. பின்வருமாறு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:—

(அ) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள்;

(ஆ) விடுதலைப் போராட்ட வீரர்களின் பேரன்/பேத்திகள்.

3. விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு, பேரன், பேத்திகளுக்கு சித்த மருத்துவ இளங்கலை பட்டப் படிப்பில் ஓரிடமும், ஓமியோபதி மருத்துவ இளங்கலை பட்டப் படிப்பில் ஓரிடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு, பேரன், பேத்திகளுக்கு பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் (பாலிடெக்னிக்) சிறப்புக் கல்வி நிறுவனங்களிலும் ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

*(இ) வீட்டு வசதிகள்:*

தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்த வீடுகளில்/மனைகளில்/அடுக்குமாடி வீடுகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு

ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலும், மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலும் ஒவ்வொரு சதவிகிதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

*(ஈ) போக்குவரத்து வசதிகள்*

1996 ஆம் ஆண்டு நவம்பர் திங்களுக்கு முன்னர் மத்திய/மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தைப் பெற்று வந்தவர்களுக்கு மட்டுமே மாநில அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டன. இவ்வரசு மேற்குறிப்பிட்ட சலுகையை விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளுக்கும் போக்குவரத்துத் துறையின் 05-11-1996 ஆம் நாளிட்ட 240 ஆம் எண் அரசாணையில் நீட்டித்து ஆணை வெளியிட்டுள்ளது.

*(உ) ஈமச் சடங்குச் செலவுகள்*

விடுதலைப் போராட்ட வீரர் இறந்துபோவதை அடுத்து ஈமச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு ரூ. 1,000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) உடனடியாக வழங்கப்படுகிறது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இத்தொகை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மூலமாக ரொக்கமாக வழங்கப்படும். இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வட்டாட்சியர் அல்லது அவரது பதவித் தரத்திற்குக் குறையாத அலுவலர் ஒருவரால் இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரரின் உடல்மீது அரசு சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

**(ஊ)** விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவைச் சிறப்பிக்க வேண்டுமென்பதில் நிலையான உறுதி பூண்டுள்ளது குறித்து அரசு பெரிதும் பெருமை கொள்கிறது. இந்த விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவை போற்றி என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் வகையிலும், இதன் வா ாக நமது நாட்டின் பெருமை மிக்க வரலாறு குறித்தும், கண்ணீரும் செந்நீரும் சிந்தி நாம் பெற்ற சுதந்திரம் குறித்தும்



இளந்தலைமுறையினருக்கு பெருமித உணர்வை ஊட்டும் வகையிலும் அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதற்கிணங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:—

1. சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி தியாகிகளின் நினைவாக, காந்தி மண்டபம் அருகே கிண்டியில் ரூ. 30 இலட்சம் செலவில் தியாகிகள் மணிமண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மதுரை திருமங்கலத்தில் விடுதலைப் போராளி தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவாக ரூ. 62 இலட்சம் செலவில் நினைவு இல்லம் உருவாக்கப்பட்டுள்ளது.

2. திருநெல்வேலி மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவன் நினைவாக புதிய மாளிகை ரூ. 57 இலட்சம் செலவில் எழுப்பப்பட்டு பூலித்தேவன் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

3. ரூ. 25 இலட்சம் செலவில் முன்னாள் முதல்வர் பெரியவர் திரு. பக்தவச்சலம் அவர்களுக்கு சென்னையில் நினைவிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

4. வேலூர் சிப்பாய் கலவரம் எனும் சுதந்திரப் போரில் தங்கள் இன்னுயிரை ஈந்த இந்தியப் படைவீரர்களின் நினைவாக ரூ. 3 இலட்சம் செலவில் நினைவுத்தூண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

5. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட 200-வது ஆண்டை நினைவு கூர்ந்திடும் வகையில் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி, தூத்துக்குடி மாவட்டம் கயத்தாற்றில் இந்த அரசின் சார்பில் புகழாஞ்சலி நிகழ்ச்சி நடத்தப்படும்.

6. அதேபோல் மானங்காத்த சீமையின் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட 200 ஆம் ஆண்டினை நினைவுகொள்ளும் வகையில் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் புகழாஞ்சலி நிகழ்ச்சி அரசு சார்பில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடத்தப்படும்.

7. பிரிட்டிஷ் கொடியை இறக்கிவிட்டு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவதற்காக உயிரைப் பொருட்படுத்தாமல் கொடிக்கம்பத்தின் உச்சியில் ஏறி கொடி ஏற்றியவரும் நாட்டு விடுதலைக்காக பலமுறை சிறை சென்றவருமான ஆரியா என்ற பாஷ்யம் அவர்களின் சிலையும் சென்னையில் உள்ள தியாகிகள் மணிமண்டபத்தின் முகப்பில் அமைக்கப்படும்.

8. வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்காக பெயர்கள் அனுப்பப்படும்போது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகளுக்கு முன் உரிமை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**10. மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்**

மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-08-1972 முதல் செயலில் உள்ளது. மத்திய அரசு பின்வரும் சலுகைகளுடன் இத்திட்டத்தை மாற்றியமைத்தது. 01-08-1980 முதல் "சுதந்திரத்தா சைனிக் சம்மன் பென்சன் திட்டம்'' என்று இத்திட்டம் மறு பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

(அ) ஓய்வூதியதாரர்களின் ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ. 5,000/- என்பது 01-08-1980 முதல் நீக்கப்பட்டது.

(ஆ) ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்குச் சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டது.

(இ) ஆறு மாதம் அல்லது அதற்கும் மேலாக தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், இரண்டாண்டுகள் அதற்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து சான்றிதழ் பெற்று தக்க ஆதாரமாகச் சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்படி அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

(ஈ) சிறையில் இருந்ததற்கான சான்றிதழ்களை/சிறையில் உடன் இருந்தவர்களின் சான்றிதழ்களை முன்னாள் அல்லது தற்போதைய சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்து பெறவேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டது. சிறைத் தண்டனை அனுபவித்ததாக உரிமை கோருபவர்களைப் பொறுத்தமட்டில், தளர்த்தப்பட்ட விதிகளின் கீழ் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு ஓராண்டு கால அளவிற்கு குறையாமல் சிறைத் தண்டனை அனுபவித்தவர்களும் மற்றும் தாமிரப் பத்திரம் பெற்றவர்களும் மத்திய அரசு வருவாயிலிருந்து ஓய்வூதியம்



பெறுபவர்களும் மனுதாரர்களுடன் குறிப்பிடக்கூடிய கால அளவிற்குச் சிறையில் இருந்தவர்களுமான பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர்கள் இருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழைச் சிறையில் உடனிருந்தவர் சான்றிதழாக அரசு ஏற்றுக்கொள்ளும். அல்லது தற்போதைய அல்லது முன்னாள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் ஒருவர் தன்னுடைய சிறைவாச காலத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு வழங்கிய ஒரு சக கைதி சான்றிதழ் அரசால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(உ) 10 சவுக்கடிகள்/கசையடி அல்லது பிரம்படிபட்டு ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாதத்திற்குக் குறையாமல் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(ஊ) விண்ணப்பதாரர்கள் ஐந்து ரூபாய்க்கான முத்திரைத் தாளில் பிரமாண வாக்குமூலம் அளிக்க வேண்டும். இவ்வாக்குமூலம் முதன்மை நீதிபதியின் முன்னிலையில் அளிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(எ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கத்தக்க மாதாந்திர ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) 01-08-1998 முதல் மைய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு அவர்களது ஓய்வூதியத் தொகையில் 7 சதவீதம் அகவிலைப்படி நிவாரணமாக மைய அரசு வழங்கி வருகிறது.

11. 31-03-1999 அன்றைய நிலவரப்படி மாநில, மத்திய அரசுகளின் ஓய்வூதியங்களைப் பெறும் தமிழ்நாட்டிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்த விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | விடுதலைப் போராட்ட வீரர் மாநில ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை (ரூ. 3,000/- + 15 மருத்துவப்படி) .. .. .. .. | 1951 |
| 2. | விடுதலைப் போராட்ட வீரர் மாநிலத் தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ. 1,500/- + 15 மருத்துவப்படி) .... .. | 2146 |
| 3. | விடுதலைப் போராட்ட வீரர் மைய அரசு ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ. 3,000/- + 15 மருத்துவப்படி) .. .. | 1622 |

[1999 மே 13

4. மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ. 3,000 + 15 மருத்துவப்படி) .. .. .. 1365

5. வீரபாண்டிய கட்டபொம்மன் வழித் தோன்றல்கள் (ரூ. 500 மாதம் ஒன்றுக்கு) .. .. .. 8

6. சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ. 500 மாதமொன்றிற்கு) .. 170

12. 1987 ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட இட ஒதுக்கீடு போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர் நீத்தவர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குதல்:—

இட ஒதுக்கீடு கேட்டு வன்னியர் சங்கத்தினரால் 1987 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சமூக நீதிப் போராட்டத்தில் உயிர் நீத்தோரின் நினைவாக அவர்களது வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ. 1,500/- அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

13. இத்திட்டங்களுக்காக 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 14,78,42,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

| | கால அளவு | ஓய்வூதியத் தொகை |
|---|---|---|
| 1. | 01-10-1996 முதல் | 50/- |
| 2. | 15-08- 1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 16-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 1000/- |
| 9. | 01-09-1995 முதல் | 1500/- |
| 10. | 15-08-1997 முதல் | 3000/- |



1999 மே 13]

## இணைப்பு - II

(65 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**கோரிக்கை எண் 42 - பல்வகை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000**

இது கூட்டு மானியக் கோரிக்கையாகும். இந்த மானியக் கோரிக்கையில், முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படும் மானியம், உள்ளாட்சி மன்றங்கள், சிறு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி ஆகியவை தொடர்பான செலவு, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்பட்டோருக்குப் புதுவாழ்வு அளிப்பதற்கான செலவு, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சிறுசேமிப்புத் திட்டம் தொடர்பான செலவு ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. வேறு எந்த குறிப்பிட்ட ஒரு மானியக் கோரிக்கையிலும் சேர்க்க இயலாத ஏனைய பல்வகை இனங்களும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள், பெருந்தலைப்பு வாரியாக வருமாறு:—

| கணக்குத் தலைப்புகள் | 1998-99 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1998-99 திருத்த மதிப்பீடு | 1999-2000 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2047. ஏனைய வரிவிதிப்புப் பணிகள் | 1625 | 4485 | 3768 |
| 2070. ஏனைய நிருவாகப் பணிகள் | 184 | 208 | 191 |
| 2075. பல்வகைப் பொதுவான பணிகள் | 112753 | 1383 | 30781 |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் | 10580 | 11660 | 11081 |
| 2250. ஏனைய சமூகப் பணிகள் | 19 | 19 | 18 |

இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

[1999 மே 13

## சிறுசேமிப்பு

மைய அரசால் வசூக்கப்படும் பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதே சிறுசேமிப்புத் துறையின் முக்கிய பணியாகும்.

வசூலிக்கப்படும் நிகர சிறுசேமிப்புத் தொகையில் 75 விழுக்காட்டை 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தத்தக்க, நீண்டகாலக் கடனாக மைய அரசு மாநில அரசுக்கு வழங்கி வருகிறது. இந்தக் கடனுக்கு 5 ஆண்டுகால தவணை நீட்டிப்பும் உள்ளது. 1-4-1999 முதல் இந்தக் கடன்தொகைக்கான வட்டி வீதம் 13.5 விழுக்காடு ஆகும்.

**இலக்கும் சாதனையும்**

கடந்த ஏழாண்டுகளில் சிறுசேமிப்பு வசூலின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நிகர இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் | மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் |
|---|---|---|---|---|
| 1992-93 | 550.00 | 1710.70 | 614.89 | 461.17 |
| 1993-94 | 590.00 | 2211.66 | 621.47 | 466.10 |
| 1994-95 | 800.00 | 2650.38 | 791.08 | 593.31 |
| 1995-96 | 700.00 | 1956.36 | 490.70 | 368.03 |
| 1996-97 | 625.00 | 2233.08 | 495.80 | 371.85 |
| 1997-98 | 775.00 | 2432.51 | 547.46 | 410.60 |
| 1998-99 | 1400.00 | 2804.81 | 1104.86 | 780.31 |

(தோராயமாக)



1999 மே 13]

**சிறுசேமிப்புத் திட்டங்கள்**

அனைத்துப் பிரிவு மக்களும் தங்களால் இயன்ற அளவு பணத்தை சேமிக்க உகந்தவாறு பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

**(அ) வரிச் சலுகை உள்ள திட்டங்கள்**

1. பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்
2. தேசிய சேமிப்புப் பத்திரம் (8-வது வெளியீடு)
3. தேசிய சேமிப்புத் திட்டம்

**(ஆ) உயர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்**

1. கிஸான் விகாஸ் பத்திரம்
2. இந்திரா விகாஸ் பத்திரம்

**(இ) தொடர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்**

1. அஞ்சலக மாதாந்திர வருமானத் திட்டம்
2. ஓய்வுபெறும் அரசு ஊழியருக்கான வைப்புத் திட்டம்
3. ஓய்வுபெறும் பொதுத் துறை நிறுவன ஊழியருக்கான வைப்புத் திட்டம்

**(ஈ) பிற திட்டங்கள்**

1. அஞ்சலக குறித்தகால வைப்புத் திட்டம்
2. அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்
3. அஞ்சலக சேமிப்புத் திட்டம்
4. சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம்
5. சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம்

[1999 மே 13

## சிறுசேமிப்பு முகவரமைப்பு

சிறுசேமிப்புத் தொகை வசூலில் சிறுசேமிப்பு முகவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்போது மூன்று வகையான முகவரமைப்புகள் உள்ளன.

1. நிலைப்படுத்தப்பட்ட முகவர் அமைப்பு
2. மகளிர் முகவரமைப்பு
3. அங்கீகரிக்கப்பட்ட (பொது வருங்கால வைப்பு நிதி) முகவரமைப்பு

முகவரமைப்பின் விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் (1) | முகவர் அமைப்பு (2) | செயல்படுத்தப்படும் திட்டங்கள் (3) | மத்திய அரசு வழங்கும் ஊக்கத் தொகை (4) | மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகை (5) | கால அளவு (6) | முகவர் களின் எண் ணிக்கை (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | நிலைப் படுத்தப்பட்ட முகவர் அமைப்பு | தேசிய சேமிப்புப் பத்திரம் | 1% | 1% | மாதந் தோறும் | 9185 |
| | | தேசிய சேமிப்புத் திட்டம் | 1% | 1% | " | |
| | | மாதாந்திர வருமானத் திட்டம் | 1% | 1% | " | |
| | | கிசான் விகாஸ் பத்திரம் | 1% | 1% | " | |
| | | அஞ்சலக கால வைப்புத் திட்டம் | | | | |
| | | 1 ஆண்டு | 0.5% | 0.5% | " | |
| | | 2 ஆண்டுகள் | 1% | 1% | " | |
| | | 3 ஆண்டுகள் | 1% | 1% | " | |
| | | 5 ஆண்டுகள் | 2.5% | 2.5% | " | |
| 2. | மகளிர் முகவர் அமைப்பு | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் | 4% (ஆண்டு வசூல் ரூ. 25000 வரை) | 2% (ஆண்டு வசூல் ரூ. 25000 வரை) | " | 1463.5 |
| | | | 5% (ஆண்டு வசூல் ரூ. 25000 க்குமேல்) | 2.5% (ஆண்டு வசூல் ரூ. 25000 க்குமேல்) | | |



1999 மே 13]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 3. | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் அமைப்பு | பொது வருங்கால வைப்பு நிதி | 1% | 1% | மாதந் தோறும் | 1064 |
| | | ஓய்வுபெறும் அரசு ஊழியருக்கான வைப்புத் திட்டம்/ஓய்வுபெறும் பொதுத்துறை நிறுவன ஊழியருக்கான வைப்புத் திட்டம் | 1% | 1% | | |

முகவர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் ஊக்கத்தொகை ஆண்டுக்கு இரண்டு முறை மட்டும் வழங்கப்படும் நிலை மாற்றப்பட்டு மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

### வருங்காலத் திட்ட அணுகுமுறை

வருமானம் அதிகரிப்பதால் பொதுமக்கள் பணத்தைச் சேமிக்கும் வாய்ப்பும் அதிகரிக்கின்றது. நெகிழ்வுத்தன்மை கொண்ட விருப்புரிமைகளுடன் அதிக வருமானம் கிடைக்கின்ற, நீண்டகாலப் பலன்களை அளிக்கின்ற சிறுசேமிப்புத் திட்டங்கள் வீட்டு வருமானத்திலிருந்து சேமித்து முதலீடு செய்வதற்குச் சிறந்த முறை ஆகும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறுசேமிப்பை ஊக்குவிக்கும் வகையில், சிறுசேமிப்பு வசூலின் அடிப்படையில் கூடுதலாக ஆண்டுதோறும் பெறப்படும் சிறுசேமிப்புக் கடன் தொகைக்கு ஏற்ப ஊக்கத் தொகை வழங்கப்படும். அதேசமயம் சிறுசேமிப்பு இயக்கத்தை முற்றிலும் முகவர்களைச் சார்ந்ததாக மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கேற்ப முகவர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்படுகிறது. சிறுசேமிப்பு இயக்ககத்தால் செய்யப்படும் பயன்தரத்தக்க விளம்பர நடவடிக்கைகள், சிறுசேமிப்பினால் பணத்திற்குப் பாதுகாப்பு மற்றும் நிலையான உத்தரவாதம் என்ற செய்தியை மக்களிடையே பரவிடச் செய்ய வழிவகை செய்கின்றன. பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்களின் அனுகூலமான அம்சங்கள் குறித்து பொது மக்களுக்குத் தகவல் அளிக்க, அரசு அதன் விளம்பர நடவடிக்கைகளை அதிகரிக்கும்.

[1999 மே 13

**பரிசுச்சீட்டு**

தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம் மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 15-8-1968 ஆம் நாளன்று முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1975 செப்டம்பரிலிருந்து 1976 ஆகஸ்டு வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் மீண்டும் செயல்படுத்தப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குதல், கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல், கிராமப் பகுதிகளில் சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல் முதலிய நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பரிசுச்சீட்டுகள் விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறும் நிகர ஆதாயத் தொகையில் 75 விழுக்காடு நலத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. டிசம்பர் திங்களில் நடைபெறும் முதல் குலுக்கலின் மூலம் கிடைக்கக்கூடிய ஆதாயத் தொகை முன்னாள் இராணுவத்தினர் நலத்திற்காக ஒதுக்கப்படுகிறது.

**பரிசுச்சீட்டுச் சட்டம்**

இந்தியக் குடியரசுத் தலைவர், பரிசுச்சீட்டுகள் (முறைப்படுத்தல்) அவசரச் சட்டத்தை (20/1997) அறிவித்துள்ளார். இந்த அவசரச் சட்டம் 2-10-1997 அன்று செயலுக்கு வந்தது. இந்த அவசரச் சட்டம் 30-12-1997 அன்று மீண்டும் அதிகார முறையில் அறிவிக்கப்பட்டது. பின்னர் 7-7-1998 அன்று இது சட்டமாக இயற்றப்பட்டுள்ளது.

இந்த அவசரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு உள் (நீதிமன்றங்கள்-II) துறையின் 24-11-1997 ஆம் நாளிட்ட 1703 ஆம் அரசாணையின் மூலம் தமிழ்நாடு அரசு 1-1-1998 முதல் தமிழ்நாடு மாநிலத்திற்குள் ஏனைய மாநிலங்கள் ஏற்பாடு செய்யும் அல்லது நடத்தும் அல்லது முனைப்படுத்தும் பரிசுச்சீட்டு விற்பனையைத் தடை செய்வதை அறிவித்தது. பரிசுச்சீட்டு விற்பனையாளர்கள் சங்கம் மேற்சொன்ன அரசாணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்து தமிழ்நாட்டில் ஏனைய மாநில பரிசுச்சீட்டு விற்பனைத் தடையைச் செயற்படுத்துவதை நிறுத்தி வைத்து இடைக்காலத் தடையாணை பெற்றுள்ளது. இந்தத் தடை ஒரு எண் மற்றும் உடனடிப் பரிசுச்சீட்டுகளுக்குப் பொருந்தாது.

இதற்கிடையில் லாட்டரிச் சட்டம் பிரிவு 5 தொடர்பாக கௌஹாத்தி உயர்நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில்



1999 மே 13]

தொடுக்கப்பட்ட ஒரு வழக்கில் உச்சநீதிமன்றம் 7-5-1999 ஆம் நாளன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்தத் தீர்ப்பின் முழு விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன் மாநில அரசு விரிவாகப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

**மறுவாழ்வு**

*தாயகம் திரும்பியோர்கள்*

இந்தியா விடுதலை அடைந்த பின்பு, பர்மா, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து இந்திய வம்சாவழியினர் இந்தியாவிற்குத் திரும்பி வர ஆரம்பித்தனர். 28-2-1999 வரை பர்மாவிலிருந்து 1,44,445 நபர்களும், இலங்கையிலிருந்து 4,61,573 நபர்களும், வியட்நாமிலிருந்து 2,055 நபர்களும் இந்தியாவிற்குத் திரும்பியுள்ளனர். இவ்வாறு தாயகம் திரும்புகிற இந்தியர்கள் தமிழ்நாட்டிலுள்ள இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இடைத்தங்கல் முகாமிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கொட்டப்பட்டு இடைத்தங்கல் முகாமிலும் தங்க வைக்கப்படுகின்றனர். பிறகு, அவர்கள் தோட்டப்பயிர், வேளாண்மை, கூட்டுறவு நூற்பாலைகள், வியாபாரம், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கித் திட்டங்கள் மற்றும் சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு குடியமர்த்தப்படுகின்றனர்.

**அகதிகள்**

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் 24-7-1983 முதல் அகதிகளாக இந்தியாவிற்கு வர ஆரம்பித்தனர். 29-7-1987 வரை 1,34,053 இலங்கை அகதிகள் இந்தியாவிற்கு வந்தனர். இலங்கையில் பின்னர், நிலைமை சீரடைந்ததால், 24-12-1987 முதல் 31-3-1989 வரை 25,585 அகதிகள் கப்பல் மூலமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எஞ்சியவர்களில் தாமாகவே இலங்கைக்குத் திரும்பிச் சென்றவர்கள் போக, மீதமுள்ளோர் அவர்களுடைய உறவினர்களுடன்/ நண்பர்களுடன் இந்தியாவில் தங்கிவிட்டனர்.

இலங்கையில் மீண்டும் இனக்கலவரம் ஏற்பட்டதால், 25-8-1989 முதல் அகதிகள் மீண்டும் பெருமளவில் இந்தியாவிற்கு வரத் தொடங்கினர். இந்த இரண்டாவது கட்ட வருகையில் 1,22,078 இலங்கை அகதிகள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இவர்களில் 1,15,680 அகதிகள் சென்னை,

[1999 மே 13

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் தவிர்த்து, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். 20-1-1992 முதல் 20-3-1995 வரை இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்த 54,188 அகதிகள் தனி கப்பல் மற்றும் விமானம் மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் இனக் கலவரங்களின் காரணமாக 31-7-1996 முதல் மீண்டும் அகதிகள் வரத் தொடங்கி, 31-3-1999 வரை 16,576 இலங்கை அகதிகள் தமிழகத்திற்கு வந்துள்ளனர். வருங்காலத்தில் அகதிகளின் வருகை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது 131 அகதி முகாம்களில் 63,269 அகதிகளைக் கொண்ட 17,114 குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன. இந்த அகதிகளுக்கு இருப்பிடம், மருத்துவ வசதி, குடிநீர், மின்சாரம் மற்றும் சுகாதார வசதி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு அகதி குடும்பத்திற்கும் இலவசமாகப் பாத்திரங்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர மைய அரசு நிர்ணயம் செய்துள்ள அளவீட்டின்படி, அகதிகளுக்குப் பணக்கொடையும், சலுகை விலையில் அரிசியும் வழங்கப்படுகின்றன.

1997 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் நிதிநிலை அறிக்கையில் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் பணக்கொடை ரூபாய் 150-லிருந்து ரூபாய் 200 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் வித்தியாசத் தொகையை மைய அரசிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வரசு அனுப்பிய செயற்குறிப்பின் அடிப்படையில் மைய அரசு பணக்கொடையை 1-10-1997 முதல் ரூபாய் 150-லிருந்து ரூபாய் 180 ஆக அதிகரிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இருப்பினும் இவ்வரசு தொடர்ந்து மாதம் ரூபாய் 200 வீதம் வழங்கி வருகிறது. அகதிகள் பராமரிப்பிற்கு ஆகும் செலவினங்களை முதலில் மாநில அரசால் ஏற்கப்பட்டு பின்னர் மைய அரசிடமிருந்து பணம் பெறப்படுகிறது. அகதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவும் வகையில் அகதிகள் முகாமை விட்டு வெளியில் சென்று வேலை பார்த்து பொருளீட்ட அரசு அனுமதிக்கிறது.



1999 மே 13]

### அகதிகளுக்கு இலவசத் துணிமணிகள் வழங்கும் திட்டம்

ஒவ்வோராண்டும் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவில் துணிமணிகள், பாய் போன்றவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இதுதவிர, ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், முகாமகளில் தங்கியுள்ள இலங்கை அகதிகளில் வயது வந்த அனைவருக்கும் இலவசமாக வேட்டி, சேலை ஒவ்வோராண்டும் "பொங்கல்" திருநாளின்போது வழங்கப்படுகின்றன.

### அகதிகளுக்கான குடியிருப்பு வசதிகள்

பல்வேறு மாவட்டங்களில் அகதிகள் தங்குவதற்கு கட்டப்பெற்ற குடிசைகள் நீண்டகாலம் ஆகிவிட்டமையால், பழுதடைந்து, புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. எனவே, இவற்றைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு மைய அரசு உத்தரவிட்டு 7,500 குடிசைகளைப் புதுப்பிக்க, செலவினங்களுக்கு ஒப்புதலும் அளித்துள்ளது.

தற்போதுள்ள முகாம்களில் நெருக்கடி ஏற்பட்டு இடமின்மை காரணத்தினால், புதிதாக வரும் அகதிகளைக் குடியமர்த்த 3,000 புதிய குடிசைகள் கட்டுவதற்காக மாநில அரசு மைய அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பியுள்ளது. இதில் மைய அரசின் ஒப்புதல் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

### அகதிகளுக்கு வழங்கப்படும் கல்விச் சலுகைகள்

இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு பிளஸ் 2 வரை இலவசக் கல்வி, சீருடை, புத்தகங்கள் மற்றும் மதிய உணவு வழங்கப்படுகின்றன. இலங்கைத் தமிழ் அகதி மாணவ, மாணவிகளை பிளஸ் 2 அளவிற்கு மேலான படிப்புகளில் படிக்க இருந்த தடையை நீக்கி அவர்கள் 1996-97 ஆம் கல்வி ஆண்டு முதல் கல்லூரிகள் மற்றும் தொழில்முறைக் கல்லூரிகளில் தொடர்ந்து பயில அனுமதித்தும், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இட ஒதுக்கீடு முறையினை மீண்டும் வழங்கியும் அரசு ஜூன் 1996 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்துள்ளது.

அகதிகள் பராமரிப்பிற்கு ஆகும் மொத்தச் செலவினமும் முதலில் மாநில அரசால் ஏற்கப்பட்டு, பின்னர் மைய அரசிடமிருந்து ஈடுசெய்யப்படுகிறது. இதுதவிர, "பொங்கல்" திருநாளின்போது வழங்கப்படுகின்ற இலவச வேட்டி, சேலை ஆகியவற்றிற்கான செலவினம்

[1999 மே 13

மற்றும் அகதிகள் குடும்பத் தலைவருக்குக் கொடுக்கப்படும் கூடுதல் தொகை ரூபாய் 20 ஆகியவை மாநில அரசால் செலவிடப்படுகின்றன.

ஏனைய பொதுவான பணிகளும் நிருவாகப் பணிகளும்

இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், அமைச்சர் பெருமக்கள், ஏனைய சீர்மக்கள் போன்ற மிக முக்கியமான பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது ஆகும் செலவு இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலும், உலக அளவிலுமான விழா கொண்டாட்டங்கள், சிறப்பு நாட்களின் போதான கொண்டாட்டங்கள் தொடர்பான செலவும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

**சமூகப் பாதுகாப்பும் நலனும்**

இத்தலைப்பின்கீழ் நிதிஒதுக்கம் செய்யப்பட்டுள்ள முக்கிய செலவினங்கள் வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | தாயகம் திரும்பியோர் துயர் தணிப்பு நடவடிக்கைக்கான மானியம் | 2644.00 |
| 2. | தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்கு பிரிமியத் தொகைச் செலுத்துதல் | 2665.00 |
| 3. | முன்னாள் படை வீரர் நல இயக்ககத்திற்கு நிதி உதவி | 77.07 |
| 4. | மாவட்ட முப்படை வீரர் நல வாரியம் | 298.57 |
| 5. | போர்க்களத்தில் பெரும் வீரச் செயல்கள் புரிந்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மானியம் | 3.55 |
| 6. | முன்னாள் படை வீரர்கள் நல நிதி | 1.00 |
| 7. | இறந்துவிட்ட அரசுப் பணியாளர்களின் குடும்பத்திற்குக் கருணைத் தொகை | 3500.00 |



1999 மே 13]

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 8. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி பணிக்கொடைத் திட்டம் | 1090.00 |
| 9. | மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான சிறப்பு வருங்கால வைப்பு நிதி - பணிக்கொடைத் திட்டம் | 60.00 |
| 10. | கிராம அலுவலர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி | 12.25 |
| 11. | ஏழைத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் | 190.00 |
| 12. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் சுகாதார நல நிதிக்கு அரசின் பங்குத் தொகை | 40.00 |
| 13. | விபத்தில் பலியானவர்களுக்கு நிதியுதவி | 100.00 |
| 14. | சாதி, வகுப்பு மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கத்தக்க இழப்பீட்டுத் தொகை | 200.00 |
| 15. | இலங்கை அகதிகளுக்கு வேட்டிகள், புடவைகள் இலவசமாக வழங்குதல் | 35.00 |

# இணைப்பு - III

(65 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு
## கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

காவல் துறை, எழுதுபொருள்-அச்சுத் துறை, குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி, ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலன், ஏனைய சமூகப் பணிகள், மீனளம், கூட்டுறவு, மலைப்பகுதிகள், வெள்ளக் கட்டுப்பாடு திட்டங்கள், மின்சக்தித் திட்டங்கள், சுற்றுலா ஆகிய துறைகள் குறித்த மூலதனச் செலவு இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும்.

இக்குறிப்பு இந்த மானியக் கோரிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கியமான நிதி ஒதுக்கங்களில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த நிதி ஒதுக்கங்கள் தொடர்பாக, முக்கியமான பெருந்தலைப்பு வாரியான விவரங்கள் பின்வருமாறு:

| கணக்குத் தலைப்புகள் (1) | 1998-99 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (2) | 1998-99 திருத்த மதிப்பீடு (3) | 1999-2000 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 4055 காவல் துறை குறித்த மூலதனச் செலவு | .. | 4856.87 | 4909.87 |
| 4215. குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு | .. | .. | 5000.00 |
| 4216. வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு | 2759.96 | 1530.24 | 3041.22 |
| 4225. ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் குறித்த மூலதனச் செலவு | 1438.21 | 1652.97 | 4169.76 |







| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 624.91 | 732.24 | 233.79 |
| 4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 2124.09 | 988.66 | 525.01 |
| 4711. வெள்ளக் கட்டுப்பாடுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 128.57 | 1453.76 | 1766.05 |
| 4801. மின்சக்தித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 25000.00 | 25000.00 | 10000.00 |

இம்மானியக் கோரிக்கையின் பின்வரும் சில முக்கிய திட்டங்களும் அவற்றிற்கான நிதி ஒதுக்கங்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

### காவல் துறை

முறையான வீட்டுவசதியில்லாத காரணத்தால் காவல் துறைப் பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலமாக, ஒவ்வோராண்டும் குடியிருப்புகள் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. அதற்காக, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரியத்தில் முதலீடு செய்வதற்காக, 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 49.10 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### குடிநீர் வழங்கல் - துப்புரவு

குறைவாகக் குடிநீர் பெற்றுவரும் நகர்ப்புறங்களில் முதற்கட்டமாக 10 நகராட்சிகளிலும், 25 பேரூராட்சிகளிலும், குடிநீர் வழங்கலை மேம்படுத்த பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டம் ஒன்று நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படும். அதற்காக, ரூ. 50.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1999 மே 13

## வீட்டு வசதி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பணியாளர் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் கட்டுவதற்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய விடுதி கட்டுவதற்கும், வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம் (HDFC) மற்றும் வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனம் (HUDCO) மூலம் பெறப்பட்ட கடனை திருப்பிச் செலுத்த தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 24.41 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் நதி மற்றும் கால்வாய்ச் சீரமைப்புத் தூய்மைப் பணி மேற்கொள்வதற்காக, சென்னை வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டத்தின்கீழ் அங்குள்ள குடிசைவாழ் குடும்பங்களை அப்புறப்படுத்தி, ஒக்கியம் துரைப்பாக்கத்தில் குடியமர்த்த ரூ. 37.50 கோடி செலவில் 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் உருவாக்கப்படும். அதற்காக மாநில அரசின் பங்குத் தொகையாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு, 1999-2000 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 6.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலன்

ஆதிதிராவிடர்களுக்கான அரசுப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக, 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 3.10 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடருக்கான அரசு மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக, ரூ. 13.86 கோடி, 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## ஏனைய சமூகப் பணிகள்

தற்போதுள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களை நவீனப்படுத்துவதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்காகவும் 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.34 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



1999 மே 13]

## கூட்டுறவு

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் முதலீடுகளுக்கு 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 4.12 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## வெள்ளக் கட்டுப்பாடுத் திட்டங்கள்

கடல் அரிப்பு ஏற்படுவதைத் தடுக்க பெரிய கற்களைக் கொண்டு கடல் சுவர் கட்டுவதற்காக ரூ. 2.46 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் நதி மற்றும் கால்வாய்ச் சீரமைப்புத் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்காக மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ. 15.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## மின் சக்தி

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு பங்கு மூலதன உதவி வழங்குவதற்காக ரூ. 100.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1999 மே 13

# இணைப்பு - IV

(65 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

## கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

இந்த மானியக் கோரிக்கையில் மாநில அரசு, பல்வேறு நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் வழங்கும் கடன்கள், முன்பணங்கள் ஆகியவை குறித்த நிதியொதுக்கங்கள் அடங்கும். இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள முக்கிய நிதி ஒதுக்கங்கள் பற்றி இக்குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன. பகுதிவாரியான தனித்தனி விவரங்கள் பின்வருமாறு:—

| வளர்ச்சித் துறை (1) | 1998-99 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (2) | 1998-99 திருத்த மதிப்பீடு (3) | 1999-2000 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. பயிர் வளர்ப்பு, மண்வள, நீர்வளப் பாதுகாப்பு, மீனளம், மலைத் தோட்டங்கள், வேளாண்மை நிதியுதவி நிறுவனங்கள், ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் மற்றும் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2255.98 | 2704.32 | 1995.50 |
| 2. மலைப் பகுதி மேம்பாடு | 455.64 | 505.00 | 524.74 |
| 3. வீட்டு வசதி | 1048.45 | 1048.45 | 1037.32 |
| 4. நகர்ப் பகுதி வளர்ச்சி | 1944.16 | 1558.94 | 1354.34 |
| 5. குடிநீர் வழங்கல்-துப்புரவு | 31756.90 | 20423.64 | 19361.84 |
| 6. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 487.40 | 487.40 | 487.40 |
| 7. அரசுப் பணியாளர்கள் முதலியோருக்குக் கடன்கள் | 10623.28 | 11243.68 | 13868.28 |



1999 மே 13]

### குடிநீர் வழங்கல் - துப்புரவு

2. குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டங்களுக்காக 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 193.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கிய நிதியொதுக்கங்கள் பின்வருமாறு:—

| | | 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் செயற்படுத்தும் திட்டங்கள்: | |
| | (i) குடிநீர் வழங்கு திட்டங்கள் | 3492.84 |
| | (ii) வடிகால் திட்டங்கள் | 57.82 |
| 2. | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்: | |
| | (i) குடிநீர் வழங்கல் நிலை உயர்த்துதல் (சென்னை குடிநீர் வழங்கும் இரண்டாம் திட்டம்) | 8311.18 |
| | (ii) அயல்நாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் (OECF) கீழ் கழிவு நீரகற்று திட்டங்கள் | 7500.00 |

3. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், அரசிடமிருந்து கடன் தொகையைப் பெற்றும் மற்றும் அயல்நாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் (OECF) நிதியுதவி பெற்றும் பல்வேறு மூலதனத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. சென்னை இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின் மூலம் சென்னையில் குடிநீர் அனுப்புகை மற்றும் பங்கீட்டு முறை நிலை உயர்த்துதல், கழிவு நீரைச் சுத்திகரித்தல், சென்னைக் கழிவு நீரகற்று முறையில் நடைமுறை மேம்பாடுகள் செய்தல் ஆகியவை வாரியத்தால் செயல்படுத்தப்படுகிற சில முக்கிய திட்டப் பணிகள் ஆகும். இதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1999 மே 13

## வீட்டு வசதி -நகர்ப் பகுதி வளர்ச்சி

4. வீட்டு வசதி-நகர்ப் பகுதி வளர்ச்சிக்கான கடனாக 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.23.92 கோடி நிதுயொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீட்டு வசதிச் சங்கங்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனைக் கொடுப்பதற்காக தமிழ்நாடு வீட்டு வசதிக் கூட்டுறவு இணையத்திற்கு ரூ. 8.76 கோடியும், அடிப்படை வசதி மேம்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்குச் சென்னை தவிர ஏனைய மாநகராட்சிகளுக்கு ரூ. 12.50 கோடியும் மற்றும் சிறிய நடுத்தர நகர வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தமிழ்நாடு நகர-ஊரமைப்புத் திட்ட வாரியத்திற்கு ரூ. 62.58 இலட்சம் நிதியொதுக்கீடும் இதில் அடங்கும்.

## அரசுப் பணியாளர்களும், ஏனைய பணியாளர்களும்

5. அரசுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகைப்பட்ட முன்பணங்கள் வழங்குவதற்காக 1999-2000 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 138.68 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு முன்பணம் வழங்குவதற்காக ரூ. 84.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயக்க ஊர்திகள் வாங்குவதற்காக ரூ. 27.00 கோடியும், கைத்தறி மற்றும் கதர் துணிகள் வாங்க முன்பணமாக ரூ. 16 கோடியும், கல்லூரிகள், பல்தொழில் பயிற்சிப் பயிலகங்களில் மேற்படிப்பைத் தொடர ரூ. 3.20 கோடியும், திருமணக் கடன் முன்பணமாக ரூ. 4.50 கோடியும், டான்சி நிறுவனத்திடமிருந்து பொருள்கள் வாங்குவதற்கு ரூ. 60 இலட்சமும் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் கணினிகள் வாங்குவதற்கு முன்பணம் வழங்க ரூ. 50 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. நகராட்சி மன்றங்கள் மற்றும் நகரியக் குழுக்கள் ஆகியவற்றின் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு முன்பணம் அனுமதிப்பதற்காக, 1999-2000 ஆம் ஆணடு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 60 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1999 மே 13]

7. 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏனைய முக்கிய நிதியொதுக்கங்கள் பின்வருமாறு:

| | | 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| I. | வேளாண்மை<br>மண், நீர் வளப் பாதுகாப்பு | 634.50 |
| II. | ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன்<br>தொழிற்கல்வி, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு பயில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்குக் கடன்கள் | 452.40 |
| III. | கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள்<br>தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்குக் கடன்கள் | 10.00 |
| | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்குக் கடன் | 6.25 |
| | நகர்ப் பகுதி கூட்டுறவு வங்கிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்குக் கடன் | 5.00 |
| | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்கு அவ்வங்கிகளில் கடன் வாங்கும் திறனை அதிகரிப்பதற்கான பங்கு மூலதனத்திற்கு வட்டியில்லாத கடன் உதவித் தொகை | 2.00 |

8. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்களிலிருந்து வசூலாகும் கடன் தவணைத் தொகை ரூபாய் 239 கோடியே 41 இலட்சமாக இருக்கும் என்று 1999-2000 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டுள்ளது.

## இணைப்பு - V

*(65 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்**

**கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000**

**பொதுத் (தேர்தல்கள் - 6) துறை**

**வரைவு உரை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்பதன்கீழ் 1999-2000 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ. 7,12,47,000 (ரூபாய் ஏழு. கோடியே, பனிரெண்டு இலட்சத்து நாறபத்தி ஏழாயிரம் மட்டும்) அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்படும் நிதியில், ரூ. 6,29,16,000 பெரும்பாலும் தேர்தல் நிர்வாகத்தில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பயணப்படி போன்ற பிற செலவினங்களுக்கும், 1999 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல் சிறப்பு முறை திருத்தத்திற்கும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள விடுபட்ட வாக்காளாகள் மற்றும் புதிதாகச் சேர்க்கப்படும் வாக்காளர்கள் ஆகியோருக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை. தயாரித்து வழங்குவதற்கும், ஊராட்சிகள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல் செலவினங்களுக்கும் தேவைப்படுகிறது. மீதமுள்ள ரூ. 83,31,000 மாநிலத் தேர்தல் ஆணையத்தின் ஏனைய நிர்வாகப் பணிகளுக்குத் தேவைப்படுகிறது.

மக்களவைக்கும், தமிழக சட்டப் பேரவைக்குமான பொதுத் தேர்தல்கள் ஒரே நேரத்தில், 1996 ஆம் ஆண்டு நடைபெற்றன. 1998 பிப்ரவரித் திங்களில் மக்களவைக்குப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. எனவே, தமிழக சட்டப் பேரவைக்கு 2001 ஆம் ஆண்டிலும் மக்களவைக்கு 2003 ஆம் ஆண்டிலும் அடுத்த பொதுத் தோதல்கள் நடைபெற வேண்டும். தற்சமயம், இந்தச் சட்டப் பேரவையில் 147. நத்தம் மற்றும் 233. திருவட்டார் ஆகிய இரு சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடங்கள் 28-3-1999 மற்றும் 18-3-1999 அன்று முதல் முறையே காலியாக உள்ளன. இதுகுறித்து இந்தியத் தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 151-ஏ பிரிவின்படி அக்காலியிடங்கள் ஏற்பட்ட நாளிலிருந்து ஆறு திங்களுக்குள் இடைத்





தேர்தல் நடத்தப்பட வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையம் இதுகுறித்து முடிவு செய்யும். 12-வது மக்களவை நிலையான அரசை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை என்று குடியரசுத் தலைவர் தீர்மானித்ததன் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 85, விதி 2(ஆ) வின்கீழ் 26-4-1999 அன்று குடியரசுத் தலைவரின் ஆணைப்படி 12-வது மக்களவை கலைக்கப்பட்டது. 12-வது மக்களவை இறுதியாகக் கூடிய நாளான 22-4-1999-லிருந்து ஆறு மாதங்களுக்குள் 13-வது மக்களவைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

**கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்**

**1999-2000**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்பதன்கீழ் 1999-2000 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ. 7,12,47,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

***2015.* தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது):**

102. தேர்தல் அதிகாரிகள்—

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் .. ரூ. 3,53,56,000

***103.* வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்:**

எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள் .. ரூ. 2,20,84,000

***104.* மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:**

எஎ. மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் ரூ. 21,85,000

[1999 மே 13

**105.** நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:

எஎ. இடைத் தேர்தல்கள் .. ரூ. 18,000 (அடையாள ஒதுக்கீடு)

எபி. மக்களவைக்குத் தேர்தல் .. ரூ. 15,000 (அடையாள ஒதுக்கீடு)

**106.** மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:

எஎ. மாநிலச் சட்டப் பேரவை .. ரூ. 1,95,000

**108.** வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்:

எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் .. ரூ. 6,34,000

**109.** ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் .. ரூ. 20,82,000

**2070.** ஏனைய நிர்வாகப் பணிகள்:

எபி. மாநிலத் தேர்தல் ஆணையம் .. ரூ. 82,81,000

கூட்டுக: திருப்பி வசூலிப்பவை .. ரூ. 3,97,000

மொத்தம் .. ரூ. **7,12,47,000**

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது:

**102.** தேர்தல் அதிகாரிகள்:

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் மதிப்பீடு .. ரூ. 3,53,56,000

தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவலகப் பணியில் உதவி புரிய ஒரு கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி, ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் ஒரு துணைச் செயலாளர் உள்ளனர்.

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையாளர், தலைமைச் செயலர் அவர்களுக்கு அனுப்பியுள்ள 22-8-1997 நாளிட்ட கடிதத்தில் வாக்காளர்



1999 மே 13]

பட்டியலைக் கணினிமயமாக்குவதற்கும் தமிழகத்தில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் மேம்பணிக்காகவும், தகுந்த ஒரு அதிகாரியைத் தெரிவு செய்து தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அடுத்ததாக நியமனம் செய்ய மாநில அரசு கருதலாம் என அறிவுறுத்தியதன் அடிப்படையில் தற்போதுள்ள இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி பதவி தவிர, கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினிமயம்) பதவி ஒன்று உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் பொதுத் தேர்தல்கள் அறிக்கை வெளியிடுவதற்கும், தேர்தல் நடைமுறை நூல்களைத் திருத்தம் செய்வதற்கும், புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணிக்காகவும், துணைச் செயலர் பதவி உருவாக்க அவசியம் ஏற்பட்டது. இது தவிர, ஒரு உதவி தலைமைத் தேர்தல் அதிகாரி பதவி, சார்புச் செயலாளர் நிலையில் நிரந்தரப் பணியிடம் வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணிக்காக ஒரு சிறப்பு அதிகாரி/சார்புச் செயலர் பதவி தற்காலிக பணியிடமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்துறையில் ஆறு பிரிவுகள் நிரந்தரமாகவும், ஒரு பிரிவு தற்காலிகமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரியாவார்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய்க் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிரந்தரமாக ஒரு உதவியாளர் பணியிடம் உள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள் ஒரு இளநிலை உதவியாளர், ஒரு தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர், ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் உள்ளன.

மேலே குறிப்பிட்ட அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலக செலவினம், இதர செலவினம், தபால் தந்தி தொலைபேசிக் கட்டணங்கள், தேர்தல் சம்பந்தப்பட்ட சிறப்பு பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவை இக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

[1999 மே 13

இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக் கொள்கிறது.

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்.**

எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள்.

மதிப்பீடு - ரூ.2,20,84,000

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லா விதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காகத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் ஊதியம், எழுதுபொருள் அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

வாக்காளர் பட்டியல்கள் திருத்தும் பணிக்காகத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்களின் செலவினங்களுக்கும், சென்னை ஆவணக் காப்பகத்தின் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்கான நிரந்தர பணியிடங்களான ஒரு உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்தலைப்பின்கீழ் ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவின்படி, நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் இடைத் தேர்தலுக்கு முன்னரும், வாக்காளர் பட்டியல்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விதிகளுக்குட்பட்டு திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையம் தகுதியேற்படுத்தும் நாளை அறிவித்து திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென ஆண்டின் எந்தக்காலத்தில் அறிவுறுத்தினாலும், திருத்தம் மேற்கொள்ளப்படும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி எந்த ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலிலும் சிறப்புத் திருத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்படலாம்.

வாக்காளர் பட்டியல்கள் வாக்குப் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து திருத்தப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரில் மாநகராட்சி ஆணையாளரும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும்



1999 மே 13]

திருத்துதல் பணிகளை ஒருமுகப்படுத்தி கண்காணித்து வருகின்றனர். வாக்காளர் பட்டியல்களில் சாதாரணமாகத் தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படும்போது மட்டும் வீடுதோறும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, பின்னர் புதிதாகத் தயாரிக்கப்படுவது வழக்கமாக இருந்தது. வாக்காளர் பட்டியல்கள் 1-1-1996 மற்றும் 1-1-1998 தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு சுருக்கமுறையில் திருத்தம் தயாரிக்கப்பட்டு 2-1-1996 மற்றும் 5-1-1998 தேதிகளில் முறையே இறுதிப் பட்டியல்களாக வெளியிடப்பட்டன. சுருக்கமுறை வாக்காளர் இறுதிப் பட்டியல் 1998 ஆம் ஆண்டில் 5-1-1998 அன்று வெளியிடப்பட்டபின் அவை கணினி மயமாக்கப்பட்டபின், கணினியில் நிரந்தரப் பதிவு செய்யப்பட வேண்டுமென இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்தது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டத்திற்காக எல்காட் நிறுவனம் ஏற்கெனவே வாக்காளரின் அடிப்படை விவரங்களை கணினிமயமாக்கியுள்ளதால் வாக்காளர் பட்டியலைக் கணினிமயமாக்கும் பணி எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எல்காட் நிறுவனம் மூலப்பட்டியல்களைத் தயார் செய்து சரிபார்ப்பதற்காக, மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தது. சரிபார்த்த மூலப்பட்டியல்கள் திருத்தங்களுடன் மீண்டும் எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் பின்னர், எல்காட் நிறுவனம், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு CD-ROM என்ற அடிப்படையில் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. மாவட்டத் தேர்தல் அதிகாரியின் அலுவலகங்களில் தேவையான கணினி நிறுவப்பட்டு, அவற்றின் மூலம் லேசர் பிரிண்டர் மூலமாக சி.டி.க்களிலிருந்து வாக்காளர் பட்டியல்களின் ஒரு பிரதி எடுக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல்களைச் சிறப்பு முறையில் திருத்தம் செய்வதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளபடி வாக்காளர் வரைவுப் பட்டியல் வெளியிடுவதற்கும் அரசியல் கட்சிகளின் உபயோகத்திற்கும் கணினிமயமாக்கப்பட்ட வாக்காளர் பட்டியல்களின் ஐம்பது பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன. இச்சிறப்புத் திருத்த அட்டவணையின்படி கணினிமயமாக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் அச்சிடப்பட்டு 20-1-1999 அன்று வரைவு வாக்காளர் பட்டியல்களாக வெளியிடப்பட்டுள்ளது.

அடிப்படைப் பட்டியல் மற்றும் இணைப்புப் பட்டியல்களை ஒருங்கிணைத்து ஒன்றுபடுத்தி இந்தியத் தேர்தல் ஆணையம்

வரையறுத்துள்ள கணினிமயமாக்கப்பட்ட புதிய வடிவத்தில் வாக்காளர் பட்டியல்களை இறுதியாக வெளியிடுவதே இச்சிறப்புத் திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். ஒருங்கிணைக்கப்படுவது மட்டுமல்லாமல், தற்பொழுது, வாக்காளர் பட்டியலில் ஒரே குடும்பத்தில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் மூலப்பட்டியல் மற்றும் இணைப் பட்டியல்களில் வெவ்வெறு இடங்களில் இடம் பெற்றிருந்தால் வீட்டு இலக்கம் மற்றும் தெரு பெயர்களின் அடிப்படையில் இணைத்து வரிசைப்படுத்தப்படும். மேலும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் புதிய வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதற்கு ஆவன செய்யப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இடங்களான வாக்குச்சாவடிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் புதிதாகச் சேர்க்கவும், மாற்றங்கள் செய்யவும் மேலும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள விவரங்களைச் சரி செய்யவும் மனு பெறுவதற்கு ஏதுவாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இந்தச் சிறப்புத் திருத்தத்தின் இறுதிப் பட்டியல் 21-7-1999 அன்று வெளியிடப்படவுள்ளது.

கணினி முறையில் மூலப்பட்டியல் மற்றும் இணைப்புப் பட்டியல்களை எல்லா சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தயாரித்ததற்காக எல்காட் நிறுவனத்திற்கு அளிக்கும் செலவுத் தொகை தவிர சிறப்புத் திருத்தத்திற்கான வரைவுப் பட்டியல் வெளியிட மற்றும் அச்சிடுவதற்கான செலவினமும், பொதுமக்கள் சிறப்புத் திருத்தம் பற்றிய விழிப்புணர்வு பெறுவதற்காக, செய்தி விளம்பரம், தொலைக்காட்சி, வானொலி விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், விளம்பரத் தட்டிகள் மூலம் விளம்பரப்படுத்துவது போன்றவற்றிற்காக ஆகும் செலவினமும் மற்றும் இறுதிப் பட்டியலை அச்சிட்டு வெளியிடுவதற்காக ஆகும் மொத்த செலவுத் தொகையும் அரசினால் இந்த கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இதற்கான செலவுகளை மேற்கொள்ள 1999-2000ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ.2,20,84,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புத் திருத்தம் முன்பே எதிர்பார்க்கப்படாததால் 20-4-1999 ஆம் நாளன்று வாக்காளர் வரைவுப் பட்டியல்களை வெளியிடுவதற்காக அச்சிடப்பட்ட செலவினங்களுக்காக ரூ. 3 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*கணினி பொறி உள்கட்டமைப்பு*

1-1-1998 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு 1998 ஆம் ஆண்டின் சுருக்க முறை வாக்காளர் திருத்தப் பட்டியல்கள்



அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டுமென இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணைகள் பிறப்பித்துள்ளது. அதன்படி, மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தையும் மற்றும் 29 மாவட்டத் தேர்தல் அலுவலகங்களையும் கணினிமயமாக்குவதற்கான ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அதன் அடிப்படையில், இதுகுறித்து அனைத்து நடைமுறைகளும் பின்பற்றப்பட்டு, கணினிகள், கணினி துணைச் சாதனங்கள், கணினி மென்பொருட்கள், தடையில்லா மின் வழங்கல் உபகரணம் ஆகியன மொத்தம் ரூ.3,50,82,095/- செலவினத்தில் வாங்கி நிறுவப்பட்டுள்ளன. மேற்கண்ட அலுவலகங்கள் அனைத்திலும் கணினி மையங்களுக்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றை நிர்மாணிக்கும் பணிகள் ரூ.93,99,840/- செலவில் முடியும் தருவாயில் உள்ளது. தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கு ஒரு சர்வர் மற்றும் 8 நோடுகளும், ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கும் ஒரு சர்வரும் மற்றும் 5 நோடுகளும் வாங்கி நிறுவப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல்களை கணினிமயமாக்கச் செய்யும் பணிகளுக்காகவும், இதுசம்பந்தப்பட்ட இதரத் தேர்தல் மேலாண்மை மற்றும் நிர்வாகப் பணிகளைக் கவனிக்கவும் கணினி வல்லுநர்களை நியமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகங்களில் இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கும் முறையே ஒரு பகுப்பாய்வாளர் மற்றும் ஒரு உதவி பகுப்பாய்வாளர் ஆகியோரும், தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கு இரண்டு உதவி பகுப்பாய்வாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டுப் பணியாற்றி வருகின்றனர்.

இதற்கான செலவினங்கள் அனைத்தும் இந்தத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

**104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எ.எ. மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்

| | |
|---|---|
| மதிப்பீடு .. .. | ரூ.21,85,000/- |

மக்களவைக்கும், சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. 1996 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக்கும் மக்களவைக்கும் தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடைபெற்றன. இவை தவிர, மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை, அதற்கான காவலர்களின் சம்பளம் வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள் மற்றும் இத்துறையில் உள்ள மொத்த வாகனங்களின் பராமரிப்பு, பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்களும் இதன்கீழ் அடங்கும். மேற்கூறிய செலவினங்களுக்காக இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**105.** நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. இடைத் தேர்தல்கள்

மதிப்பீடு .. .. .. ..
(அடையாள ஒதுக்கீடு) ரூ.18,000/-

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்து செலவினங்களும் மேற்கொள்ளப்படும். 12-வது மக்களவை 26-4-1999 நாளன்று கலைக்கப்பட்டுள்ளது. இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**105.** நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்.

எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்

மதிப்பீடு ரூ... .. .. 15,000 (அடையாள ஒதுக்கீடு)

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசிடமிருந்து பெறப்படும்.

1998 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மக்களவைக்குத் தேர்தல் நடைபெற்றது. 10-3-1998 அன்று நிறுவப்பட்ட 12-வது மக்களவை 26-4-1999 ஆம் நாளன்று கலைக்கப்பட்டது. இத்தலைப்பின்கீழ் வெறும்



அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**106.** மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. மாநிலச் சட்டப் பேரவை.

மதிப்பீடு .. .. .. ரூ. 1,95,000/-

மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கு மட்டும் பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் மேற்கொள்ளப்படும். மக்களவைக்கும். தமிழக சட்டப் பேரவைக்கும் பொதுத்தேர்தல் 1996ஆம் ஆண்டு ஒரே நேரத்தில் நடைபெற்றன. எனவே, சட்டமன்றப் பேரவைக்கு அடுத்த பொதுத் தேர்தல் 2001-ம் ஆண்டு நடத்தப்படும். சட்டப் பேரவையில் தற்போது 147. நத்தம் மற்றும் 233. திருவட்டார் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடங்கள் 28-3-1999 மற்றும் 18-3-1999 அன்று முதல் முறையே காலியாக உள்ளன. இந்தத் தொகுதிகளில் ஆறு மாதத்திற்குள் தேர்தல் நடத்துவதற்கான தேதிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவு செய்ய வேண்டும். எனினும் இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுத் (தேர்தல்கள்) துறையில் உள்ள போட்டோ நகல் எடுக்கும் கருவி, மூன்று மின் தட்டச்சுகள் மற்றும் ஒரு மின் படிபெருக்கி ஆகியவற்றின் பராமரிப்புக்காகவும் இதரச் செலவினங்களுக்காகவும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்கிறது.

**108.** வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்

எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

மதிப்பீடு .. .. .. .. ரூ.6,34,000/-

தேர்தலின்போது, ஆள்மாறாட்டத்தைத் தடுக்கும் பொருட்டும், வாக்காளர்களை அடையாளம் காணவும், இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர்களுக்குப் புகைப் படத்துடன்கூடிய அடையாள அட்டைகளை வழங்குவதென்று முடிவெடுத்தது. இப்பணி தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பணியாளர்கள் சம்பளத்தைத் தவிர்த்து ஒரு வாக்காளர் அடையாள

அட்டைக்கு ரூ.15 வீதம் மொத்தமுள்ள 4,55,77,323 வாக்காளர்களுக்கு, வாக்காளர் புகைப்பட அட்டைகள் வழங்கப்படுவதற்கு ரூ.68.36 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டது. இப்பணிக்காக இதுவரை அரசு ரூ.40 கோடி முன்பணமாக தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. (ரூ.16 கோடி ஜூலை 1995-லும், ரூ.4 கோடி ஏப்ரல் 1996-லும், ரூ. 16 கோடி நவம்பர் 1996-லும் மற்றும் ரூ. 4 கோடி டிசம்பர் 1998-லும் வழங்கப்பட்டது) இப்பணிக்காக மார்ச் 1998 வரையிலும் பணியாளர்களின் சம்பளத்திற்கான செலவினமான ரூ.4.68 கோடியும் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்பணமான ரூ. 40 கோடியும் சேர்த்து மொத்த செலவினம் ரூ.64.61 கோடி ஆகியுள்ளது. டிசம்பர், 1998 வரை தோராயமாக ரூ.71 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் பணிக்காக 14-8-1995 அன்று தோற்றுவிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர் பணியிடங்கள் 13-8-1997 வரை நீட்டிக்கப்பட்டது. பிறகு குறிப்பிட்ட சில பணியிடங்கள் மட்டும் 31-3-1999 வரை நீட்டிக்கப்பட்டது. 1-1-1999 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு சிறப்பு வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்து ஒருங்கிணைக்கப்பட்ட வாக்காளர் பட்டிய்ல்கள் வெளியிடப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் ஆணை வெளியிட்டுள்ளதால் இவ்விரு பணிகளையும் சேர்த்து முடிப்பதற்காக மேற்சொன்ன பணியிடங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 234 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் மூன்று சுற்று புகைப்படமெடுக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. 28-1-1998 அன்று வரையிலான மொத்தமுள்ள 4,55,77,323 வாக்காளர்களில் மூன்றாம் சுற்று வரை சுமார் 3,13,30,799 வாக்காளர்கள் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளனர். இது மொத்த வாக்காளர்களில் 69 சதவிகிதமாகும். முதலாவதாக, மின்னணு படம் எடுத்தல், வாக்காளர் பட்டியல்களின் விவரங்களைச் சேர்த்தல், மாநில மையத்தில் சிறு அளவிலான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளைத் தயாரித்தல், மாவட்ட அளவில் அவற்றைச் சரிபார்த்தல், அச்சிடுதல், பிறகு வாக்காளர்களுக்கு அளித்தல் போன்று படிப்படியாக இப்பணி செய்யப்படுகிறது. இதுவரை 2,56,31,000 அச்சடிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டைகள் வாக்காளர் பதிவு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. இதில் 31-3-1999 வரை 2,35,52,630 அடையாள அட்டைகள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன. இப்பணிகளின்



முன்னேற்றம், இடையிடையில் பொதுத் தேர்வுகள் மற்றும் ஜமாபந்தி ஆகியவையும் 1999 மற்றும் 1998-ல் நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் பணிகளும், இப்பணியைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த முடியாமல் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்தன. விடுபட்ட வாக்காளர்களுக்கும், புதிதாகச் சேர்க்கப்படும் வாக்காளர்களுக்கும் மற்றும் குறைபாடுள்ள வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளை மாற்றிப் புது அட்டைகளை வழங்கவும், கணினி புகைப்பட கருவிகள் மூலம் புகைப்படம் எடுத்து உடனேயே இறுதி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கான பணி மேற்கொள்ளப்படவுள்ளது. ஒரு சட்டமன்றத் தொகுதியில் பரிசோதனை முறையில் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப்பணிகளுக்கான செலவினம் இந்தத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இச்செலவினத்தில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்ளும்.

***109. ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்***

மதிப்பீடு .. .. .. .. .. ரூ.20,82,000/-

ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***2070. ஏனைய நிர்வாகப் பணிகள்.***

எபி.மாநிலத் தேர்தல் ஆணையம்

மதிப்பீடு .. .. .. .. ரூ.82,81,000/-

மாநிலத் தேர்தல் ஆணையத்தின் நிர்வாகப் பணிகளுக்கு இத்தலைப்பின் கீழ் நிதியொதுக்கீடு செய்யபட்டுள்ளது.

**கூட்டுக: திருப்பி வசூலிப்பவை .. .. .. ரூ.3,97,000/-**

இத்துறையில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் போன்ற இனங்களிலிருந்து திரும்பப் பெறப்படும் தொகையைத் திருப்பி வசூலித்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ.3,97,000 நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1999 மே 13

## உள்ளாட்சித் தேர்தல்கள்

1. இந்திய அரசியலமைப்பில் 73வது மற்றும் 74வது அரசியல் திருத்தச் சட்டங்கள் கொண்டு வந்ததின் விளைவாக ஊராட்சி அமைப்புகளின் வாயிலாக வலுவான பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தை நிறுவுவதிலும், பொருளாதார வளர்ச்சியையும் சமூக நீதியையும் உறுதி செய்யவும், மக்களிடமே நிர்வாகத்தை எடுத்துச் செல்லும் பணியிலும், புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட 73 வது அரசியல் திருத்தச் சட்டம் ஒரு மைல் கல்லும் பெரிய சாதனையும் ஆகும். அந்த அரசியல் திருத்தத்தின் கட்டமைப்பிற்கு இணங்க, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் என்ற புதிய சட்டம் மாநில சட்டசபையில் இயற்றப்பட்டது. இச்சட்டம் கீழ்க்கண்ட பல புதிய சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது:- (1) சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என்ற மூன்று அடுக்கு முறையை உருவாக்கி ஆளுதல் குறித்து இச்சட்டத்தில் விரிவாக வரையறுக்கப்படுதல். (2) தங்கள் சுய வளர்ச்சிக்காக மக்கள் அதிகமாகப் பங்கேற்பதற்கு ஏதுவாக கிராம சபைகளை நிறுவுதல். (3) ஊராட்சி அமைப்புகளுக்கு மாவட்ட திட்டக் குழுக்களை நிறுவுதல். (4) ஊராட்சி அமைப்புகளே மேற்கொள்வதற்கென பணிகளை ஒதுக்குவதை உறுதி செய்தல். (5) மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளின் எல்லாப் பதவிகளிலும் மூன்றில் ஒரு பங்கை சுழற்சி முறையில் பெண்களுக்கு ஒதுக்கிடுதல். (6) மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளிலும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை, சுழற்சி முறையில் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கென இவ்வின மக்கள் தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப இட ஒதுக்கீடுகள் செய்தல். (7) ஊராட்சி அமைப்புகளில் வார்டு பிரிவினைகள் செய்ய வழிவகுத்தல் (8) ஊராட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்கள் குறித்த காலங்களில் தொடர்ச்சியாக சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்தல். (9) சட்டமன்ற உறுப்பினர்களும் மாவட்ட ஊராட்சியில் பதவி வழி உறுப்பினர்களாக வாக்களிக்கும் உரிமை இன்றி பங்கு பெறச் செய்தல். (10) கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையிலிருந்து பேரூராட்சிகள் நீக்கப்பெறல்.

2. 74 வது அரசியல் சட்டத் திருத்தத்தில் கீழ்மட்டத்திலிருந்து ஜனநாயகத்தை உருவாக்கவும், உள்ளாட்சி நிர்வாகத்தைப் பரவலாக்கவும் இதற்கு முன்பிருந்த 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நக்ராட்சிகள் சட்டம், 1919 ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சிச் சட்டம், 1971 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர் மாநகராட்சிச் சட்டம் ஆகியன கீழ்க்கண்டவைகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன:- (1) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் அமைப்புகளில் வார்டு பிரிவினைகளை செய்தல் (2) எல்லா பதவிகளிலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கை சுயற்சி முறையில் ஒதுக்கீடு செய்தல் (3) எல்லா பதவிகளிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கென அந்தந்த விகிதாச்சாரத்திற்கேற்ப சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்தல் (4) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொடர்ச்சியாக குறித்த காலங்களில் சுதந்திரமாகவும்,நியாயமாகவும் தேர்தல்கள் நடத்துதல். (5) சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் கூட்டங்களில் பதவி வழி உறுப்பினர்களாக வாக்களிக்கும் உரிமை இன்றி பங்குபெறச் செய்தல் (6) கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையிலிருந்து பேரூராட்சிகளை நீக்கி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின்கீழ் கொணர்தல். கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்திலுள்ள பிரிவுகள் புதிதாகத் தோற்றுவிக்கபட்ட திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கும் பொருந்தும்.



### ஊராட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்கள்

3. 'சாதாரண தேர்தல்கள்' என்பது ஒரு உறுப்பினருக்கென நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுறும் போது அதனை நிரப்ப நடத்தப்படும் தேர்தலைக் குறிக்கும். அதாவது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் பொதுத் தேர்தல்களை இது குறிக்கும். 'தற்செயல் தேர்தல்கள்' என்பது கீழ்க்கண்ட காரணங்களின் விளைவாக நடத்தப்படும் இடைத் தேர்தல்களைக் குறிக்கும்:- ஒரு உறுப்பினர் மரணம்; உறுப்பினர் தனது பதவியை ராஜினாமா செய்தல்; தேர்தல் மனுவினால் உறுப்பினர் பதவியை இழத்தல்; சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மைகளுக்கு ஆளாகி பதவியை இழத்தல்.

### தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்:

4. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தலையும், ஊராட்சி அமைப்புகளுக்கு அனைத்து தேர்தல்கள் நடத்துவதையும் மேற்பார்வையிட, இயக்க, கட்டுப்படுத்த அரசியலமைப்பின் 243 K பிரிவின்படியும் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டதின் 239 பிரிவின்படியும் தோற்றுவிக்கப்பட்டதாகும். எனவே உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து தேர்தல்களையும் நடத்தும் பொறுப்பு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையரின் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்கு பதவி வகிக்கலாம். மொத்தத்தில் ஆறு ஆண்டுகளுக்கு

[1999 மே 13

மிகைப்படாமல் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் மேற்கொண்டு இருமுறை தொடர்ந்து மறு நியமனம் செய்யப்படலாம். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டவர் தனது பதவிக் காலத்தில் 62 வயதை நிறைவுசெய்தால் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

5. தமிழ்நாடு முதல் மாநிலத் தேர்தல் ஆணையர் அரசால் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் நியமிக்கப்பட்டார். தற்போது உள்ள மாநிலத் தேர்தல் ஆணையர் 15-7-1998 இல் பொறுப்பேற்றார். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையருக்கு உதவியாக ஒரு முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அதிகாரி செயலராகவும் மற்றும் ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், வருவாய், நிதி, சட்டம் முதலிய துறைகளிலிருந்து நியமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளும் இதர பணியாளர்களும் செயல் புரிகின்றனர். தேவையான உள் அமைப்புகளுடனும் போதிய வசதிகளுடனும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகம் நிறுவப்பட்டு தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

***1996 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்.***

6. ஊராட்சி அமைப்புகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு தமிழ்நாட்டுக்கு நெடுங்காலமாக கிடைக்காமலே இருந்தது. தற்போதைய அரசு 1996 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்துவதென்று கொள்கை முடிவைத் திட்டவட்டமாக அறிவித்தது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், அரசு முடிவின் முக்கியத்துவத்தை உணர்ந்து தேர்தல்களை நடத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் விரைந்து மேற்கொண்டது. உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துவதென்பது எளிதான செயலல்ல. அது பிரம்மாண்டமானதும் பொறுப்பு நிறைந்ததும் மட்டுமின்றி, சிக்கலானதுமான செயலாகும். சட்டம், விதிகள், அறிவுரைகள், செயல்முறைகள் யாவும் புதியன. மேலும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதென்பது இந்தியாவில் வேறெந்த மாநிலங்களும் அனுபவித்திராத ஒரு கூடுதல் சுமையாகும். சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்கள் அளவிலும் தரத்திலும் மிகப்பிரம்மாண்டமானதும், கடுமையானதுமாகும். வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை, வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை, தேர்தல் பணியாளர்கள் மற்றும் காவல் துறையினரின் எண்ணிக்கை, வாங்கப்படும் வாக்குப்பதிவு



1999 மே 13]

பொருட்களின் அளவு, வாக்களிப்போரின் எண்ணிக்கை, போட்டியின் தீவிரம் முதலியன இக்கூற்றினை நிரூபிக்கும் சான்றாகும். 273 பதவிகளுக்கெதிராக (234+39=273) கிராமப்புற உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் ஏறக்குறைய 1,16,747 பதவிகளுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டசபை மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களுக்காக அச்சிடப்படும் 273 வகையான வாக்குச் சீட்டுகளுக்குப் பதிலாக ஊராட்சி அமைப்பு தேர்தல்களில் 22,301 வகையான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டன.

7. தமிழ்நாட்டில் 12,616 சிற்றூராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும் மற்றும் 28 மாவட்ட ஊராட்சிகளும் உள்ளன. இம்மூன்று வகை அமைப்புகளிலும் உள்ள வார்டுகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| சிற்றூராட்சி வார்டுகள் .. .. | 40,714 |
| ஊராட்சி ஒன்றிய வார்டுகள் .. .. | 6,499 |
| மாவட்ட ஊராட்சி வார்டுகள் .. .. | 648 |
| மொத்தம் .. .. | **47,861** |

நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| சிற்றூராட்சி வார்டு உறுப்பினர்.. .. | 97,026 |
| சிற்றூராட்சி தலைவர்கள் .. .. | 12,616 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் .. | 6,499 |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் .. | 648 |
| மொத்தம் .. .. | **1,16,789** |

8. 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 634 பேரூராட்சிகளில் நேரிடைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் விவரம் வருமாறு:—

[1999 மே 13

## அட்டவணை 1

| நகர உள்ளாட்சி அமைப்பு | மொத்த எண்ணிக்கை | மொத்த வார்டுகள் | மொத்த வார்டு உறுப்பினர்கள்/ கவுன்சிலர்கள் | மொத்த மேயர்கள்/ தலைவர்கள் |
|---|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 6 | 474 | 474 | 6 |
| நகராட்சிகள் | 102 | 3392 | 3392 | 102 |
| பேரூராட்சிகள் | 634 | 10173 | 10173 | 634 |
| **மொத்தம்** | **742** | **14039** | **14039** | **742** |

634 பேரூராட்சிகளில் 23 பேரூராட்சிகள் 1-4-1999 முதல் ஊராட்சிகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன, இருந்தபோதிலும் அப்பகுதிகளில் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்ந்து பதவி வகிப்பார்கள்.

9. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் இரண்டு கட்டங்களில் நடைபெற்றன. முதல் கட்டத் தேர்தல்கள் 9-10-1996 அன்றும், இரண்டாம் கட்டத் தேர்தல்கள் 12-10-1996 அன்றும் நடந்தன. நேரடித் தேர்தல்கள் யாவும் 17-10-1996 அன்றுடன் முடிக்கப்பட்டது. நேரடித் தேர்தல்களை நடத்திய பின்னர் மாவட்ட ஊராட்சிகள் மற்றும் நகராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் மற்றும் சிற்றூராட்சிகளின் துணைத் தலைவர்கள் ஆகிய பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல்கள் 25-10-1996 அன்று தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தி முடிக்கப்பட்டது. இவற்றைத்தவிர 6 மாநகராட்சிகளில் துணை மேயர்களுக்கான தேர்தலும் மற்றும் இதர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் துணைத் தலைவர்களுக்கான தேர்தலும் நடத்தப்பட்டன.

10. இந்த மறைமுகத் தேர்தல்களைத் தவிர மாநகராட்சி வார்டு குழுத் தலைவர் தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், சட்டக் குழுக்கள் மற்றும் நிலைக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க மாநில தேர்தல் ஆணையம் தேர்தல் நடத்தியது. உள்ளாட்சித் தேர்தல்கள் நேர்மையிலும், சுதந்திரத்திலும் அனைத்து



1999 மே 13]

சாராரும் போற்றும் வண்ணம் நடத்தப்பெற்றன. குற்றாலம் மற்றும் பவானிசாகர் பேரூராட்சிகளில் ஜூன் 1998 இல் சாதாரணத் தேர்தல் நடைபெற்றது.

11. அக்டோபர் 1996-ல் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொதுத் தேர்தல்களுக்குப் பின்னர், அந்தந்தக் காலங்களில் ஏற்பட்ட காலியிடங்களை நிரப்புவதற்காக மூன்று இடைத் தேர்தல்கள் (டிசம்பர் 1996, ஜூன் 1997 மற்றும் டிசம்பர் 1998 ஆகிய மாதங்களில்) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது எழக்கூடிய காலியிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒவ்வொரு ஆண்டும் இரண்டு அல்லது மூன்று இடைத் தேர்தல்களை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் நடத்த வேண்டியதாக இருக்கும்.

## அட்டவணை 2

### ஊராட்சி அமைப்புகளில் இடைக் காலத் தேர்தல்கள் நடைபெற்ற அலுவலகங்களின் எண்ணிக்கை

| தேர்தல் நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் | சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | சிற்றூராட்சி தலைவர் | ஊராட்சித் ஒன்றிய வார்டு உறுப்பினர் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் 1996 | 1800 | 22 | 7 | இல்லை | 1829 |
| ஜூன் 1997 | 242 | 35 | 13 | 1 | 291 |
| நவம்பர் 1997 | 289 | 24 | 9 | 2 | 324 |
| ஜூன் 1998 | 271 | 24 | 9 | 2 | 306 |
| டிசம்பர் 1998 | 859 | 65 | 33 | இல்லை | 957 |
| **மொத்தம்** | **3461** | **170** | **71** | **5** | **3707** |

[1999 மே 13

## அட்டவணை 3

### நகராட்சி அமைப்புகளில் இடைக்கால தேர்தல்கள் நடைபெற்ற அலுவலகங்களின் எண்ணிக்கை

| தேர்தல் நடைபெற்ற காலம் | மாநகராட்சி | | நகராட்சி | | பேரூராட்சி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர் | மேயர் | உறுப்பினர் | தலைவர் | உறுப்பினர் | தலைவர் | |
| டிசம்பர் 1996 | - | - | 2 | - | 22 | - | 24 |
| ஜூன் 1997 | 3 | - | 8 | 1 | 25 | - | 37 |
| நவம்பர் 1997 | .. | - | 13 | .. | 30 | 1 | 44 |
| ஜூன் 1998 | 2 | - | 7 | - | 45 | 3 | 57 |
| டிசம்பர் 1998 | 3 | - | 11 | - | 74 | 5 | 93 |
| மொத்தம் | **8** | - | **41** | **1** | **196** | **9** | **255** |

12. காலியிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், ஒரு வருடத்தில் ஆறுமாத இடைவெளி விட்டு இடைத் தேர்தல் நடத்த வேண்டும். இந்த வருடம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடைத் தேர்தல்கள் நடத்த ரூ.20.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சி அமைப்புகளுக்கு சாதாரண மற்றும் இடைத் தேர்தல் நடத்த ஆகும் செலவீனம் நகராட்சி அமைப்புகளின் நிதியிலிருந்தே ஏற்றுக் கொள்ளப்படும். 16-3-1999 அன்று உள்ள நிலவரப்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள காலியிடங்களுக்கு நேரடித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கான அறிவிப்புகள் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் பின்னர் வெளியிடப்படும். உள்ளாட்சி அமைப்புகள் இடைத் தேர்தல் நடத்துவதற்கான காலியிடங்கள்.



1999 மே 13]

## அட்டவணை-4

16-3-1999 அன்று நிலவரப்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகள் —இடைத்தேர்தலுக்கான காலியிடங்கள்

| வகை | ஊராட்சி வார்டு உறுப்பினர் | கிராம ஊராட்சித் தலைவர் | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் |
|---|---|---|---|---|
| இறப்பு | 77 | 28 | 5 | 2 |
| இராஜிநாமா | 117 | 2 | 2 | 1 |
| தகுதியின்மை | 37 | 3 | 2 | - |
| 10/1996 லிருந்து வேட்பு மனு தாக்கல் செய்யப்படாதவை | 52 | 5 | - | - |
| 12/1998 இல் இருந்து வேட்பு மனு தாக்கல் செய்யப்படாதவை | - | 1 | - | - |
| மொத்தம் | **283** | **39** | **9** | **3** |

## அட்டவணை-5

16-3-1999 அன்று உள்ள நிலவரப்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இடைத் தேர்தல்

| வகை | மாநகராட்சி | | நகராட்சி | | பேரூராட்சி | |
|---|---|---|---|---|---|---|
| | மேயர் | கவுன்சிலர் | தலைவர் | கவுன்சிலர் | தலைவர் | உறுப்பினர் |
| இறப்பு | - | 3 | - | 2 | 2 | 3 |
| இராஜினாமா | - | - | - | 1 | - | 10 |
| தகுதியின்மை | - | - | - | - | - | 4 |
| வேட்புமனு 10/1996 இல் இருந்து தாக்கல் செய்யப்படாதது. | - | - | - | 1 | - | 2 |
| மொத்தம் | - | **3** | - | **4** | **2** | **19** |

13. முந்தைய ஆண்டுகள் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்த விவரங்கள் 1999-2000 ஆண்டிற்கான வரவு செலவு திட்டம்:

| கணக்குத் தலைப்பு | 1997-98 வரவு-செலவு திட்ட மதிப்பீடு | 1997-98 திருத்த மதிப்பீடு | 1998-99 வரவு-செலவு திட்ட மதிப்பீடு | 1998-99 திருத்த மதிப்பீடு | 1999-2000 வரவு-செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | | |
| 2070 ஏனைய நிருவாகப் பணிகள்-மாநிலத் தேர்தல் ஆணையம் | 61.08 | 67.41 | 82.09 | 85.78 | 82.81 |
| 2515.00 ஊராட்சித் தேர்தல்கள் | 17.00 | 21.71 | 21.69 | 24.32 | 20.82 |
| 2515.00 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் | 19.00 | 19.00 | 13.00 | 1.00 | - |

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.